
வாக்மேன்:
அபாயம் வருகிறது!
KALKI 28-10-84
ரூ.1-50
கல்கி

அங்கமெங்கும் புத்தம் புதிய உணர்வு பெற்றிடுக.



பட்டுப் புடவைகளிலே புத்தம்புதிய
கற்பனைகள். சென்னையில் மிகப்பெரிய
புடவை ஷோரூம்களில் ஒன்றிலிருந்து
தேர்ந்தெடுப்பதற்கு 30000 பட்டுப்
புடவைகள். காஞ்சிபுரம் ஆரணி,
தர்மாவரம், போச்சம்பள்ளி, சேலம்,
கும்பகோணம், பெங்களூர் மற்றும்
பனாரஸிலிருந்து வந்த மிகச்சிறந்த
ரகங்கள். ஒவ்வொரு புடவையும்
உங்களுக்குப் புத்தம்புதிய உணர்
வைத் தந்திடும். புத்தம்புதிய
உணர்வு பெற்றிட வாருங்கள்.

லக்ஷ்மி சில்க் ஹவுஸ்

மிகப் பெரிய பட்டுப்
புடவை ஷோரூம்

பனகல் பார்க் எதிரில், (மாடியில்)
சென்னை-600 017

உரிமை: லக்ஷ்மி ஸில்க் ஹவுஸ்
(மதராஸ்) அண்ட் கம்பெனி

நீங்கள் முற்றிலும் மாறிவிடுவீர்கள்!

Market Movers LSH/347/TM

புரியாத புதிர்

அந்தரத்தில் அதிசயக்கல்!



சேத்ஷிவபூர் — பூனுவிலிருந்து 16மைல் தொலைவில் உள்ள இந்த ஊரில் ஃவாமராலி தர்வேஷ் என்ற இஸ்லாமிய மகானின் தர்கா இருக்கிறது. கொஞ்சம் பாழடைந் தது. இங்கே ஒரு அதிசயக் கல் இருக்கிறது. பூனுவுக்கு வரும் டூரிஸ்ட்டுகள் சேத்ஷிவபூர் போய் இந்த அதிசயக் கல்லைப் பார்க்கத் தவறுவதில்லை.

அப்படி என்ன அதிசயம் என்கிறீர்களா? சொல்கிறேன்.

சுமார் ஒரு அடி விட்டத்தில வெள்ளை யாய் ஒரு கல். பார்க்க ரொம்பக் கனமான தாய்த் தோன்றவில்லை. நான் ஒருவனுகவே தூக்க முயன்றேன்... ஊகூம். சில அங்கு லங்களுக்கு மேல் தூக்க முடியவில்லை. என் போட்டோகிராபர் நண்பரும் உதவிக்கு வந்தார். ஆனுலும் பலனில்லை. சுமார் 300 பவுண்டு எடை இருக்குமென கணக்குப் போட்டோம். இன்னும் மூனு நாலு பேர் உதவிக்கு வந்தும் தூக்க முடியவில்லை.

தர்காவின் ஒரு மூலையில்— தலையில் குல் லாய், வெள்ளை தாடி மைனஸ் மீசை சகிதம் அமர்ந்திருந்த ஒரு வயதான மனிதர், ''அதைத் தூக்க மொத்தம் பதினெரு பேர் வேண்டும். பெண்கள் கூடாது'' என்றார். ''சரியாகப் பதினெரு பேர்; கல்லை லேசாய் தொட்டுக் கொண்டு, மகானின் பெயரை ஃவாமராலி தர்வே ஏ...ஏ...ஏ...ஷ்...' என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு உரக்கச் சொன்னல், வெள்ளைக்கல் தானுக உயரே எழும்பும்.''

அதன்படியே எல்லோரும் செய்தோம். பலனில்லை. 'ஏன் ஏன்' என்று கேட்டுக் கொண்டோம்.,'எத்தனை பேர் இருக்கிறீர்கள் பாருங்கள்'' என்றார் அந்தப் பெரியவர். பார்த்ததில் 12 பேர்!


ஒருவர் விலகிக் கொள்ள, நாங்கள் 11 பேரும், மகானின் பெயரை, மூச்சுப் பிடித்துக் கொண்டு சொல்ல, ஆச்சர்யம்! கல் தரையிலிருந்து எம்பி... தலைக்குமேலே உயர்ந்தது. மூச்சு முட்டி, பெயரைச் சொல் லுவதை நான் நிறுத்தியதும், கல் தானுகக் கீழே தொப்பென்று விழுந்து, என்னை நோக்கிச் சில அங்குலங்கள் உருண்டுவந்தது.

இதையே பலமுறை முயன்று பார்த் தோம். 8 பேர், 10 பேர், 13 பேர், 15 பேர் என்று கல்லைத் தொட்டு மகானின் பெயரை ஜபித்தோம். கல் உயரவில்லை. சரியாய் 11 பேர் கல்லைத் தொட்டு, அது மேல் எழும்பியதும், திடீரென மகானின் பெயரைச் சொல்வதை நிறுத்திஞேம். கல் உடனே தொப்பென்று விழுந்துவிட்டது. அந்த மகானின் பெயரை விட்டு, வேறு பல பெயர்களைச் சொன்னபோது கல் உயர வில்லை!


ஒன்று நிச்சயம். கல் உயர்ந்த போதும் நாங்கள் ஒருவராவது, கல்லைத் தூக்கவில்லை. சும்மா கல்லைத் தொட்டுக் கொண்டிருந் தோம், அவ்வளவுதான்.

—தாஜ்குருப் ஹோட்டல்களின் ஹவுஸ் ஜர்னலில் வெளியான கட்டுரை.

தமிழ் வடிவம்: எஸ். சந்திரமௌலி



யோகாசன மகிமை



மத்ஸ்யாஸனம்

சர்வாங்காஸனம் அதிகமான பலனைத் தர வேண்டுமானால், அதைத் தொடர்ந்து மத்ஸ்யாஸனம் செய்வது நல்லது.

இந்த வாரம் மத்ஸ்யாஸனம் பற்றிய விளக்கத்துக்கு உதவுவது **சிவானந்த யோகாலயா, சென்னை-20.**

மத்ஸ்யா என்றால் மீன் என்று பொருள். இந்த நிலை மீன் வடிவத்தை நினைவூட்டுவதால் இப்பெயர்.

பயிற்சி முறை-

பத்மாஸன நிலையில் அமர வேண்டும். அப்படியே தரை விரிப்பின் மீது மெல்லப் பின்புறமாகச் சாய்ந்து படுக்க வேண்டும். கரங்கள் இரண்டையும் உடலருகே ஊன்றி உடம்பை மேல் நோக்கி வளைக்க வேண்டும். இதன்மூலம் முதுகுக்கும், தரைக்கும் இடைவெளி விட்டு அதே நேரத்தில் உச்சந்தலைப் பகுதி தரை விரிப்பின் மீது நன்கு ஊன்றுவது போல் தலையை உயர்த்த வேண்டும். பின்னர் உடலருகே ஊன்றிய கரங்களை நீக்கி, கால் கட்டை விரல்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். இதே நிலையில் இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் இருக்கலாம். சர்வாங்காசனம் இருந்த நேரத்தில் கால்வாசியாவது இந்நிலையில் இருப்பது நல்லது.

நிதானமாகக் கைகளையும், தலையையும் ஆசன நிலையிலிருந்து விடுவிக்க வேண்டும். அப்படியே பத்மாஸன நிலைக்கு வரவேண்டும். அப்புறம் சாதாரண நிலைக்குத் திரும்பலாம்.

பத்மாஸனத்தில் சரியாக அமர முடியாதவர்களானால் கூட முழங்கால்களை மடக்கிக் கொண்டு இந்த ஆஸனத்தைப் பழகலாம்.

பலன்கள்:

தலையைக் குனிந்து கொண்டே நீண்ட நேரம் படிப்பதால் எழுதுவதால் கழுத்துக்கு ஏற்படும் உபாதைகள் இந்த ஆசனம் செய்வோருக்கு இராது. சர்வாங்காசனம் செய்யும் போது கழுத்துப் பகுதி சுருங்குகிறது. அதற்கு மாற்றாக இந்த ஆசனம் அமைகிறது. கழுத்துப் பகுதியில் இயற்கையான முறையில் 'மஸாஜ்' செய்கிற மாதிரியான பலனை மத்ஸ்யாஸனம் தருகிறது. கழுத்து, தோள்பட்டைகளின் நெருக்கமான எலும்புப் பகுதிகளுக்கு இதம் ஏற்படுத்துகிறது.

தைராய்டு, பாரா தைராய்டு பகுதிகளுக்கு ஏராளமான இரத்தத்தைப் பாய்ச்ச மத்ஸ்யாஸனம் உதவுகிறது. இதனால் இந்த நாளமில்லாச் சுரப்பிகள் நன்கு இயங்க உடல் ஆரோக்கியமாய் இருக்கும். இடுப்பு, முதுகு, கழுத்துப் பகுதிகள் உறுதியடைகின்றன. இயல்பாகவும் சிரமம் இல்லாமலும் மூச்சு விட முடிகிறது. நுரையீரல் பகுதிக்கு நல்ல காற்றையும் பிராணவாயுவையும் ஏராளமாக அனுப்ப முடிகிறது. நுரையீரலின் ஒவ்வொரு நுண் பகுதியும் பிராணவாயு பெற்று அதனால் இரத்தம் தூய்மை அடைகிறது. குரல் வளையும், மூச்சுக் குழாய்ப் பகுதியும் நன்றாக விரிந்து கொடுப்பதால் ஆழமாகச் சுவாசிக்க முடிகிறது. இதனால் இருமல், காசம், ஆஸ்த்துமா இவை கிட்டத்தில் நெருங்காது. கழுத்து, முதுகெலும்புத் தொடரின் மேல்பாகங்களில் உள்ள நரம்புகளுக்கு அதிகமான இரத்தம் பாய்ந்து, அவற்றுக்கு ஊட்டமளிக்கிறது.

மூளைப் பகுதியைச் சேர்ந்த சுரப்பிகளுக்கு அதிக அளவில் நன்மை உண்டாகிறது. மலச்சிக்கல் போன்ற கோளாறுகளிலிருந்து விடுபடலாம். இப்படி மத்ஸ்யாஸனம் தருகிற நன்மைகள் ஏராளம்! ஏராளம்!

கட்டுரை அமைப்பு: **சுப்ரபாலன்**

படத்தில் மத்ஸ்யாஸனம் செய்பவர்: **ஏ. அசோக் குமார்** படம்: **தாமு**



கரமான அரசாங்கங்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் ஆட்சிகள் கூட, பெரு முதலாளிகளிடமிருந்து கிடைக்கும் பணத்தைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து தெரியவில்லையா? பணபலம் அல்லது ஊழல், சட்டசபை ஆட்சிமுறைகளின் போக்குகளை வளைத்து ஒடித்துத் தங்களுக்குச் சாதகமாகத் திருப்பிக் கொள்கின்றன. எழுபது கோடி மக்களின் ஓட்டுரிமை, இப்படி பணக்காரர்களின் காலடிக்குக் கொண்டு செல்ல ஹைஜாக் செய்யப்படுகிறது. இந்த லட்சணத்தில், ஜனநாயகம் என்று என்ன பெருமை அடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது? பணக்காரர்களால், பணக்காரர்களுக்கு மட்டுமே நடத்தப்படும் ஆட்சி' என்று மரியாதையாய் ஒப்புக் கொண்டு விடலாம்!

6. நாட்டின் முன்னேற்றத்துக்கான வழி முறைகள் என்ன என்று உங்களுக்குத் தோன்றுகிறது?

சிக்கலான கேள்வி.

எனக்குத் தெரிந்ததெல்லாம், இந்தியாவின் கஷ்டங்களுக்கு இந்திய மக்களிடமே தான் விடிவும் இருக்கிறது என்பதுதான். இந்த லட்சக்கணக்கான மக்கள், தங்கள் உரிமைகளை, கடமைகளை உணர வேண்டும்; லட்சியங்களை அடைய மனப்பூர்வமாகச் செயல்பட வேண்டும். தங்கள் நலனுக்கும் மேம்பாட்டுக்கும் தேவையானதைப் பெற, தங்களை ஆள்வோரிடம் வலியுறுத்திச் சொல்லும் தகைமை பெற்றிருக்க வேண்டும். இன்றைக்குப் பல கட்சிகள் ஒருவருக்கு எதிராக இன்னொருவர் என்று பொருதிக் கொள்வதால் ஒன்றுபட்டுச் செயலாற்ற இவர்களால் முடிவதில்லை. தவறு செய்யும் அரசாங்கங்களைத் தட்டிக் கேட்கவும் வழியில்லை.

முன்னேற்றத்தை நோக்கி நடைபோடத் தேவையான சில அடிப்படையான குறிக்கோள்களை மனத்தில் கொண்டு, ஒன்றுபட்டு மக்கள் செயல்படும் முறை ஒன்றே எனக்கு வழியாகத் தோன்றுகிறது. இது எப்படி முடியும் என்று கேட்பீர்கள். பெருவாரியான மக்களின் நலனை மனத்தில் கொண்டு, அரசியல் சாசனச் சட்டம் சொல்லும் உயர்ந்த நோக்கங்களை அவர்கள் உணர வகை செய்ய வேண்டும். இந்த லட்சியங்களுக்குப் பாடுபடுவோம் என்று நேர்மையோடு ஒப்புக் கொண்டு செயல்படும் அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே ஓட்டுப் போடுவது என்று தீர்மானிக்க வேண்டும்.

மக்கள், சட்டத்துறை, அரசு நிர்வாகத் துறை, நீதித்துறை இவற்றில் தீவிரமாகப் பற்றுக்கொண்டு, பங்கு கொள்ளவும் வேண்டும். இதைத்தான் 'மக்கள் பங்கு கொள்ளும் ஜனநாயக ஆட்சிமுறை' எனலாம். இப்போது நமக்கு இந்த வசதி இல்லை. எம். எல். ஏக்களையும், எம். பிக்களையும் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த பிறகு, நாம் குரலே கொடுக்க முடியவில்லையே; கொடுத்தாலும் அவர்களுக்கு எங்கே கேட்கப் போகிறது? நம்மால் அவர்களிடம்

பிரார்த்தனை



மனிதாபிமானம் என்பது மதம், தேசம், இனம், மொழி, கட்சி போன்ற சகல வேற்றுமைகளையும் கடந்து செயல்படுவது. முதல்வர் எம்.ஜி. ஆர். மீது பொழியப்படும் அன்பும், அக்கறையும் கவலையும் கரிசனமும் நம் இதயங்களை நெகிழ்விக்கின்றன.

வீரராக நடித்தார்; வீரராக வாழ்ந்தார்; வீரராக இன்றும் ஆரோக்கியம் பெறப் போராடுகிறார்.

அவர் பூரண குணமடைய அமெரிக்க டாக்டர்களும் அவர்களாலேயே வியந்து போற்றப்படும் நமது டாக்டர்களும் கண்ணும் கருத்துமாக இரவு பகல் கண் விழித்துப் பிரயத்தனப்படுகிறார்கள். பாரதப் பிரதமர் பறந்து வந்து பார்த்ததோடு அரசாங்கத்தின் வசம் உள்ள அத்தனை வசதிகளும் முதல்வருக்குக் கிடைக்கும் என்று அறிவித்துள்ளார். இந்திய விமானப்படையின் விமானம் ஒன்று ஓர் ஆஸ்பத்திரியாகவே மாறி, எம். ஜி. ஆரை அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு அழைத்துச் செல்லச் சித்தமாய் இருக்கிறது.

கோடிக்கணக்கான இந்திய மக்களின் மனமுருகிய பிரார்த்தனையுடன் நாமும் சேர்ந்திணைந்து பொன்மனச் செம்மலின் புரட்சித் தலைவரின் ஆரோக்கியத்தைத் தமிழகத்துக்கு மீட்டுத் தருமாறு இறைவனை இறைஞ்சுகிறோம்.



வி. ஆர். கிருஷ்ணய்யர் பேட்டி

சென்ற இதழ் தொடர்ச்சி

5. பணபலம், அதிகார பலம், முறைகேடான வழிகள் இவற்றிலிருந்து நமது தேர்தல்களை மீட்க, உங்கள் யோசனைகள் என்ன?

இன்றைய நிலையில், தேர்தல்களெல்லாம் பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே சாத்தியமானது. எழுபது கோடிப் பேர் உள்ள நாடு; பெரிய ஜனநாயக நாடு என்றெல்லாம் பெருமை அடித்துக் கொண்டாலும், ஐம்பது சதவீத மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். நமது ஜனநாயகம் பழங்கால ரோமானிய ஆடம்பர முறையில் தான் நடைபெறுகிறது என்பது நமக்கே தெரியும். ராஜகுமாரர்கள் மட்டுமே — மகாராஜாக்களைச் சொல்லவில்லை — அவர்களைப் போலப் பணவசதி படைத்தவர்கள் மட்டுமே தேர்தலில் இன்று குதிக்க முடியும். இன்றைக்கு ஒரு சட்டசபைத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்றால் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவிட வேண்டும். பாராளுமன்றத் தேர்தல் என்றால் இன்னும் பல மடங்கு ஆகிறது. இப்படி பணத்தைக் கொட்டிச் செலவு செய்து மக்கள் பிரதிநிதியாக வர எப்படி ஓர் ஏழைக் குடிமகனால் முடியும்?

தேர்தல் செலவு குறித்து இப்போது இருக்கும் கட்டுப்பாடுகள் எல்லாம் காகிதத்தில் தான் இருக்கிறது. யாரும் கண்டு கொள்வது கிடையாது! தேர்தலில் யார் அதிகமாகச் செலவழிக்கிறார்கள் என்று தேர்தல் கமிஷனே தானாக விசாரித்தறிய, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் இடமே இல்லை. எனவே இத்தனைதான் செலவழித்தோம் என்று கொடுக்கப்படும் கணக்குகள் எல்லாம் வெறுமனே குப்பை மாதிரி தேர்தல் கமிஷனில் குவிக்கப்படுகிறது. அவ்வளவு தான். யார் கவனிக்கிறார்கள்! யாருக்கு இவற்றைக் குடைந்து பார்க்க அதிகாரம் இருக்கிறது?

இப்படி வெறு சாதாரணமான, பயனில்லாத சட்டதிட்டக் கட்டுப்பாடுகள் இருந்து தான் என்ன பயன்? உண்மையில் இவற்றை எல்லாம் ஒரு தேர்தல் பெட்டிஷனில்தான் விசாரிக்க முடியும். அப்படியென்றால் ஒவ்வொருவரின் தேர்தலுமே வழக்கு விசாரணைக்கு வர வேண்டும். ஆனால் அப்படி நடப்பதில்லையே! இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், தோற்றுப் போனவர், அனுமதிக்கப்பட்டதை விட, அதிகமாகச் செலவழித்திருப்பார். ஆனால் அவர் தோற்று விட்டதினாலேயே வழக்கின் பிடியிலிருந்து தப்பிப் போய் விடுகிறார் - இல்லையா?

இப்போதிருக்கிற சூழ்நிலையில், குறைந்த அளவு பணம் செலவழித்துத்தான் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற சட்டத்தை யதார்த்தமாகக் கொள்ளவே முடியாது. சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தேர்தல் வழக்கு விசாரணைக்கு வந்தது. ஒரு கட்சி தனது கட்சிக்காரரின் தேர்தலுக்காக ஏராளமாகச் செலவழித்திருந்தால், அவர் தனிப்பட்ட முறையில் செலவழித்த பணமும் கட்சி அவருக்காகச் செலவழித்த பணமும் சேர்த்துக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, தேர்தல் கமிஷன் நிர்ணயித்த தொகையை அது தாண்டிப் போனால், அவர் தேர்தல் செல்லாது என்று தீர்ப்பளித்தது. பாராளுமன்றம் இதைச் சந்தோஷமாக வரவேற்றிருக்க வேண்டாமோ? நமது நாட்டில் நிஜமாகவே ஜனநாயகக் கோட்பாடு மதிக்கப்படுகிறது என்று பெருமைப்பட்டிருக்க வேண்டாமோ? அதை விட்டு விட்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தையே திருத்தி அமைத்தார்கள்! பாராளுமன்றமே இந்த விஷயத்தில் பணபலத்தை எத்தனை தூரம் நம்புகிறது, மதிக்கிறது என்று பாருங்கள்! தேர்தலில் பணம் அதிகம் செலவாவதைக் கட்டுப்படுத்துவதில் துளியாவது அக்கறை இருந்தால் இப்படிச் செய்திருப்பார்களா?

பணபலம் தான் ஊழலுக்கு வழிவகை செய்கிறது. கட்சிகள் இப்படி ஏராளமான தொகைகளைச் செலவழித்தால், அதைக் கொடுக்க ஏராளமான தொழிலதிபர்களும் இருக்கவே இருக்கிறார்களே! அதை அவர்கள் தங்கள் வியாபாரப் பெருக்கத்துக்கு அரசியலில் செய்யும் முதலீடாகத் தான் கருதுகிறார்கள். அதனால் தான் நம் அரசியல்வாதிகள் இந்தப் பெரு முதலாளிகளும், நிலச்சுவான்தார்களும் தட்டும் தாளத்துக்கு ஏற்ப நடனமாடுகிறார்கள். முடிவு என்ன? அடி முதல் நுனி வரை ஊழல் மயமான ஓர் ஆட்சி முறையைத்தான் பார்க்க நேரிடுகிறது. பாராளுமன்றம், மத்திய அரசு என்றில்லாமல், எல்லா மாநிலங்களுக்கும் இது பொருந்தும். நிலையிருக்கட்டும், புரட்சி

இது பணக்காரர்களால் பணக்காரர்களுக்கு நடத்தப்படும் ஆட்சி

ஒன்றும் சொல்லவும் முடியாது. அவர்கள் தான்தோன்றித்தனமாகச் செயல்படுவதையும், பல லட்சங்களுக்குத் தங்கள் ஆன்மாவையே விலை பேசுவதையும், பண முதலைகளுடன் அவர்கள் குலாவுவதையும், லஞ்சத்தில் மூழ்கியிருப்பதையும், அப்பாவி போல் கையைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கத் தான் முடியும்! மக்களால் தான் இந்த நிலைமையைத் திருத்த முடியும். மக்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டி, அரசியலில் பங்கேற்க உறுதியாய் நிற்கட்டும். உண்மையில் இப்போது நிலைமை என்ன? உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களைத்தானே பார்க்கிறோம்?

சென்னை மாநகராட்சியை எடுத்துக் கொள்ளுங்கள். மாநகராட்சியா இருக்கிறது? ஒரு அதிகாரி கட்டளை பிறப்பித்துக் கொண்டிருக்கிறார் என்பதைத் தவிர வேறென்ன? சென்னை மக்களுக்கு ஏன் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது? ஏன், ஹைதராபாத்–செகந்தராபாத்தில் என்ன நடக்கிறது? இதே கதை தான். இப்படியே போனால் நாடு முழுதுக்கும் சேர்த்து ஒரே ஒரு அதிபர் போதுமே. எல்லாவற்றையும் நடத்திச் செல்ல? எதற்கு சட்டசபை, பாராளுமன்றம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்க வேண்டும்? பம்பாய் மாநகராட்சியிலும் ஓர் ஆணையர்தான் ஆட்சி செய்கிறார். கல்கத்தாவில் என்ன வாழ்ந்தது? சோஷலிஸம், மார்க்ஸியம் என்று வாயளவில் பேசிக் கொண்டு, கல்கத்தாவிலுள்ள லட்சக்கணக்கான நடைபாதை வாசிகள், சேரி வாசிகள், ரிக்ஷாக்காரர்கள் எல்லோர் மீதும் துளி நம்பிக்கை கூட இல்லாமலிருந்தால் எப்படி.

நமது பஞ்சாயத்துக்கள்? சரியான பேச்சுத் திண்ணைகள். முனிசிபல் சபைகளும் பேச்சுத் திண்ணைகள்தாம். என்ன உரிமை இருக்கிறதுஇவர்களுக்கு? ஸீரோ. அதிகாரம் பரவலாக்கப்பட்டு, காந்திய முறைகொண்டு வரப் போகிறீர்களா? இல்லையா? சோவியத் யூனியனில், பிரமிட் போல மேலிருந்து கீழ் வரை அதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நமது ஜனநாயக சோஷலிஸத்தில் இல்லை! மக்களே தீவிர பங்கு கொண்டு பணியாற்ற வழி செய்யப்பட வேண்டாமா? அப்படியிருந்தால் கோஷ்டி மனப்பான்மை மக்களிடம் வந்து விடாதா என்று கேட்கிறீர்களா? ஏன், இப்போது உங்கள் சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும் மட்டும் இந்த கோஷ்டிகள் இல்லையா என்ன? நம்முடைய அமைச்சர்கள் எல்லோருமே ஊழல் பேர்வழிகளாயிருந்தும் இவர்களைச் சகித்துக் கொள்ளவில்லையா? வார்த்தைகளால் அல்ல, நாற்காலிகளாலேயே அடித்துக் கொள்கிறார்கள். சகித்துக் கொள்ளத்தானே செய்கிறோம்? ஆட்சியில் எல்லோரும் பங்கு கொள்ளும் வகையில் ஏன் அதிகாரம் பரவலாக்கப்படக் கூடாது? அதைத்தான் உண்மையான ஜனநாயகம் என்பேன். இதை மக்கள் உணரச் செய்ய வேண்டும். அவர்களைப் பயன்படுத்த வேண்டும். புதிய பொறுப்புக்களுக்கு அவர்களைத் தயார் செய்ய வேண்டும். யாராவது இதைச் செய்ய முன் வருவார்களா? இதுதான் இன்றைய சவால்!

7. வெளிநாட்டிலுள்ள இந்தியர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர்களை நாடு எந்த வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம்?

வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டுக்குப் பணம் அனுப்பி உதவுவது என்பது அவர்கள் ஆற்ற வேண்டிய முக்கிய பணிகளில் ஒன்று என்பது வெளிப்படை. வெளிநாட்டில் வசிக்கிற எல்லா இந்தியர்களும் வசதியாக இருக்கிறார்கள். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் உள்ள எல்லா இந்தியர்களுமே. மத்தியக் கிழக்கு நாடுகளில் வசிப்பவர்களும் தான். அவர்கள் நிறையவே பணம் அனுப்பலாம் நம் நாட்டின் அபிவிருத்திக்கு. ஆனால் நடைமுறையில் நடப்பது என்ன?

நான் கேரளத்தைச் சேர்ந்தவன். அதனால் என்னால் நிதர்சனமாகப் பார்த்ததைச் சொல்ல முடியும். கோடிக் கணக்கான ரூபாய்கள் அந்நியச் செலாவணியாக அந்த மாநிலம் பெறுகிறது. அயல் நாட்டிலிருந்து அம்மாநிலத்துக்குக் கேரளத்தவர் அனுப்பும் செல்வம் வாயிலாக. ஆனால் அதை உருப்படியாக உபயோகிக்காமல், தனிப்பட்ட அலங்கார மாளிகைகளாக, கட்டிடங்களாக உருவாக்கிப் பாழடிக்கிறார்கள். இதனால்கொத்தனார்களுக்கும், தச்சுப் பணியாளர்களுக்கும் சம்பளம் உச்சாணிக் கொம்பில் போய் உட்கார்ந்து கொண்டு விட்டது. சாதாரண மக்கள் கறிகாய் வாங்கக்கூட முடியாத விலைவாசி உயர்வு. கார்கள் ஏராளமாக வாங்கிக் குவிக்கப்படுகின்றன. பம்பாயை விட அதிக கார்கள் கேரளாவில் இருக்கின்றன, தெரியுமா? இப்படி கார்களிலும், கட்டிடங்களிலும் பணம் விரயமாகிறது. வழக்கறிஞர்களுக்கு அமோக வரும்படி. ஆமாம், பெர்மிட்டுகள் கிடைக்க அவர்கள் கோர்ட், கோர்ட்டாக ஏறி இறங்க, இவர்களும் பணத்தைத் தண்ணீராகச் செலவழிக்கிறார்கள். இந்த அரசு அலுவலகங்களில் உள்ளவர்கள், குறிப்பாகப் போக்குரவத்துத் துறையில், இந்த கல்ஃப் துபாய்க்காரர்களிடமிருந்து நல்ல பணம் பண்ணுகிறார்கள்.

வெளிநாட்டிலிருக்கும் இந்தியர்களை இங்கே நம் நாட்டைச் செழிப்பாக்க அழைக்க வேண்டும். அதற்கான வசதிகளை உருவாக்க வேண்டும். டாக்டர் சந்திரசேகர் டாக்டர் இ. ஸி. ஜி. சுதர்சன் போன்ற மேதைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய திறமையை, தொழில் நுணுக்கத் திறனை இங்கே கொண்டு வர வேண்டும். இங்கே அவர்களைப் போன்ற திறமைசாலிகள் வந்து இருந்து தொழில் நடத்த, நமது கொள்கைகள் இடம் கொடுப்பதில்லை. அவர்களுக்குப் போதுமான ஊக்கமும் அளிப்பதில்லை. இங்கே இருக்கிற சூழ்நிலை அவர்களுக்கு வெறுப்பூட்டுகிறது. இங்கிருந்து போனால் போதும் என்று இருக்கிறது. அங்கே நிலைமை இப்படிப் புழுங்கிச் சாகும்

படி இல்லை. சுதந்திரம் இருக்கிறது. திறமைக்கு மதிப்பு இருக்கிறது. அவர்களுக்கு இங்கேயும் அதே மாதிரி வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். தேசப் பற்று மிக்க பல பேர் அப்போது இங்கே வந்து, புதிய பாரதம் படைப்பார்கள்.

8. ஏராளமான வழக்குகள் தேங்கிக் கிடப்பதால், இரவு நீதிமன்றங்களும் நடத்தலாம் என்று ஒரு பத்திரிகைத் தலையங்கம் காண்பித்ததே? இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

இரவு கோர்ட்டுகள் மட்டும் போதுமா என்ன? இது ஓர் யோசனை, அவ்வளவுதான். பகலில் வழக்குகளை விசாரிப்பது போல் இரவிலும் செய்து, தேங்கியிருக்கும் வழக்குகளைக் குறைக்கலாம் என்பது தான் இதன் நோக்கம். நம்முடைய நீதித் துறையையே கழுவித் துடைத்துச் செப்பனிட வேண்டும். நமக்குத் தேவை இரவு நீதி மன்றமும், மாலை நீதி மன்றமும் மட்டுமல்ல. நமக்குத் தேவை — மக்கள் நீதிமன்றங்கள். வழக்குகளைத் தீர்த்து வைத்து முடிவைத் தரும் அமைப்புகள். சமரசம் செய்து வைக்கும் டிரைப்யூனல்கள். பஞ்சாயத்து நீதிமன்றங்கள்... இப்படிச் செய்தால் நீதிமன்றங்களின் தற்போதைய பளுவை வெகுவாகக் குறைக்க முடியும்.

நீதி மன்றங்களில் இருக்கும் வழக்குகள் பைசல் ஆக்கப்பட வேண்டும். வழக்குகளைத் தீர்த்து வைப்பதில், இழுத்தடிக்காமல் முடிவு காண்பதில், ஆர்வம் இருக்கவேண்டும். ஆபிரகாம் லிங்கன் சொன்னார்: 'தயவு செய்து முயன்று, வழக்கை முடிக்கப் பாருங்கள்' காந்திஜியும் 'நான் எப்போதுமே வழக்கை முடித்து வைக்கத்தான் பார்ப்பேன். ஆப்பிரிக்காவில் இருந்தபோது எனக்கு நிறைய வழக்குகள் இருந்தன. இழுக்கடிக்காமல் தீர்த்து வைத்ததில் என் வருமானம் ஒன்றும் குறைந்து போய் விடவில்லை' என்றார். பல வழக்குகளை வழக்கறிஞர்கள் கோர்ட்டுக்கு வெளியிலேயே சமரசமாக முடித்து வைக்க முயலலாம்.

அரசு வழக்கறிஞர்களும், அட்வகேட் ஜெனரல்களும் அரசாங்க வழக்குகளை இழுத்தடித்துக் கொண்டிராமல் முடிக்க முயல வேண்டும் என்று 1957–ல் அகில இந்தியச் சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் ஒரு தீர்மானம் போடப்பட்டது. அந்தத் தீர்மானம் இன்னமும் ஒரு வேண்டுகோளாகவே இருக்கிறதேயொழிய ஒரு அரசாங்கம் கூட இந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்த முன்வரவில்லை. அகில இந்திய சட்ட அமைச்சர்கள் மாநாட்டின் அதிகார பூர்வமான தீர்மானத்துக்கே இந்தக் கதி என்றால், இந்நாட்டின் நீதித்துறையில் மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

பேட்டி: சாருகேசி

புகைப்படம்: யோகா

மூலக் கனல்

● திருவின் முறைகேடான வாழ்க்கை, நேர்மையற்ற சம்பாத்தியம், அவரது வாழ்க்கை எந்த சுயமையில் ஆரம்பித்ததோ அதே மூலக்கனலில் அவிந்து போனதை கதாசிரியர் நா. பா. உயிரோட்டமாகச் சிருஷ்டித்திருக்கிறார்.
மேலக்கிருஷ்ணன்புதூர் பிரபாலிங்கேஷ்.

● 'திருமலை' கதாபாத்திரம் மூலம், தம் 'மூலக்கனல்' தொடரில் சிறந்ததோர் படைப்பைத் தந்த கதாசிரியருக்கும் பாராட்டுக்கள்!
குளச்சல் முகம்மது இப்ராஹிம்.

● அரசியல்வாதி(கள்) பாவத்தின் வித்து, ஊழலின் வாசற்படி, நேர்மையின் மறுபக்கம், போன்ற சொற்களை குருதியிலே கோத்து, புரையோடிப் போனதாக்கி, போலியான வாழ்வே எப்போதும் வாழ்ந்து வேதனையோடு போராடித்தான் தெய்வபதம் அடைவான் என்பதை திரு. வின் மூலம் உண்மையாக்கினார் ஆசிரியர்!
முருங்கப்பேட்டை. பொன். ராஜேந்திரன்.

● சமுதாய சீர்திருத்த நோக்கமுள்ள நாவல்களை எழுதுவதில் என்றும் திறம் படைத்த திரு. நா. பார்த்தசாரதி அவர்களின் ''மூலக்கனல்'' அவரது பணிக்கு இதுவும் ஒரு சான்றாகும்.
மாதேமங்கலம், வெ. கோபால்.

● சில இடங்களில் சலிப்பைத் தருவனவாக இருந்தாலும், நா. பா. வின் தொடர் மிக அருமையான ஒன்று. நா. பாவின் கதைக்கு உயிர்ச்சித்திரங்களைத் தந்தார் உமாபதி.
தருமபுரி–1, க. நஞ்சுண்டேசுவரன்.

● குறிஞ்சிமலராய் —பொன் விலங்காய் இல்லாது போனாலும் குறை சொல்லிடும்வண்ணம் இல்லாமல் சமுதாயச் சண்டையேட்டத்தில் முழு நிறைவான ஒரு நாவலாய் 'மூலக்கனல்' இருந்தது என்பது சத்தியம்.
பெங்களூர்–21, ப. மூர்த்தி

● அரசியலில் நேர்மையாகப் புகுந்தவர்கள் கூட அரசியல் சாக்கடையில் மூழ்கடிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை மூலக்கனலில் கோடிட்டுக் காட்டியிருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.
சென்னை–57, இரணியல் ''சனு.''

● ''முழுமையாய்க் கடைந்தெடுக்கப்பட்ட ஒரு அரசியல்வாதியின் வாழ்க்கைச் சரித்திரத்தை அறிஞரும் ஆரம்ப காலத்தில் எப்படி உருவாக்கப்படுகிறான் என்பது முதல்கடைசி கால கட்டத்தில் அவனின் முடிவு எப்படிப் பட்டது என்பது வரை ''திரு'' என்கின்ற கதா பாத்திரம் மூலம் சித்திரித்துக்காட்டியுள்ளார் நா. பா.
ஊனூர் வெளிக்கடை டி. ராஜன்.

வாசகர் கருத்து






அமெரிக்க ஆயுத உதவி
பாக்


மக்கள் பிரார்த்தனை
மருத்துவர்களின் திறமை

கல்கி

1984 அக்டோபர் 28
மலர் : 43 இதழ் : 13
ரக்தாக்ஷி ஐப்பசி 12



ஹிட்லர் சாயலில் ஹின்டன்

இந்தியாவும் பாகிஸ்தானும் நட்புறவை வளர்த்துக்கொண்டு அமைதியாக வாழ்வதன் மூலம்தான் இரு நாடுகளுமே தங்கள் சிந்தனையையும் செல்வத்தையும் முயற்சியையும் முன்னேற்றத் திட்டங்களில் ஈடுபடுத்தி வளம் பெற முடியும். இதைப் பாகிஸ்தான் அதிபர் ஜியா புரிந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அப்படியே அவர் புரிந்து கொள்ள முயற்சி செய்தாலும் அமெரிக்கா குறுக்கே புகுந்து குழப்பம் விளைகிறது.

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதர் ஹின்டன், 'பாகிஸ்தான் மீது இந்தியா படையெடுத்தால் அமெரிக்கா பாகிஸ்தானுக்குப் பக்கபலமாய் இருந்து உதவும்' என்று இந்தியாவை எச்சரிப்பது போல் பேசவேண்டிய அவசியம் இப்போது என்ன நேர்ந்தது? இந்தியாவுக்குப் பாகிஸ்தானைத் தாக்குகிற நோக்கம் லவலேசமும் இல்லை என்னும்போது 'அத்தைக்கு மீசை முளைத்தால்' என்ற ரீதியில் தூதர் ஹின்டன் எதற்காகப் பேசவேண்டும்? இது போன்ற குறும்புத்தனங்கள் விபரீத விளைவுகளுக்கு வித்தாகிற வாய்ப்புண்டு. ஹின்டனின் பொறுப்பற்ற பேச்சை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

'ஆப்கானிஸ்தானத்தை ருஷ்யா ஆக்கிரமித்திருப்பதால் அங்கிருந்து பாகிஸ்தானுக்கு ஆபத்து வரலாம்; அதைத் தடுக்கவே பாகிஸ்தானுக்கு ஆயுத சப்ளை செய்கிறோம்' என்றும் 'இந்தியா மீது இந்த யுத்த தளவாடங்கள் பயன்படுத்தப்பட மாட்டா' என்றும் நேற்றுவரை கூறி வந்தது அமெரிக்கா. இப்போது ஒரு குட்டிக்கரணம் அடித்து, இந்தியாவையே எச்சரிப்பது போல் பேசியுள்ளார் ஹின்டன். இப்படி அசந்தர்ப்பமாகவும் அனாவசியமாகவும் ஆபத்தான விதத்திலும் பேசியுள்ள ''எல் ஸால்வடார் புகழ்'' ஹின்டனை அமெரிக்க ஜனாதிபதி உடனடியாகத் திரும்ப அழைத்துக்கொண்டு, அவரிடத்தில் அமைதி விரும்பும் வேறொருவரை பாகிஸ்தானுக்குத் தூதராக அனுப்ப வேண்டும். இவ்வாறு கூறுவதற்கு ஹின்டனின் விபரீதப் போக்கினால் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய எழுபது கோடி இந்தியருக்கு உரிமை உண்டு. தவிர, மேன்மேலும் பாகிஸ்தானில் மிக நவீன யுத்த தளவாடங்களை அமெரிக்கா குவித்துக் கொண்டே போவதால் இந்தியாவின் பொருளாதாரமும் முன்னேற்றமும் சீர்குலைவதை எடுத்துக் காட்டி 'இதற்கு முடிவு கட்டுங்கள்' என்று அமெரிக்க அதிபரிடம் கண்டிப்புடன் கூறவும் பாரத மக்களுக்கு உரிமை உண்டு.

அணுகுண்டுத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு பெறவும் எதிர்த் தாக்குதல் நடத்தவும் பாகிஸ்தான் அமெரிக்காவை உதவி கோரியது என்றும் அதற்கு அமெரிக்கா சம்மதித்துள்ளது என்றும் பாகிஸ்தானின் முன்னணிப் பத்திரிகையில் வெளியான செய்தி ஆதாரமற்றது என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் வாஷிங்டனில் கூறியுள்ளார். அதே நேரத்தில் அமெரிக்க வெளிவிவகார முன்னாள் துணை அமைச்சர் இஸ்லாமாபாத்தில் பேசுகையில், ''பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ள அமெரிக்க யுத்த தளவாடங்கள் இந்தியாவைத் தாக்கப் பயன்படுத்தப்படாது'' என்றும் ''ஆனால் தற்காப்புக்குப் பயனாகும்'' என்றும் கூறியுள்ளார். அதாவது, பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களல்லாத இதர ஆயுதங்களால் இந்தியாவைத் தாக்கிவிட்டால், இந்தியா எதிர் நடவடிக்கை எடுக்கும் போது ''தற்காப்பு'' என்ற பெயரில் அமெரிக்கத் தளவாடங்களைப் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்த உரிமை பெற்றதாகி விடுகிறது! வார்த்தை ஜாலங்களால் நம்மை ஏமாற்றிவிடலாம் என்று எண்ணுகிறது அமெரிக்கா. பாகிஸ்தானோ இந்திய எல்லையில் போர்ப் பயிற்சிகளைத் தீவிரமாக்கி வருகிறது. இந்நிலையில் புதுதில்லியின் பொறுப்பு மிக அதிகமாகிறது. எச்சரிக்கையாக இருக்கும் போதே தேவையற்ற உராய்வைத் தவிர்த்து விடவும் மிகுந்த ராஜதந்திரத்துடன் நடந்து கொள்ளவேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



தாரா



எம். ஆர். ஆர். ரகு

சென்னையில் செட்டில்!

பாம்குரோவ் ஒட்டல். அறை எண் 101 ஒரு மழை நேரத்து மாலைப் பொழுதில் அறைக் கதவைத் தட்டி, உள்ளே நுழைந்தேன்.

தரிசனம் தந்தவர், தாரா. 'இங்கேயும் ஒரு கங்கை' நாயகி. இண்டியன் எக்ஸ்பிரஸை நேராகப் பிடித்து, நிஜமாகவே படித்துக் கொண்டிருந்தார்.

தாராவிற்குத் தாய்மொழி கன்னடம். படித்த மொழி ஆங்கிலம்-தமிழில் அரிச்சுவடி கூடத்தெரியாது-படத்தில்வசனங்களை கன்னடத்தில் எழுதி வைத்துக் கொண்டுதான் பேசுகிறாராம்.

நடிகர் முரளியின் அப்பா சித்தலிங்கையா மூலம்தான் தாரா சினிமாவிற்கு வந்தார் என்பது ஏற்கெனவே தெரிந்த செய்தி. அனுராதா என்ற இயற்பெயர் கொண்ட தாராவிற்கு வீட்டிலே செல்லப் பெயர் அனு!

வாடகைக்கு வீடு வைத்திருக்கிறவர்கள் உடனடியாகத்தாராவை அணுகலாம். பெங்களூரிலிருந்து அவ்வப்போது வந்து படப்பிடிப்பில் கலந்து கொள்கிற தாரா, சென்னையிலேயே செட்டில் ஆகிவிட ஒரு வீடு பார்த்துக் கொண்டிருக்கிறார்.

குதிரையில் ஓட்டம்!

தி. நகரில் உள்ள எஸ். ஆர். டப்பிங் தியேட்டர். தன்னந்தனியாக ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார், சந்திரசேகர்.

இங்கேயும் ஒரு கங்கைக்குப் பிறகு மீண்டும் மறுவாழ்வு பெற்று நான்கைந்து படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

''நேற்றுதான் 'புயல் கடந்த பூமி' ஷூட்டிங் அவுட்டோரிலிருந்து திரும்பினேன்'' என்றார்.

சந்திரசேகர் அதுநாள் வரை குதிரையின் நிழலில் கூட நின்றது கிடையாதாம். ஆனால் புயல் கடந்த பூமிக்காக இவரை ஒரு குதிரையில் ஏற்றி, அதி வேகமாக ஓட்டி வரும்படி சொல்லிவிட்டார்களாம். ''எனக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. பயத்தை வெளியே சொன்னால் வெட்கக்கேடு என்பதால், கடவுள் மேல் பாரத்தைப் போட்டு விட்டுக் குதிரையில் ஏறினேன். நல்ல வேளை, அசம்பாவிதமாக ஒன்றும் ஆகிவிடவில்லை'' என்றார்.

சினிமாவிற்கு அறிமுகமான புதிதில் முத்துராமனோடும் நாகேஷுடனும் சேர்ந்து நடிக்க வேண்டும் என்று தீராத ஆவல் கொண்டிருந்தாராம். அது நடந்ததோ இல்லையோ, ஆனால் அவர்கள் மகன்கள் (கார்த்திக், ஆனந்த் பாபு) இருவரோடும் இணைந்து நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. அவர்கள் தந்தையுடன் நடிப்பது போன்ற பிரமையுடனே அவர்களுடன் நடித்தேன்'' என்றார்.

பாக்யராஜின் பயம்





○ எம். ஏ. காஜா

சின்ன வீடு செட் அப்!

விஜயா கார்டன். ஒரு வீடு மாதிரியான செட்டில் பாக்யராஜ் தாவணிக்கனவுகளைத் தெலுங்கில் ரீமேக் செய்து கொண்டிருந்தார்.

ஷாட் எந்த மாதிரி இருக்க வேண்டும் என்று காமிரா மேனுக்குச் சொல்லிவிட்டு, ஓரமாக ஒதுங்கி ஒரு 'தம்' அடித்துக் கொண்டிருந்தவரை அணுகினேன்.

பேசிக்கொண்டிருக்கையில், ''ஒருகாமெடியனாக என் இமேஜை பில்ட் அப் பண்ணியது தப்பாப் போச்சு. எங்காவது பொது நிகழ்ச்சிகளுக்குப் போய், பேச எழுந்தால் கூட ஜனங்க 'ஓ'ன்னு சிரிக்கிறாங்க. இதனாலதுக்க வீட்டுக்குப் போறதுக்குக் கூட பயமா இருக்கு. இந்த இமேஜ் தான் என் தாவணிக் கனவுகள் தோல்விக்குக் காரணம். என்கிட்டேயிருந்து ஒரு சீரியஸ் சப்ஜக்டை ஜனங்க எதிர்பார்க்கலே. அத நல்லாப் புரிஞ்சுக்கிட்டேன். அடுத்தது 'சின்னவீடு'னு ஒரு சப்ஜக்ட் 'செட் அப்' பண்ணி இருக்கேன். பாருங்க. முந்தானை முடிச்சை விட ஒரு படி மே...ல இருக்கும்!'' என்று கூறிக் கண்ணடித்தார். மீண்டும் 'சாயகல்பம் கதை'யா!

ரோட்டிலே செலக்ஷன்!

சாலி கிராமத்தில் உள்ள அவரது வீட்டில் சந்தித்தேன். டைரக்டர் சாஜானை. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்போது ஒரு படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

''ஒரு படத்தின் வெற்றிக்குக் கதைதான் முக்கிய காரணம். தற்போதைய படங்கள் டெக்னிகல் சைடில் எந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறதோ அந்த அளவிற்கு கதை, நடிப்பு போன்ற அம்சங்களில் பலம் இழந்து வருகிறது. அதனால்தான் பிற மொழிப் படங்களை ரீமேக் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சைலே...ன்ஸ்

முன்பெல்லாம் நடிப்பில் ஆர்வமுள்ளவர்கள் இருந்தார்கள். உழைத்து முன்னுக்கு வந்தார்கள். எனவே அவர்களைக் கொண்டு சிறப்பாக எதையும் செய்ய முடிந்தது. இப்போது பஸ் ஸ்டாப்பிலும் ஜவுளிக்கடையிலும் நடிகர்களைத் தேர்வு செய்வது, விளம்பரத்திற்கு உதவுமே தவிர உருப்படியாக இருக்காது. சினிமாவையே நம்பி இருக்கும் எத்தனையோ பேருக்கு வாய்ப்பு தரலாமே!'' என்றார்.

வாஸ்தவமான பேச்சு!

ஆளுக்கொரு பாட்டு!

'வைரமுத்துவிற்கும் இளையராஜாவிற்கும் என்னவோ கசமுசா. அதனால் இப்போது இளையராஜா, மு. மேத்தாவிற்குச் சிபாரிசு செய்யத் தொடங்கி உள்ளார்' என்றொரு பேச்சு பலமாக அடிபட்டது.

விசாரித்தபோது, விஷயம் அப்படிஅல்ல என்றார்கள்.

இளையராஜா எல்லா பாடல்களையும் வைரமுத்துவையே எழுதச் சொல்கிறார் என்றொரு குற்றச்சாட்டு தயாரிப்பாளர்கள் மத்தியில் நிலவி வருவதை மாற்றுவதற்காக-- 'இனி ஒரு படத்தில் ஐந்து பாடல்கள் இருந்தால், ஆளுக்கொரு பாடலாக ஐந்து, கவிஞர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்' என்று முடிவு செய்திருக்கிறாராம் இளையராஜா.

இனிமேல்தான் இருக்கு!

எம். ஆர். ஆர். ரகு, வி. கே. ராமசாமியின் வளர்ப்பு மகன். ஜோடிப்புறா படத்தில் வில்லனாக அறிமுகமானவர். இப்போது கொலுசு படத்தில் வில்லனாக நடிக்கிறாராம்.

நடிக்க வருவதற்கு முன் டைரக்டர் வெள்ளைச்சாமியிடம் அசிஸ்டெண்ட்டாகப் பணியாற்றினாராம். பிறகு வி. கே. ஆர். தயாரித்த 'பம்பாய் மெயில்' 'ருத்ர தாண்டவம்' போன்ற படங்களுக்கு அசிஸ்டெண்ட் டைரக்டராகப் பணிபுரிந்திருக்கிறார்.

''ஒரு டைரக்டராக வர வேண்டும் என்று ஆசைப்பட்டு சினிமாவில் நுழைந்தேன். கடைசியில் நடிகனாக ஆரம்பமாகிவிட்டது. கொலுசு படம் வந்தால், எனக்கு இன்னும் வாய்ப்புக்கள் கிடைக்கும் என்று நம்புகிறேன்!'' என்றார், ரகு.

—சம்பத்ஜி

படங்கள்: ஸ்பைடர்மேன்

○ சந்திரசேகர்



மோகினி திருக்கோலம்

சென்ற வாரம்

தன்னைத் துரத்தி வந்தவர்களிடமிருந்து தப்ப வெகுவேகமாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டு வந்தான் அந்த இளைஞன். கணவாயைத் தாண்டிய பின் அவர்களைக் காணவில்லை. ஆசுவாசமானான். ஆனால் சோமந்தல நகரம் வெறிச்சோடிக் கிடந்தது. ஒரு மனிதப் பூண்டு, ஒரு ஜந்து காணப்படவில்லை. ''இங்கே யாருமில்லையா?'' என்று உரக்கக் கூவினான். ஒரு பழைமையான கதவு திறக்க வயோதிகர் எட்டிப் பார்த்தார்.

அவரை விசாரிக்கவும் பெந்தராக்கள் வந்திருப்பதால் எல்லாரும் ஊரை விட்டு ஓடிவிட்டதாகச் சொன்னார். பெந்தராக்கள் மராட்டிய வீரர்கள் என்றும் அவர்கள் கொள்ளையடிப்பார்கள், சூறையாடுவார்கள், பெண்கள் அகப்பட்டால் மானபங்கம் செய்வார்கள் என்றும் தெரிந்து கொண்டான்.

'தொடை நடுங்கிகள்! கொள்ளையர் வந்தால் சண்டை போட வேண்டியதுதானே. ஓடுவானேன்!' என்று எண்ணியபடி மேலே சென்றான், வீரன். ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்க, அவ்வீட்டின் விலாப்பக்க வழியாகப் பின்புறம் சென்றான். பின்கட்டில் நிழலான முற்றத்தில் ஒரு வயதான பெண் பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்தாள். அதனிடையேயும் ''நீங்க போங்க. இங்கே இருந்தா ஆபத்து! என்னை நான் கவனிச்சுக்கறேன்'' என்று சொன்னாள். 'யாரைப் பார்த்து இப்படி மரியாதை கொடுத்துப் பேசுகிறாள்?' என்று கவனித்தான் வாலிபன். அவள் ஓர் இளம்பெண் என்று கண்டு ஆச்சரியமடைந்தான். அவளும் இவனைப் பார்க்க அவள் விழிகள் பெரிதாயின. வியப்பா? திகைப்பா? பயமா? புரியவில்லை.

அந்தச் சமயம் 'தபதப' என்று ஓசைகள் கேட்க, கர்ப்பிணி, ''வந்துட்டாங்க. சீக்கிரம்! சீக்கிரம்!'' என்று துரிதப்படுத்த, அந்த இளம்பெண் பின்புறம் நோக்கி ஓடினாள்.



2

கையில் விழுந்த பதக்கம்!

அந்தப் பெண்ணின் கருவிழிகள் சஞ்சல ரேகையுடன் அவனை நோக்கின.

பயம் கொள்கிறாளா?

அபயம் கேட்கிறாளா?

ஏதோ அவசர ஆபத்து! அவர்களது பரபரப்பு அதைத்தான் காட்டுகிறது.

சற்று முகத்தை வேறு திசையாகத் திருப்பி, அவர்களைப் பாராமல்,

''அம்மணிகளே! ஊரெல்லாம் யாருமில்லையே! துணையில்லாமல் இருக்கிறீர்களே? உதவி ஏதாவது வேண்டுமா?'' என்றான். குரலில் விசுவாசம் வைக்கும்படி பூரண நைச்சியத்தைக் காட்டினான்.

சத்தம் கேட்டதுதான் தாமதம்! சுருக்கென்று அந்தப் பெண்மணி ஆடையைச் சரி செய்தாள்.

சற்று மிரட்சியுடன் அவனைப் பார்த்தாள்

''எதுவும் வேண்டாம்!'' என்று பாதி ஆத்திரத்தில் கூறினாள்.



ஸ்ரீவேணுகோபாலன்

அதேநேரம் அந்த இளம் பெண் தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள். ஏதோ ஒரு கேள்வி அதில் இருப்பது போல் பட்டது. அல்லது அவனை எடை போடுகிறாளா?

அவன் போகுமுன், அந்தக் கர்ப்பிணிப் பெண்மணி, ''சித்து நீங்க போங்க, நீங்க போங்க'' என்று அவசரப்படுத்தினாள்.

சித்து திரும்பினான். ''ஜாக்கிரதையா இருப்பீங்களா அக்கா!'' என்றான்.

''கவலைப் படாதீங்க! கடவுள் இருக்கிறார்'' என்றாள் பெண்மணி.

சித்து கண்ணை விழித்தான்.

இன்னும் ஒரு முறை 'நீ நல்லவனா? கெட்டவனா?' என்ற முறையில் அவனைப் பார்த்தான்.

பிறகு கதவைத் திறந்து புறக்கடையில் மறைந்தான்.

அவன் போன மறுவிநாடி, தடக் தடக் என்று குளம்பொலி கேட்க, அந்தப் பெண் குதிரையில் போகிறாள் என்பது தெளிவாயிற்று.

''நான் போய்த் தெருவிலே நிற்கிறேம்மா, வேண்டுமானால் குரல் கொடு'' என்று கூறி, அவளிடம் மறுமொழி எதிர்பாராமல், தெருவுக்கு வந்தான் அவன்.

அதற்குள் அரவம் வலுவாகி விட்டது. கிழக்கே பார்த்தான். கிமுகிமு என்று ஒரு தூசிப் புகை கிளர்ந்து கொண்டிருந்தது. சில விநாடிகளில் குதிரைவீரர்கள் அதிலிருந்து உற்பத்தியாகிக் கொண்டிருந்தார்கள்.

அட்டகாசமான இரைச்சலில் தெரு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

'யார் இவர்கள்? கிழவர் கூறிய மராட்டியர்களா?' என்று நினைத்தான் அவன்.

குதிரை வீரர்கள் சீக்கிரம் தெருவை அடைந்தார்கள். சிரமமோடு குதிரைகளை இழுத்து நிறுத்தி வியாபகமாக நின்றார்கள்.

அவர்கள் ஏதோ இரைவது கேட்டது. அடுத்து பல பேர் இறங்கி, வீட்டுக் கதவு

கனைப் போய் உடைப்பது கேட்டது. உள்ளே போன சிலர் சில மூட்டைகளை வெளிக் கொணர்வதும் தெரிந்தது.

பல்லை இறுக்கினான் அவன்.

'பகல் கொள்ளையா?' என்று வாய் முணு முணுத்தது.

கை வாளைப் பற்றியது.

குதிரை வீரர்கள் முன்னேறி முன்னால் வந்து கொண்டிருந்தார்கள்.

ஒருவன் அந்த இளைஞனைப் பார்த்து விட்டான். 'ஹேய்' என்று கத்திக் குதிரையைச் செலுத்தி அவனிடம் வந்தான்.

''நீ யார்?'' என்றான் மிரட்டலோடு.

''நான் ஒரு ஆள்!'' என்றான் இளைஞன். ''இந்த வீட்டுக்குக் காவல்!''

''காவலா? நீயா?'' கடகடப்பாகச் சிரித்தான் அவன்.

''ஏன் சிரிப்பு?'' என்றான் இளைஞன்.

''நீ ஒரு சோனி! நீயா இந்த வீட்டைக் காவல் காக்கிறாய்?''

இளைஞனுக்குக் கோபம் மூட்டியது.

''சோனியா? என் வாள் சோனி இல்லை'' என்று சொல்லி, மூர்க்கமான அந்த வாளை உருவினான். இழுத்த போதே காற்று முனகியது. பகல் வெளிச்சத்தில் அதன் நுனிகள் சீறிக் கொண்டு மின்னின.

குதிரை வீரன் அவனைக் கடுமையாகப் பார்த்தான்.

சிறிது பூனைத்தனம் கலந்த கண்! நீண்ட குறுகலான புருவம். கன்ன எலும்புகள் முண்டித் தெரிந்தன. கடுகடு என்று அதனால் ஒரு தோற்றம்.

குதிரையை மெல்லிதாக உந்தினான்.

அடுத்த விநாடி அது இளைஞனை நோக்கிப் பாய, விஷ் என்று ஒரு சத்தம்.

இளைஞன் வாள் இமைப்பதற்குள் எகிறியது.

அடுத்து மராட்டியன் கால் காற்றில் ஏறி, தொபீர் என்று இளைஞன் மார்பில் உதைத்தது.

இளைஞன் சுருண்டு விழுந்தான்.

அவமான உணர்ச்சி தாளவில்லை.

அவசர அவசரமாக எழுந்தான். தலைக்குள் பொறி பறந்தது.

தனது முஷ்டியை இறுக்கினான்! ''டாய்!'' என்ற வீரச் செருமலுடன் சீறினான். ஒரு பாறை விழுவது போல் குதிரை வீரன் மீது சாய்ந்தான்.

குதிரை தள்ளாடி விழுந்தது.

வீரன் பாய்க் குட்டிக் கரணமிட்டான்.

அவன் எழுவதற்குள், அவனைப் பார்த்த சில வீரர்கள் ஓடி வந்தார்கள்.

இளைஞன் ஒரு தகிப்பான ஹுங்காரம் உதிர்த்தான்.

வருகிறவர்களை ஒரு உதாசீன எதிர்வோடு பார்த்தான். ''கொள்ளைக்கார நாய்களா! வாருங்கள் பார்ப்போம்!'' என்று கத்தினான்.

வீரர்களுக்குச் சூடு ஏறி இருக்கவேண்டும்.

''டேய் பிடை!'' என்று ஒருவன் கத்த, எல்லோரும் அவனை நோக்கிப் பாய்ந்தார்கள்.

அதன் பிறகு தொடர்ந்து ஓசைகள் தான் கேட்டன.

இளைஞன் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

சக்கர வட்டமாக அவனைச் சுழற்றிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மீண்டும் தங்கள் குதிரைகள் மீது ஏறிய போது,

இளைஞனது தொய்ந்து போன உடல் புழுதியில் கிடந்தது.

அந்தகாரங்கள் அடுக்கடுக்காக வந்தன.

அங்கங்கே சில வெளிச்ச மழுப்பல்கள் வந்து கண்களைக் குத்தின.

எங்கேயோ சூன்ய வெளியில் நெடுந்தூரம் பிரயாணம் செய்வது போல் இருந்தது.

பிறகு சட்டென்று எங்கேயோ மோதி நிற்பது போல் இருந்தது.

கண்ணை விழித்தான்.

கரியதான கூரை மேலே தெரிந்தது. மூங்கில் விட்டங்கள் ஆதார எலும்புகளாக நீண்டிருந்தன. ஒரு பழைய ஓலைக்கட்டை அதன் மேல் தொய்ந்து உட்கார்ந்திருந்தது.

திடுக்கிட்டுப் பார்வையைத் திருப்பினான்.

ஐம்பது வயது மதிக்கத் தகுந்த பெரியவர் ஒருவர் வாசல் முகப்பில் ஒரு களகைச் சோதித்துக் கொண்டிருந்தார்.

'ஐயா' என்று குரல் கொடுக்க, அது ஒரு மழுங்கல் ஓசையாகக் கேட்டது.

பெரியவர் திரும்பிப் பார்த்தார்.

களகை வைத்து விட்டு எழுந்து வந்தார்.

சிறிது வழுக்கைத் தலை அவருக்கு! ஆனால் வெட்டு மீசை! எடுப்பான நாசி! இறுகி வஜ்ஜிரமாகிப் போன முகம்.

எழுவதற்கு முயன்றான்.

இப்போது தான் உடம்பின் உபாதை தெரிந்தது. அங்கங்கே நெருப்புக்கள் பூத்தன. சில இடங்கள் நிரந்தரமாகக் காந்தின. அத்தனையும் மெதுவாக ஒன்று சேர்ந்து கொண்டே வர, அவன் தேகம் முழுவதும் வலிமயமானதை உணர்ந்தான்.

பெரியவர் அடுப்பங்கரைக்குச் சென்று பானையில் வெதுவெதுத்துக் கொண்டிருந்த பானகத்தைக் கொண்டு வந்தார்.

''தம்பி! ஏலம், கிராம்பு, கற்பூரம், மிளகுத்தூள் போட்ட சர்க்கரைப் பானம் இது! சாப்பிடு! வலியைக் கேட்கும், வலுவை உண்டாக்கும் இந்தா!''

என்று வெண்கலப் பாத்திரத்தை அவனிடம் கொடுத்தார்.

அவன் மெள்ள எழுந்து சாய்வாக அமர்ந்தான்.

ஒரு மடக்கு அருந்தினான். ருசித்தது. அத்தனையையும் அருந்தினான்.

''இதன் பேர் பிரபானகம் தம்பி! பீமசேனனே தயாரித்தது'' என்றார் பெரியவர் முகப் பிரகாசமோடு.

''யார்! பஞ்ச பாண்டவ பீமனா?'' என்றான் இளைஞன்.

''ஆமாம்! அவன் சமையலுக்கு ஈடு ஏது?'' என்றார் பெரியவர்.

''லேசாகப் புளிப்பு இருக்கிறதே!'' என்றான் அவன்.

''மாங்காய்ச் சாறும் சிறிது கலந்திருக்கிறது'' என்றார் அவர்.

உண்மையில் உடம்பில் ஒரு தெம்பு எழுந்தது.

''நீ எங்கிருந்து வருகிறாய்?'' என்றார் பெரியவர்.

N.S.K.

பைனான்சியர்ஸ்

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில்

ஃபிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு ரூ. 5000/- [குறைந்தது 5 வருடங்கள்] டெபாசிட்டுக்கும்

அன்பளிப்பு hmt கடிகாரம் OR VIP ஃபிரீப்கேஸ்

ஒவ்வொரு ரூ.5000/-[குறைந்தது 2 வருடங்கள்] டெபாசிட்டுக்கும்

அன்பளிப்பு – வெள்ளி குத்து விளக்கு

வருடாந்திர வட்டி விகிதங்களின் மேல்

3% கூடுதல் வட்டி

இச்சலுகை மேலும் 31.10.84 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பொன்னான வாய்ப்பை தவற விடாதீர்கள்.



மற்றும் ஒரு பொன்னான வாய்ப்பு :—

உடல் ஊனமுற்றோர், பென்ஷனர்ஸ், விதவைகள், மைனர் இவர்களுக்கு மேற்கண்டுள்ள போனஸ் வட்டியையும் தவிர 1% கூடுதல் வட்டி (அதாவது- **25%**) அளிக்கப்படுகிறது.

மாதாந்திர வட்டி விகிதங்கள்

6 மாதங்கள்	1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
15%	**16%**	**17%**	**18%**	**21%**

(Minimum deposit acceptable Rs. 1000/- multiples)

உங்களுடைய முதலீடு 48 மாதங்களில் எங்களது "கோல்டன் கேஷ் சர்டிபிகேட் திட்டத்தின்" மூலம் இருமடங்காகிறது.

முதலீடு செய்ய தொடர்புகொள்க:

பதிவு & நிர்வாக அலுவலகம்:

(தி.நகர் பேருந்து நிலையம் எதிர்புறம்) எண். 38B, பர்கிட் ரோடு

(முதல் மாடியில்) தி.நகர், சென்னை-600 017. போன்: 447135

எதிர்கால சேமிப்பிற்கு என்.எஸ்.கே.

''தென் பாண்டி!'' என்றான் அவன்.

''உன் பேர் என்ன?''

''மாறவர்மத் தேவர்!''

''இங்கே எங்கே போகிறாய்?''

''என் தந்தையாரைச் சந்திக்கப் போகிறேன்.''

''அவர் எங்கே இருக்கிறார்?''

''புதுச்சேரிக் கோட்டைக் கிடங்கில் இருக்கிறார்!''

கோட்டைக் கிடங்கு என்பது சிறை வாசம் என்று பெரியவருக்குத் தெரியும்.

''அடப்பாவமே! அவரை ஏன் அங்கே போட்டார்கள்?''

''அவர் ஒரு பாபமும் அறியாதவர். பரங்கிக்காரன் பண்ணிய அட்டூழியம் அது!''

''எத்தனை வருடமாகக் கிடங்கில் இருக்கிறார்?''

''பன்னிரண்டு வருடங்களாக!''

''அத்தனை வருடங்களா?''

''ஆமாம்! என்னைப் பார்த்தால் கூட அடையாளம் கண்டு பிடிப்பாரோ என்னவோ!''

''ஏன் போட்டார்கள்?''

''அவர் மடியில் உளவுச் சீட்டு இருந்தது.''

''உளவு பார்க்கப் போனாரா?''

''இல்லை! வியாபாரம் செய்ய! ஆனால் யாரோ உளவுச் சீட்டை அவர் வசம் கொடுத்து விட்டார்கள். என் தந்தையார் வெகுளி; அதைப் பத்திரமாக வைத்திருக்கிறார். பரங்கியர்கள் அவரைப் பிடித்த போது அது உளவுச் சீட்டு என்று தெரிந்தது.''

''அந்த உளவுச் சீட்டு யார் எழுதியது? யாருக்கு எழுதியது?''

''எதுவும் தெரியாது பெரியவரே! அவர் கிடங்கில் இருக்கிறார் என்கிற விஷயமே சில வருடங்கள் முன்னால் தான் தெரியும். இப்போது நான் அவரை மீட்கப் போகிறேன்.''

''எப்படி மீட்பாய்?''

''எல்லா ஆயத்தங்களோடு வந்திருக்கிறேன்.''

''அதற்காகத்தான் வழியில் மராட்டியர்களைச் சீண்டினாயா?''

''நான் சீண்டவில்லையே!''

''தெருவில் வந்து நின்றாயே. நான் பார்த்தேனே!''

பெரியவர் அப்படிச் சொன்னது தான் தாமதம்!

மாறவர்மனிடம் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

''ஐயா, ஐயா! அவர்கள் எங்கே?''

''யார்?'' என்றார் பெரியவர்.

''அந்தத் தெருவாசலில் நின்றனரே அந்த வீட்டுக்காரர்.''

பெரியவர் முகத்தைச் சுளித்தார்.

''வீடா அது? வெறும் பாழ் ஆயிற்றே!'' என்றார்.

''பாழா?''

''ஆமாம்! சுவர் விழுந்து கிடப்பது தெரியவில்லையா?''

''தெரியும்; ஆனால் உள்ளே ஆள் இருந்தார்களே?''

''என்ன தம்பி! தெற்கத்திச் சரக்கு எதையாவது அவிழ்க்கிறாயா? இந்த ஊரில் நான் எவ்வளவு காலமாக இருக்கிறேன், தெரியுமா?''

''இருக்கலாம், பெரியவரே, நான் சொல்வது உண்மை! பின் பகுதியில் இரண்டு பெண்கள் இருந்தார்கள்.''

இருவருக்கும் சர்ச்சை ஏற்பட, வர்மன் விவரங்களைக் கூறினான்.

பெரியவருக்குச் சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

''நான் பார்த்து வருகிறேன்!'' என்று கிளம்ப, ''நானும் வருகிறேன்'' என்றான் வர்மன்.

அவனிடம் ஒரு புது பலம் வந்திருந்தது.

அவன் தாங்கலாக நடக்க, பெரியவர் அவன் கையைப் பிடித்துக் கொள்ள, தெருவில் இறங்கினார்கள்.

தெருவைப் பார்த்ததும் பகீர் என்றது வர்மனுக்கு.

பொருட்களும், பாண்டங்களும், துணிகளும் விரயமாக அங்கே சிதறப்பட்டிருந்தன.

ஒரு நிர்மலமான தெரு இப்போது அலங்கோலமாக இருந்தது.

மனம் வெதும்பியவாறு அவன் நடந்து அந்த வீட்டைக் கண்டுபிடித்தான்.

அவனும் பெரியவரும் விளாப்பக்க இடைவெளி வழியே சென்றார்கள்.

மெல்லியதாகக் குழந்தை அழும் சத்தம் அவனைத் திடுக்கிட வைத்தது.

தட்டுத் தடுமாறிச் சுவர் ஏறி உள்ளே குதித்தான்.

அங்கே கண்ட காட்சி அவன் மனத்தை உலுக்கியது.

துணிகளுக்கு இடையே மூடிக்கிடந்தது குழந்தை.

அந்தப் பெண்மணியின் கண்கள் விறைத்த வாறு கிடந்தன.

''அம்மணி! அம்மணி!'' என்றான்.

இரைந்து கூப்பிட்டதும், கண் சற்று நகர்ந்தது. அவன் மீது அதன் பார்வை விழுந்தது! விழுந்ததும் அப்படியே நின்றது!

அவள் கை மெள்ள நகர்ந்தது. ஏதோ செய்ய யத்தனித்தாள். முடியவில்லை.

குறிப்பை உணர்ந்து அவன் அவள் கையைப் பற்றினான்.

அவள் கை மூடியிருந்தது. அதை நீட்டுவது போல் பாவனை!

அந்தக் கையின் அடியில் அவன் தனது கையை வைத்ததும், அதன் விரல்கள் தாமாகத் திறந்தன. அவனது கையில் 'தொப்' என்று ஒரு பதக்கம் விழுந்தது.

அவள் வாய் மெள்ளத் திறந்தது.

ஏதோ சொல்ல நினைத்திருப்பாள்!

ஆனால் திறந்த வாய் திறந்த படிதான்! அவள் ஆவி பிரிந்து விட்டது. குழந்தை வீல் என்று அழுதது.

(தொடரும்)



அதிக சுவையானது
அதிக முழுமையானது



**நீங்கள் பாசத்துடன்
ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின்
வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.**

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரண சக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. அதிக முழுமையான திட உணவு.

உடல் நலத்தின் உறைவிடம்—

இலவசம்! குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்: உங்களது பிரதியைப்பெற தபால் மற்றும் இதர செலவிற்கு ரூ. 1/— தபால்தலை உள் வைத்து எழுதுவீர் இம்முகவரிக்கு—தபால் பெட்டி எண் 19119, (FCM-21) பம்பாய் 400 025.

CLARION/8/GX/4/203 TAM



13

ஒரே விநாடியில் இருத்திகாவின் மனத்தில் நிறைய கேள்விகளாக எழும்பின. 'என்னைக் கொண்டு போய்ச் சென்னையில் விடுவதா...? எதற்காக...? என்னை விட்டுவிட்டு இவர் எங்கே போகப் போகிறார்...?'

எதற்கும் பதில் தெரியாதவளாக அர்ஜுனை ஒரு குழப்பமும், பயமும் கலந்த பார்வையில் ஏறிட்டுப் பார்த்ததும் அவன் கேட்டான்.

''என்ன கீர்த்தி அப்படிப் பார்க்கிறாய்...?''

''இல்லை, என்னை எதற்காக இப்போது சென்னையில் கொண்டு போய் விடப் போவதாகச் சொல்கிறீர்கள்...?''

''இங்கே இருந்தால் நிச்சயம் இந்த விஷ்ணுபிரசாத் தொல்லை கொடுப்பான் கீர்த்தி. அதிலும் நானும் இல்லாத சமயத்தில் அப்பாவையும், ராம்சிங்கையும் மட்டும் நம்பி உன்னை இந்த வீட்டில் விட்டுவிட்டுப் போக முடியுமா சொல்...? ராம்சிங் பின்னால் எங்கோ வேலையாக இருப்பான். அப்பா வயதானவர். முக்கால் வாசி நேரம் தம் அறைக்குள் முடங்கிக் கிடப்பவர். நீ சற்றுமுன் சொன்ன விஷயத்தைக் கேட்டால் விஷ்ணுபிரஸாத்தின் ஆட்கள் வீட்டுக்குள் நுழைந்து கூட உன்னைத் தூக்கிக் கொண்டு போகத் தயங்க மாட்டார்கள் என்று தோன்றுகிறது...''

சடாரென்று முகத்தில் புன்முறுவல் தோன்றக் கேட்டாள் இருத்திகா.

''அதுசரி. இந்த சீதையைத் தூக்கிக் கொண்டு போக ஆட்கள் வந்தால் ராமராகிய தாங்கள் இருக்கிறீர்களே, காப்பாற்ற...?''

''ராவணன் பர்ணசாலைக்கு வந்தபோது ராமன் மாயமானைத் துரத்திக் கொண்டு ஓடவில்லையா...? அதுபோல் நானும் இப்போது ஓட வேண்டியிருக்கிறது...''

''தாங்கள் துரத்திக் கொண்டு போகப் போகிற மாயமான் எதுவோ...?''

''நான் துரத்திக் கொண்டு போகப் போவது மாயமானே இல்லை இருத்திகா...''

''பின்...?''

திடீரென்று ஒரு பொறுப்புணர்ச்சி ஏற்பட நிதானமாகப் பேசத் துவங்கினான் அர்ஜுன்.

''அனேகமாக நான் அடுத்த வாரமே பஞ்சாப் போக வேண்டி நேரிடும் இருத்திகா...''

''பஞ்சாபா...? எதற்கு...?''

அவன் ராணுவ ரகசியங்கள் எதையும் வெளிப்படுத்தாமல் மெதுவாகச் சொன்னான்.

''பஞ்சாபின் நிலைமை பற்றி நீ தினமும் செய்தித் தாள்களில் படித்துக் கொண்டு வந்திருக்கலாம் இருத்திகா. அங்கே கிளர்ச்சியும், வன்முறைகளும் அதிகமாகிக்கொண்டே போகின்றன. காலிஸ்தான் தலைவர்களுக்கு நமக்குப் பாதகமாக இருக்கும் சில கரங்களின் உதவிகளும், ஆயுத குவிப்பும் கிடைப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இனிமேலும் அங்கு வன்முறைச் சம்பவங்கள் நடக்காமல் தடுக்க அனேகமாக ராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம். அது நாளை முடிவு செய்யப்படும். பிரதமரின் உத்தரவு கிடைத்த உடன் நாங்கள் செயலில் இறங்க வேண்டும். எந்த நிமிடமும் புறப்படத் தயாராக இருக்க வேண்டிய நிலையில் தான் இருக்கிறேன். அப்படி இருக்கிறபோது உன்னை இந்தச் சந்தர்ப்பத்தில் தனியாக இங்கே விட்டுவிட்டுப் போக என்னால் முடியுமா சொல் இருத்திகா...? மனசு இங்கேயும், உடல் அங்கேயுமாகச் செயல்பட முடியுமா? நீ பாதுகாப்பான, சௌகர்யமான இடத்தில் இருக்கிறாய் என்கிற நிம்மதியுடன் போனால் என்னால் கடமையை ஒழுங்காகச் செய்ய முடியும் இல்லையா...?''

''என்னவோ யுத்தத்திற்குப் போகிற மாதிரி பேசுகிறீர்களே, அர்ஜுன்! போனால் இரண்டு மூன்று நாட்களில் திரும்பி வந்து விட மாட்டீர்களா...?''

''சொல்ல முடியாது கீர்த்தி. எத்தனை நாளாகும் என்பதை இங்கிருந்து கணிக்க இயலாது. தேச ஒற்றுமைக்கு ஒரு பங்கம் ஏற்படுகிற போது உயிரையே கொடுத்தாவது காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு இந்தியனுடைய கடமை ஆயிற்றே! எல்லா இந்தியர்களுக்கும் இந்தக் கடமை இருக்கிறதோ, இல்லையோ, நிச்சயம் ராணுவத்தில் பணிபுரிகிற எங்களுக்கு உண்டு. அப்பாவிற்கோ, தாத்தாவிற்கோ கிடைத்த பாக்கியம் எனக்கில்லை. யுத்தத்தில் கலந்துகொள்கிற சந்தர்ப்பமில்லை. இது வெறும் கலகக்காரர்களை அடக்கிக் கிளர்ச்சியை ஒடுக்குகிற சந்தர்ப்பம்தான். சின்ன விஷயம்தான். பெரிதாய் யுத்தம் எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனாலும் ராணுவத்தினரான நாங்கள் எதையும் அலட்சியமாகக் கருதிவிட

இந்துமதி

முடியாது.. தாக்குதலுக்கில்லாவிட்டாலும், தற்காப்பிற்காவது நாங்கள் தயாராகத்தான் இருப்போம்...''

''உங்களின் உயிருக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாதே அர்ஜுன்...?''

''ச்... ச்...'' என்று மென்மையாகச் சிரித்தான் அர்ஜுன். அவளின் குழந்தைத் தனமான கேள்வியில் நெகிழ்ந்து போய் முன் நெற்றியில் முத்தமிட்டுத் தோளில் கைபோட்டு அணைத்தபடி பேசினான்....

''என் உயிர்தான் உன்னிடம் இருக்கிறதே... அதற்கு எப்படி ஆபத்து ஏற்படும் சொல்...? ம்...' ஆபத்து வரவேண்டுமானால் வெறும் இந்த உடலுக்குத்தானே வர வேண்டும்...' வந்து விட்டுப் போகட்டுமே...?''

சடாரென்று அவன் வாயைப் பொத்தினாள் இருத்திகா.

''உயிர் யாரிடம் இருக்கிறதோ, அவர்களுக்குத்தான் உடம்பும் சொந்தம். அதனால் அந்த உடம்பும் அப்படியே ஒரு கீறல் கூட விழாமல் பத்திரமாக என்னிடம் வந்து சேர்ந்தாக வேண்டும்...''

கலகலவென்று சிரித்தான் அர்ஜுன்.

''போருக்குப் போகிற கணவனை மனைவி வழியனுப்பி வைக்கிற மாதிரி பேசுகிறாயே இருத்திகா..?''


அதைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்டாள் இருத்திகா.

''அர்ஜுன் இது போரோ இல்லையோ, என்னைப் பொறுத்தவரை நான் உங்கள் மனைவி, நீங்கள் தான் என் கணவர்...''

''இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா...? ஒரு கணவனுக்கான முழு உரிமையை நான் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை, மனைவியின் முழு சலுகையையும் நீயும் இன்னும் தரவில்லையே...?''

குறும்புத்தனமாக நமுட்டுச் சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டே அவன் கேட்டதும் தலையைக் கவிழ்த்துக் கொண்டு பதில் சொன்னாள் அவள்:

''நீங்களும் இன்னும் முழுதாய் என்னை மனைவி ஸ்தானத்தில் வைக்கவில்லையே...?'' என்றவள் விநாடி நேர யோசனைக்குப் பின் சொன்னாள்: ''அர்ஜுன், என்னைச் சென்னைக்குக் கொண்டு போய் விடும் முன் நான் சாதாரண இருத்திகாவாகப் போக விரும்பவில்லை. நிச்சயமாக உங்கள் மனைவி இருத்திகாவாகத்தான் போக விரும்புகிறேன். நீங்களும் பஞ்சாப், எல்லையை என் கணவராக மிதிக்கிறீர்களே தவிர வெறும் அர்ஜுனாக இல்லை. ஸோ நாளையே நம் கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணுங்கள்....''



அருள்வாக்கு

பிரசங்கம் பண்ணின நாளில் ''ஊர்க் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்'' என்று அடிக்கடி quote பண்ணித்தான் இருக்கிறேன். அதாவது உன் குழந்தையைப் பட்டினி போட்டு விட்டாவது போய் ஊர்க் குழந்தையை ஸ்வரக்ஷணை பண்ணு என்று சொல்லித்தான் வந்திருக்கிறேன். அப்படிப் பழமொழி இருப்பதும் வாஸ்தவம். ஸத்யமாக இல்லாத ஒன்று பழமொழியாக ஆகிறதில்லை. ஆனால் இந்தப் பழமொழி ரொம்ப உசந்த நிலையில், தொண்டு மனப்பான்மையில் அப்படியே ஊறிப் போனவர்களைக் குறித்து ஏற்பட்டிருக்க வேண்டும். , அவர்கள் மனமறிந்து தன் குழந்தையைக் கதற விட்டுவிட்டு ஊர்க் குழந்தையைச் சீராட்டினார்களென்று அர்த்தமில்லை. பரோபகாரத்தில் அவர்களுக்குள்ள தீவிர உணர்ச்சி வேகம் அவர்களை இப்படி அடித்துக் கொண்டு போயிருக்கிறது. பக்தி வெறியில் ஒவ்வொரு நாயன்மாரும் லோக தர்மங்களுக்கு விரோதமாகக் கூடப் பண்ணவில்லையா? அப்படி இதுவும் ஒரு பரவச நிலையில் பண்ணுவது. அப்படி இவர்கள் தங்களுக்கு அதீதமான ஒரு சக்தியின் கீழ், ஊரிலே உள்ள அநாதைக் குழந்தைகளின் நலனுக்கே தங்களை அர்ப்பணம் பண்ணிக் கொண்ட போது ஈச்வரப் பிரசாதமாக வீட்டிலே இவர்களுடைய குழந்தைகள் கவனிப்பு இல்லாமலே (அல்லது ஈச்வரனின் கவனிப்பிலேயே) நன்றாக வளர்ந்திருக்கும். அதனால் இது ஸாதாரணமாக லோகத்திலிருக்கப் பட்டவர்களுக்கு 'எக்ஸாம்பிள்' ஆகாது.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்



''என்ன கிருத்திகா இது...? திடீரென்று எப்படிக் கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ண முடியும்...?'' அரண்டு போய் அர்ஜுன் கேட்க, புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே நிமிர்ந்தாள் அவள்.

''கல்யாணம் என்பது என்ன அர்ஜுன். ஆடம்பரமும், ஆர்ப்பாட்டமும், எதற்கு?... நான் உங்களுக்குச் சொந்தமானவள், உங்கள் கஷ்ட நஷ்டங்களில் இன்ப, துன்பங்களில் எப்போதும் பங்கு பெறுபவள் என்பதை நிரூபிக்கிற, நூறு பேர் சாட்சியுடன் நடைபெறுகிற சடங்குதானே...? அந்த சாட்சிக்கும், நிரூபணத்திற்கும் தானே அத்தனை பண விரயமும், பொருள் விரயமும் செய்யப் படுகிறது. நமக்கு அந்த நிரூபணமோ, சாட்சியோ தேவையில்லை அர்ஜுன். அது தேவை என்கிற பட்சத்தில் அப்புறம்' நீங்கள் பஞ்சாபிலிருந்து திரும்பி வந்ததும், இன்னொரு முறை எல்லோரையும் அழைத்து ஆடம்பரமாக வைத்துக் கொள்ளலாம். இப்போது நம் வீடு வரை அப்பா, ராம்சிங், ஷைலா இவர்களை முன்வைத்து நடத்திக் கொள்ளலாம். அப்பாவிடம் சொல்லுங்கள் அர்ஜுன். இதற்கு அவரைச் சம்மதிக்கச் சொல்லுங்கள். என்ன...?''

அவள் தலையை வருடி மென்மையாகச் சிரித்தான் அவன்.

''அப்பா இதற்கு ஒரு போதும் மறுப்புத் தெரிவிக்கப் போவதில்லை. கிருத்திகா. இன்ஃபாக்ட் அவர் சொல்லிக் கொண்டிருப்பதே சீக்கிரம் கல்யாணத்தை முடித்துவிட வேண்டுமென்பது தான். நான்தான் உன் படிப்பிற்கு அப்புறம்தான் இந்தப் பேச்செல்லாம் என்று தட்டிக் கழித்து வருகிறேன். இதைக் கேட்டால் அதிகம் சந்தோஷப்படுவார். உடனடியாகக் கல்யாணத்திற்கே கூட ஏற்பாடு பண்ணி விடுவார்...''


''அப்படியானால் நாளைக் காலை முதல் வேலையாக அப்பாவிடம் தெரியப்படுத்தி விடுங்கள்...''

அதைக் கேட்டு நிதானமாக யோசித்துப் பதில் சொன்னான்:

''பொறு கிருத்திகா. அவசரப்படாதே. இவ்வளவு பரபரப்போடு கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு என்ன அவசியம் வந்தது என்று யோசித்துப் பார். எனக்கு நீ உனக்கு நான் என்பதெல்லாம் நிச்சயமாகிப் போன விஷயங்கள். அந்த எண்ணத்திலிருந்து உன்னையோ, என்னையோ மாற்ற யாராலும் முடியாது. அப்படி இருக்கிற போது இவ்வளவு அவசரமாக ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளத்தான் வேண்டுமா, கீர்த்தி...? சாதாரணப் பெண் மாதிரி நீயும் நினைப்பதானால் நான் அப்பாவிடம் சொல்லி உடனே ஏற்பாடு பண்ணச் சொல்கிறேன்.''

''இல்லை... வந்து...'' —அவள் பதிலுக்குத் தடுமாற அர்ஜுன் அதே சிந்தனை மாறாத முகத்தோடு அவளைப் பார்த்தான்.

''இதைச் சொன்னால் அப்பாதான் நம்மைப் பற்றி என்ன நினைக்க மாட்டார் கீர்த்தி...? ராணுவ அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர் அவர். எதிலும் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் தேடுபவர்.



சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனால் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்

உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள கிருபணமான ஆண்டிஸெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்
ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.



OBM/2513 TAM

Johnson & Johnson

விவேகமும், நிதானமும் தவறாதவர். அப்படிப்பட்டவரிடம் 'எங்களுக்கு இப்போதே இந்த நிமிடமே கல்யாணம் பண்ணி வைத்து விடுங்கள் அப்பா' என்றால், அவருக்கு நம் மீது என்ன அபிப்பிராயம் ஏற்படும் என்பதை யோசித்துப் பார் கீர்த்தி...? நான் ஏதோ இதைத் தட்டிக் கழிப்பதாக நீ நினைத்து விடக் கூடாது. எனக்கு இதில் விருப்பமில்லை என்கிற முடிவிற்கு வந்துவிடக் கூடாது. கொஞ்சம் நிதானமாகவும், பொறுமையாகவும் சிந்தித்து விவேகமாகச் செயல்பட வேண்டும். இல்லையா?''

அவனது பேச்சு அவளையும் யோசிக்க வைத்தது. ஒரு நிமிஷம் மௌனமாக இருந்து பின் அவனை நிமிர்ந்து பார்த்த போது அந்த முகத்தில் லேசாய்த் தன் பேச்சிற்கு வெட்கப்படுவது தெரிந்தது.

''ஸாரி அர்ஜுன். நான் வெறும் உணர்ச்சி வேகத்தில் எதையோ சொல்லி விட்டேன். அறிவு பூர்வமாக யோசிக்காமல் எதையோ பேசிவிட்டேன். நீங்கள் சொல்கிற மாதிரி கல்யாணம் என்கிற சடங்கை இப்போது இவ்வளவு அவசரமாக வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லைதான். நான் குழந்தை மாதிரி எதையோ பேசிவிட்டேன். அப்பாவிடம் போனால் அவர் என்ன நினைத்துக் கொள்வார் என்று யோசிக்கத் தவறிவிட்டேன். அவருக்கு நீங்கள் ஒரே பிள்ளை. உங்கள் கல்யாணத்தைப் பெரிதாய் நடத்த நினைத்துக் கொண்டிருப்பார். அவர் அப்படி ஆசைப்படுவதில் தவறு எதுவும் இல்லை. இதையெல்லாம் உணராமல் நான் பேசியது தப்புதான்...''

''நோ, நோ...'' என்று அவளைச் சமாதானப்படுத்துகிற குரலில் ஆரம்பித்தான் அவன்.

''இதில் தப்பு ஒன்றுமில்லை கீர்த்தி. நீ இப்படியெல்லாம் அவசரப்படுகிறவள் இல்லை. வெறும் உணர்ச்சிக் குவியலாய் சிந்திக்கிறவள் இல்லை. உன்னிடமிருந்து இப்படி ஒரு வார்த்தை வர வேண்டுமானால், என் பிரிவு — அதாவது நான் பிரியப் போவதாய்ச் சொன்ன ஒரு வார்த்தை உன்னை எப்படிப் பாதித்திருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அதனால் உன் எண்ணத்தையோ, ஆசையையோ, முழுதாய்ப் புறக்கணிக்கவில்லை நான். அதைத் தப்பு என்றும் சொல்லவில்லை. உன் எண்ணம் குழந்தைத்தனமானது இல்லை கீர்த்தி. நீ சொன்ன ஒவ்வொரு சொல்லும் என் மீது உனக்கிருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறதே தவிர வேறு எதுவுமில்லை. அந்த அன்பின் தீவிரம் என்னை அழுத்தமாய்க் கட்டிப்போடுகிறது. அதனால் நானும் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறேன். நீ சொன்னதை அப்பாவிடமோ, ராம்சிங்கிடமோ தெரிவிக்காமல் நாமே ஒரு ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்...''

''என்ன • ஏற்பாடு...?''

''சொல்கிறேன். சொல்வதென்ன, நாளைக் காலையில் சொல்லாமல் தெரிந்து கொண்டு விடுவாய் பார்... இப்போது மணி ஒன்றாகப் போகிறது, கீர்த்தி. நிறைய நேரமாகி விட்டது. முழு பாரத்தையும் என்னிடம் கொட்டியாகி விட்டதல்லவா?... அதனால் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு கீர்த்தி. காலையில் எழுந்து மற்ற விவரங்களைக் கவனிக்கலாம்...''

அவளைத் தன் கட்டிலில் படுக்கவைத்துப் போர்த்தி விட்டு, சின்னக் குழந்தையைத் தட்டுகிற மாதிரி கன்னத்தில் தட்டி குட்நைட் சொல்லி அவன் அறை வாசலில் மெத்தையை விரித்துப் படுத்துக் கொண்ட போது அறை கடிகாரம் ஜப்பானிய இனிமையில் ஒன்றடித்து முடித்தது...

(தொடரும்)


எனது ஆறு வயதுச்
செல்வி பரத
நாட்டியம் நன்கு
ஆடுகிறாள்.
நாளைய உலகமே
அவளது மேடையாம்."
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள்
நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்!
கிலோ பேக்கிலும்
கிடைக்கிறது.
அதன் உள்ளே ஒரு
இலவசக்
குவளை.
வளரும் குழந்தைகள் வேறு எந்த
மால்ட்டட் பானங்களையும்விட
போர்ன்விடாவை விரும்புவதேன்?
போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு
தலைமுறையினர் தங்களுடைய
குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர
வேறு எதுவும் உகந்ததல்ல என்று
வலியுறுத்திக் கூறுவதேன்?
அதில்...உற்சாகம் துள்ளும் சுவை
மட்டுமல்ல, காட்பரியின் பிரபல
பெயர் மட்டுமல்ல, அவற்றைவிட
அதிகமோ அதிகம். அதுதான்
போர்ன்விடா! அதோடு வளருங்கள்.
காட்பரிஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி,
போர்ன்விடா பயிற்சி.
Bournvita
Bournvita
SAVE Rs.1.50
The Tastier Food Drink
OBM/3783 TAM

வேங்கை வனம்

கோவி. மணிசேகரன்

அத்தியாயம் 27

தமிழுக்கு ஓர் அணிகலன்

"பாண்டியகுமாரி! உங்களுக்கு வாக்கு கொடுத்தது போலக் கானப்பேரெயிலையும் வீழ்த்தியாய் விட்டது; வேங்கைமார்பனையும் சாய்த்தாய் விட்டது! இனி நீங்கள் இங்கிருக்காமல் இரகசிய வழிமூலம் கோட்டைக்கு வெளியே வந்து விட வேண்டும் என்பது மாமன்னர் உத்தரவு!" என்றான் காளிங்கன்.

வேங்கைமார்பன் சாய்ந்தாய் விட்டது என்ற ரத்த வார்த்தைகள் திருமேனியின் நெஞ்சை ரணப்படுத்தி விட்டன.

இது எவ்வளவு தூரத்துக்கு உண்மை?

தியாகவல்லி சொன்னதை நினைத்துப் பார்த்துக் கொள்கிறாள்.

"விரைவில் புறப்பட வேண்டும் இளவரசி!"

"நான் உங்களுடன் வருவதற்கில்லை. எனது தந்தை வரட்டும்."

"அவர்தானே அனுப்பி வைத்தார்?"

"எப்படி நம்புவது?"

"என்னை நம்பாவிட்டால் நீங்கள் யாரை நம்பப் போகிறீர்கள்?"

"நான் உங்களுடன் வருவது நியாயமில்லை; அதனால்தான் நம்புவதற்கில்லை என்றேன்."

"நீங்கள் வராவிட்டால் பலாத்காரமாக இழுத்துச் செல்ல நேரிடும். எந்த நேரத்திலும் வேங்கைமார்பன் இறந்துபட்டான் என்ற செய்தி தெரிந்தால், கானப்பேர் வீரர்கள் உங்களைப் பழி வாங்க வரலாம். எல்லாம் உங்களால் வந்தவினை என்பது அவர்களது ஆவேசம்! அதோ பாருங்கள்: கோட்டை இடிபடுவதும் எரிபடுவதும்!"

"வேங்கைவேந்தர் வீழ்ந்து பட்டார் என்பதை நான் நம்ப முடியாது."

"வீழ்த்தியவனே நான்தானே?"

திருமேனியின் கண்களில் அக்கினி ஜுவாலை...

காளிங்கன் ஆட்களை நோக்கிச் சத்துகிறான்: "ஏன் நிற்கிறீர்கள்? போய்ச் சிலையை அகற்றுங்கள். அதனடியில் சுரங்கம் செல்கிறது. நான் இளவரசியைக் கடத்தி வருகிறேன்."

"கை துண்டாகி விடும்."

"துண்டு போடுகிறவன் அங்கே மீளாத்தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். தயவு செய்து மன்னர் உத்தரவுப்படி வந்துவிடுங்கள். இல்லை நான் கைநீண்டி இழுத்துச் செல்ல நேரிடும்."

ஆட்கள் சிலையைத் தொடச் செல்கிறபோது...

தியாகவல்லி சமயமறிந்து வேங்கைகளைத் திறந்து விட்டு விட்டாள்.

அவ்வளவுதான். பெருத்த உறுமலுடன் பாய்ந்த வேங்கைகள் காளிங்கன் மீதும் ஆட்கள் மீதும் பாய்ந்தன.

ராஜாவான ஆண் வேங்கை, காளிங்கனைத் துரத்தித் துரத்தியடிக்கிறது.

ராணி வேங்கை ஏனைய வீரர்களை அடித்து வீழ்த்துகிறது.

ராஜா வேங்கை, காளிங்கனை வீழ்த்தி, முன்னங்கால்களால் அறைந்து நகங்களால் பிராண்டி, வாயில் கடித்துக் குதறிப் போட்டுவிட்டது.

காளிங்கன் சின்னாபின்னமானான்.

திருமேனி கண்ணீர் மல்கிய வண்ணமிருக்கிறாள். அண்ணன் அக்கிரமம் செய்தான் அனுபவித்து விட்டான் என்று தன்னைத் தேற்றிக்கொண்ட தியாகவல்லி, "இளவரசி! அதைரியப்பட வேண்டாம். மாறுட வேங்கையை அவ்வளவு எளிதில் வீழ்த்தி விட முடியாது" என்று திருமேனியையும் தேற்றுகிறாள்.

மாலைப்போது உக்கிரப்பெருவழுதிப்பாண்டியர் சமுத்திரம் வெற்றிமாலையணிவித்து விட்டது.

எங்கும் ஒரே பேரிரைச்சல் கேட்கிறது.

கானப்பேரெயில் எரிகிற காட்சியைக் கண்டு ஐப்பசி வானமே இரக்கம் கொள்ளாமல் கவனிக்கிறது.

அந்தச் சோகமான நேரத்தில் —

வேங்கைவனத்துள் ஒரு ரதம் மெல்ல நுழைகிறது. அதனுள் வேங்கைமார்பன் மூக்கில் வாயில் ரத்தம் கசியக் காட்சி தந்த கோலம்...

திருமேனி பதறிப்போய் ஓடுகிறாள்.

"பிரபோ! பிரபோ! என்ன நடந்தது?"

கைத்தாங்கலாக அவனை இறக்குகிறாள்:

"என் உப்பைத் தின்று எனக்கே உலை வைத்து விட்டார்கள் திருமேனி! வேங்கை மார்பன் வீர சரித்திரம் நிறைவு பெறுகிறது! என்னைச் சிலையருகே அழைத்துச் செல்!"

அணைத்து அழைத்துச் செல்கிறாள்.

அருகில் வந்து கவனித்த தியாகவல்லி 'ஓ' என்றலறியழுகிறாள்.

மேலும் வாயில் ரத்தம் பீறிடத் தரையில் சாய்ந்து விட்டான் வேங்கைமார்பன்.

திருமேனி வேங்கைவனமே அதிருமளவுக்குச் சத்தமிட...



வேங்கைகளிரண்டும் ஓடிவந்து தங்கள் தலைவனைக் கண்டு வானமே இடியுமளவுக்கு உறுமுகின்றன.

''எனது தந்தை இவ்வளவு வெறிச் செயலாகக் கோட்டையை இடித்துத் தூளாக்கி எரியூட்டுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இதோ வந்து விடுகிறேன், பிரபோ!''

திருமேனி எழுந்து வேகமாகப் பளிங்கு மாளிகையுள் நுழைகிறாள்.

வேங்கைமார்பன் அருகே வந்தமர்ந்த தியாகவல்லி, ''அத்தான்! அண்ணன் இவ்வளவு மிருகமாக நடப்பான் என்பது எதிர்பாராதது. அவன் இங்கே வந்து திருமேனியைப் பலாத்காரமாகச் சுரங்கவழியில் கடத்திச் செல்ல முனைந்தான். நான் சமயமறிந்து வேங்கைகளைத் திறந்து விட்டேன். அவனையும் அவனது ஆட்களையும் சின்னாபின்னமாக்குதறிப் போட்டுவிட்டன!'' என்று கூறி விசும்பி விசும்பி அழுகிறாள்.

''அந்தப் பாவியை எனது வேங்கைகள் பழி வாங்கி விட்டனவா? ஓ... எவ்வளவு மகிழ்ச்சி!'' என்று கூறி அருகில் உறுமித் துடித்த வேங்கைகளை அணைத்து முத்தமிட்டுத் தடவுகிறான்.

பளிங்கு மாளிகைக்குள் சென்ற திருமேனி, மீண்டும் திரும்பி வந்த போது, சென்ற போதிருந்த வேகமில்லை.

நேரே சிலையண்டையில் செல்கிறாள். சிலையின் கழுத்தில் தொங்கிய மாங்கல்யத்தைக் கழற்றி எடுத்து வருகிறாள்.

வேங்கைமார்பனிடம் நீட்டுகிறாள்.

அவனுக்குப் புரிகிறது. அவன் துன்பிய வாய்ச் சிரிக்கிறான்.

''பிரபோ? முதலில் எனது கழுத்தில் சுத்த சுத்தியுடன் அணிவியுங்கள்! உங்கள் சபதம் நிறைவேறிய மகிழ்ச்சியைச் சொர்க்கத்தில் கொண்டாடுவோம்!''

''புரியும்படி சொல் திருமேனி!''

வேங்கைமார்பனுக்கு மூச்சுத் தடுமாறுகிறது.

''முதலில் மாங்கல்யத்தை அணிவியுங்கள்! தமிழன், தமிழ் வீரன், தமிழனுக்குப் பிறந்தவன் என்கிற சபதம் இந்த மாங்கல்யத்தை எனது கழுத்தில் அணிவிப்பதன் மூலம் நிறைவேறுகிறது! நீங்கள் சத்தியமான வீரர்! பிறகு எது வேண்டுமானாலும் முடிந்த வரை பேசுவோம்!''

வேங்கைமார்பன் புன்முறுவலுடன், மாங்கல்யத்தைத் திருமேனியின் கழுத்தில் அணிவிக்கிறான்.

தியாகவல்லி கரம் கூப்பிப் பிரார்த்தனை செய்கிறாள்.

பேரிகை முழங்குகிறது...

சங்கங்கள் ஆர்க்கின்றன...

எக்காளமும், துந்துபியும் எக்காளமிடுகின்றன...

பாண்டிய மாமன்னர் வெற்றிகொண்டுவிட்டார் என்பதற்காக மட்டும் அவை முழங்கவில்லை.

இங்கே ஒரு சத்தியத் தமிழ் வீரனின் சபதம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இது இவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு வெற்றியே என்பது போல முழங்குகின்றன...

திருமேனியின் வாயில் ரத்தம் பீறிடுகிறது...

''திருமேனி...'' என்று கதறுகிறான் வேங்கைமார்பன்.

தியாகவல்லி துடிதுடித்துப் போகிறாள்.

''பிரபோ! அதுதான் சொன்னேனே, சொர்க்கத்தில் கொண்டாடுவோம் என்று! எனது உடல் முழுவதும் வைரங்களிருந்து என்ன பயன்? அது கொஞ்சம் உடலுக்குள்ளும் செல்லட்டுமே என்று தூளாக்கி விழுங்கி அதற்கு உயர்வளித்தேன். நீங்கள் இல்லாமல் எனக்கு இனி என்ன வாழ்வு? தமிழுக்கு நானிருந்து தான் தொண்டு செய்ய வேண்டுமென்பதில்லை. அதற்குத் தொண்டு செய்ய யுகயுகமாக இலக்கியச் சுயம்புவான படைப்பாளிகள் பிறந்து கொண்டே இருக்கிறார்கள். அதன் மணிமுடியை இனி யாராலும் இறக்கி விட முடியாது. இந்த நமது காதல் காவிய முடிவையும் எவராவது எழுதினால் அதுவும் தமிழுக்கு ஓர் அணிகலனே!''

இருவருக்கும் மூக்கிலும் வாயிலும் அதிகப்படியான ரத்தக் கசிவுகள்...

''திருமேனி!''

''பிரபோ!''

ஒருவரையொருவர் இறுக அணைத்துக் கொள்கிறார்கள்! ஆனந்தமோ ஆனந்தம்!

''திருமேனி!''

''பிரபோ!''

''திருமேனி!''

''பிரபோ!''

இந்தப் பூமியின் விளிம்பை விட்டு வானத்து விளிம்பைத் தொட ஒரு கவிதையின் இரு சிறகுகள் பறந்து செல்கின்றன.

அந்தக் காதல் கவிதையைக் கண்டு கலங்கி, மெய்மறந்து நிற்கிறாள் தியாகவல்லி. அடுத்து அவளால் துக்கம் தாங்காமல் 'கோ'வென்று கதறியழுகிறாள்.


அருகிலிருந்த வேங்கைகளும் உறுமியழுகின்றன...

இருமலையும் காதலையும் மறைக்க முடியாது. —ஐரிஷ் பழமொழி.

முதலில் மனத்திற்கு வைத்தியம் செய்யுங்கள். அதற்கு அப்புறம் வியாதிக்கு சிகிச்சை செய்யுங்கள்.
—சீனப்பழமொழி.
—எஸ். எஸ். பரிமளம்முத்து.



இப்போது... சருமத் தொல்லைகளை அகற்றிடுக ஆரோக்கியமும் இயற்கைப் பொலிவும் பெற்றிடுக.



Godrej நிமின்

தூய வேப்பெண்ணெயின் இயற்கை குணம் கொண்ட சோப்

நீம், மார்கோஸா எனப்படும் வேப்பிலை சரும தொல்லைகளை விரட்ட இயற்கை தந்த வரப்பிரசாதம். தொடர்ந்து வேப்பிலை உபயோகித்தால் உங்கள் சருமம் பளபளப்பாகவும் தெளிவாகவும் விளங்கும்.

கோத்ரெஜ், தூய வேப்பெண்ணெயை நிமின் சோப்பில் கலந்துள்ளது. உங்கள் சருமத் தொல்லைகளை குளித்து ஒழிக்க ஒரு புத்துணர்ச்சியூட்டும் டாய்லெட் சோப். கோத்ரெஜ் தரும் நிமின் வெகுவாக நீடித்து நிற்கும். ஏனெனில் மற்ற வேப்பிலை சோப்புகளைப்போல கொழ கொழவென மாறுவதில்லை.



நிமின்–உங்கள் கவனிப்புக்கிணையாக சருமத்தைக் கருத்துடன் காத்திடும்.

CHAITRA-B G 230 TAM

வெற்றிப் பெருமிதத்துடன் வீரர்கள் புடைசூழ உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர் அருகே வருகை தருகிறார்...

வந்து கவனித்த காட்சி...

இதயமே வெடித்து விடும்போல அண்ணாந்து நோக்கி, ''திருமேனி!'' என்று கதறுகிறார்.

வேங்கைகள் உறுமிப் பாய...

அதற்குள் வீரர்கள் ஓடிவர...

பெருத்த கும்பலைக் கண்டு பயந்து போன வேங்கைகள் அறை நாடிச் சென்று பதுங்கிக் கொண்டன.

நடந்த அனைத்தையும் விக்கியும், விசும்பியும் விளக்குகிறாள் நியாகவல்லி.

காலம், கௌரவப்போர்வையில் இப்படிப் பழி வாங்கி விட்டதே என்று கலங்குகிறார் உக்கிரப் பெருவழுதிப் பாண்டியர். விதி வென்று விட்டது. இல்லையென்றால் இந்தப் போர்ப் பயணம் அவசியமே இல்லையே!

இரண்டு உடல்களையும் அவர் பாண்டிய நாடு நோக்கி எடுத்துச் செல்ல உத்தரவிடுகிறார். ஆனால் நியாகவல்லி குறுக்கிட்டாள்:

''மன்னர்பெருமானே! இந்த வேங்கை வனத்தில் தான் இந்த இரு ஆத்மாக்களும் சுற்றி வலம் வரும். இங்கேயே அடக்கம் செய்யுங்கள். இந்தச் சரித்திரம் இங்கே முடிவது தான் வீரமும் விவேகமும்.''

ஏற்றுக் கொண்டார் பாண்டியர்.

பளிங்கு மாளிகையின் கூடத்தில் அந்தக் காதல் கவிதையை அடக்கம் செய்கிறார்கள். நடுகல் வைக்கிறார்கள்.

உக்கிரப் பெருவழுதிப்பாண்டியர் உடல் குலுங்கிப் பதறியழுகிறார். ''உன் அம்மாவுக்கு என்ன சமாதானம் சொல்வேன்!''

நியாகவல்லியும், 'ஓ'வென்று கதறுகிறாள்... மேலும் மேலும் கதறுகிறாள்...

சுற்றியிருக்க அனைத்து வீரர்கள் கண்களிலும் அந்தக் காதல் கவிதை குளித்து நீராடியது. எனித்தப் பயணம் எதற்கிந்த பணயம்?

எத்தனை பெரிய இழிவு....

பளிங்கு மாளிகையை விட்டு வெளியே வருகிறார் பாண்டிய மாமன்னர்: ''வண்டியைக் கொண்டு வாருங்கள்.''

வண்டி வந்து நிற்கிறது.

திருமேனிச் சிலையண்டை சென்று கவனிக்கிறார். ஔவைப் பிராட்டியின் வாசகம் கண்களில் படுகிறது.

''வாழிய வேங்கை நிலமே!'' என்று நல்ல ஓர் ஆடவன் வாழ்ந்த நிலத்தை வாழ்த்திக் கொள்கிறார்...

சிலையை அவரே அசைத்துத் தூக்க முயல்கிறார். எவரும் தொடக் கூடாது என்பது வேங்கைமார்பன் கொள்கையாயிற்றே!

நியாகவல்லி துணை புரிய, சிலையைத் தமது தின் தோளில் சுமக்க முடியாமல் சுமந்து வண்டியில் ஏற்றுகிறார்.

''நியாகவல்லி! நீயும் என்னுடன் புறப்படுகிறாய்!''

''மன்னிக்க வேண்டும் மன்னர்பிரானே! இங்கே இந்த இலக்கனச் சுத்தமுள்ள காவியத்துக்குத் தினமும் அஞ்சலியைக் காட்ட நான் ஒருத்தியாவது மிஞ்சியிருக்கிறேன்! வேந்தர் விட்டுச் சென்ற வேங்கைகளை அனாதையாக்க நான் விரும்பவில்லை. அவற்றுக்கு நானும், எனக்கும் அவையும் துணை!''

பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார் உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர்.

எந்த *மூன்றும் தமிழ்ச்சங்கம் திருமேனி மூலம்தான் மீண்டும் ஆரம்பமாக வேண்டும் என்று மாங்குடி மருதனார் சொன்னாரோ, அந்த மூன்றும் தமிழ்ச் சங்கம் வெறும் சிலையுடன் முற்றுப் பெறட்டும் என்று மனம் நொந்து கண்ணீர் மல்குகிறார்.

மானை மீட்க வந்தார்: மகளின் சிலையை மீட்டுக் கொண்டு திரும்புகிறார்...

வானில் பெருத்த இடிமுழக்கம்...

தொடர்ந்து 'சோ'வென்று மழை பிடித்துக் கொள்கிறது...

பாண்டியப் படைகள் மழையில் நனைந்த வண்ணம் இருட்டிய நேரத்தில் சாரி சாரியாகச் செல்கின்றன.

படைகள் மட்டுமா?

அழிந்து பட்ட கோட்டையில் இனி வாசம் செய்ய என்ன இருக்கிறது என்றெண்ணிய காஞைப்பேர் மக்களும் தக்க இடம் நாடிப் பயணமாகிக் கொண்டிருக்கிறார்கள்...

பெருமழையால் எரியுண்ட கோட்டை தணிந்து வருகிறது.

தனித்திருக்க நியாகவல்லியை நோக்கி வேங்கைகள் உறுமிக் கொண்டு ஓடிவருகின்றன. அவற்றைத் தடவி விட்டுக் கொண்டே கண்ணீரைச் சிந்துகிறாள்.

அழிந்துபட்ட காஞைப்பேரெயிலில் மிஞ்சியது அந்த வேங்கைவனம்.

நாட்கள் நகர நகர...

இரவு பகல் எந்த நேரமும் அந்த வேங்கைகள், தங்கள் தலைவனையும் தலைவியையும் எண்ணிப் பெரிதாக உறுமிக் குரல் கொடுத்துக் கூப்பிடும்...

தொலை தூரத்தில் செல்பவர்களுடைய காதுகளில் இந்த அழைப்புக் குரல் கேட்கும்...

அப்போதெல்லாம் அவர்கள், அந்த வேங்கைவனக் கதையை எண்ணி இரு சொட்டுக் கண்ணீரை உகுப்பார்.

அந்தக் கண்ணீர் புஷ்பங்கள்தாம், புதைந்து கிடக்கும் வேங்கைவனக் காதல் கவிதைக்குக் காணிக்கையாகி நீண்ட நாட்கள் வரை மணந்து வந்தன...!

அந்தக் கதை...

இப்போது மீண்டும் மணக்கத் தொடங்கியது.

(நிறைவு)

---


* உக்கிரப் பெருவழுதிப் பாண்டியர் காலத்துக்குப் பின்னர், கடைச்சங்கம் நடைபெறாமல் அழிவுற்றது என்பது களவியலுரையால் உணரப்படுகிறது. ஆனால் அச்சங்கம் அழிந்தமைக்குச் சொல்லப்படும் காரணங்கள் உண்மை என்று தோன்றவில்லை. ('பாண்டியர் வரலாறு' – பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தார்) அறிஞர் பெருமான் இவ்வாறு கூறியதால், எப்படி இருக்கக் கூடாது என்று தமிழ்த் தாகமையுடன் நான் கற்பனை செய்த நாவல் இது.

PHILIPS

An exciting new composition. Arrangement by Philips.



The Philips Rack System is a perfectly compatible, technically superior and an aesthetic combination that brings you pure and powerful sound.



300 watts of undistorted power

That's AH 824. One of the best amplifiers available in the country today. With the most sophisticated features – like wide frequency response from 30 Hz to 20 kHz. Active tone control.

The Electronic Turntable

AF 834. Stroboscope with pitch control. Electronic motor control. And auto return.

The Dolby Deck

F 6121. The cassette deck with servo touch and metal compatibility.

3 way 3 Speaker bass-reflex system

AH 426 speakers with five segment LED bar graph to indicate power.

If music really means something to you, you've to listen to the Philips Rack System. Walk into the nearest Philips dealer's showroom and ask for a demonstration.

Philips – the trusted Indian household name for over fifty years

OBM/17/87

விசித்திரப் பழக்கம்

ஜம்புகேசுவரர் ஆலயச் சிறப்பு

எங்கள் சொந்த ஊரான திருவானைக்காவில் ஜம்புகேசுவரர் ஆலயத்தில் அர்ச்சகர் புடவை கட்டிக் கொண்டுதான் சுவாமிக்கு உச்சிக்கால பூஜை செய்வார். அம்மனே சுவாமியை பூஜிப்பதாக ஐதிகம்.

எஸ். சோமசுந்தரம், திருச்சி-5

புண்ணியத்தின் விலை 25 பைசா!

பசுவிற்கு உணவு கொடுத்தால் புண்ணியமாம். தன் சொந்தப் பசுவையே சாலையோரத்தில் கட்டி வைத்து, புல்லுக்கட்டையும் வைத்துக் கொண்டு, புல்லில் ஒரு பிடியை மாட்டுக்குக் கொடுக்க 25 பைசா கட்டணம் வசூலிக்கிறார்கள் இந்த ஊரில்!

பி. மதுரம், பம்பாய்-58

அமாவாசை விசேஷம்

ஜோத்பூரில் அமாவாசையன்று பால்காரர்கள் பாலை விலைக்கு விநியோகிப்பதில்லை. அப்படிச் செய்வது பாபமாம். அன்று மட்டும் கன்றை ஊட்ட விட்டும் பாலை ஏழைகளுக்குக் கொடுத்தும் செலவழிக்கிறார்கள்.

திருமதி பார்வதி ஜோத்பூர்-1

உறக்கம் கலையாமல்...

ஸ்ரீரங்கம் ரங்கநாத பெருமானுக்கு மட்டும் தேங்காயை உடைத்து நைவேத்தியம் செய்வதில்லை. துருவிய தேங்காயைத்தான் நைவேத்தியம் செய்கிறார்கள். தேங்காயை உடைப்பதால் பள்ளி கொண்ட பெருமானின் நித்திரை கலைந்து விடுமாம்!

சம்பத்குமாரி, திருச்சி-4

ராஜஸ்தானின் மேலான பிரயாணிகள்

பஸ் வந்து நின்றதுமே பிரயாணிகள் முதலில் பஸ்ஸின் மேல் பாகத்தில் தான் ஏறி அமர்ந்து கொள்கிறார்கள். அங்கு இடம் நிரம்பிய பிறகே எஞ்சியவர்கள் பஸ்ஸிற்கு உள்ளே போய் அமர்கிறார்கள். கண்டக்டரும் முதலில் மேலே ஏறித் தான் டிக்கெட் கொடுக்கிறார்.

பத்மா கிருஷ்ணன், ராஜஸ்தான்

பிள்ளையாருக்குச் சிரம பரிகாரம்

விநாயக சதுர்த்தி பூஜை முடிந்ததும் இந்த ஊர்ப் புரோகிதர் பிள்ளையார் பொம்மைக்குச் சிரம பரிகாரம் செய்விக்க அதன் கால், தொடை, பாதம் எல்லாம் பிடித்து விட்டார்.

வி. ஸ்ரீநிவாசன், நாசிக்

மண்ணின் மகிமை

மலை மலையாய்க் குவித்து விற்கப்படும் பட்டாணி, வேர்க்கடலை போன்றவற்றுடன் சாம்பல் நிற மண்ணையும் குவித்து வைத்துள்ளார்கள், பம்பாயில். கர்ப்பிணிப் பெண்களுக்காக கிலோ நான்கு ரூபாய் என்ற விலைக்கு இந்த மண்ணை விற்கிறார்கள்.

திருமதி லக்ஷ்மி நாராயணன், பம்பாய்-71

புதுமையான லோன் மேளா

கேரளத்தில் கோழிக்கோடு ஜில்லாவில் உள்ள வட்டோளி என்ற கிராமத்தில் பணம் தேவைப்படும்போது கடன் வாங்குவதற்குப் பதிலாக 'பயிட்டு' என்ற தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்கிறார்கள். விருந்துக்கு வருவோர் தங்களால் இயன்ற தொகையை அளிக்கிறார்கள். இப்படிச் சேர்க்கப்படும் தொகையின் பட்டியலை எழுதி வைத்துக் கொண்டு, 'பயிட்டு' நடத்துபவர் பிறர் நடத்தும் 'பயிட்'டுக்குப் போகும் போது அதே தொகையைத் திருப்பி விடுகிறார்.

கே. கணேசன், சங்கரன்கோயில்

சௌதி அரேபியாவின் ஜெட்டா நகரில்...

தபால்காரர் கிடையாது. தபால் பெட்டி

உங்கள் கைக்கடிகாரத்தின் கண்ணாடியில் சிறு கீறல்கள் உள்ளனவா? மிகச் சுலபமாக அவற்றைப்போக்கலாம். சிறிதளவு பற்பசையை விரலில் எடுத்துக் கண்ணாடி மீது தடவி, பிறகு சுத்தமான சரத் துணியால் துடையுங்கள்! பழையபடி பளிச்சென்று ஆகி கீறல் மறைந்துவிடும்!

ஆதாரம்: சொல்லைட்டி.
—சம்பத்குமாரி.



வாசகர் பங்கு



என் தான் உண்டு. அவரவர் போய்த் தபாலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

லாஸ் ஏஞ்ஜலஸ் ஒலிம்பிக்ஸ் டி.வி.யில் காண்பித்தார்கள் —பெண்கள் பங்குகொண்ட விளையாட்டுக்கள் நீங்கலாக!

பெட்ரோலுக்காக கார் வீதியில் நின்றால் அபராதம் — பெட்ரோலைத் தண்ணீராகச் செலவழிக்கலாம்; தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டும்!

பாரதி ரவிகுமார், ஜெட்டா

திருப்பதி போகத் தடை

எங்கள் பிறந்தகத்து குல தெய்வமான ஆலம்பாடி குண்டுச்சட்டி பெருமாள் எனப் படும் பிரசன்ன வெங்கடேச பெருமாளும் திருப்பதி வெங்கடேசப் பெருமாளும் பங் காளிகளாம். இவர் பணம் திருப்பதிக்குப் போகக் கூடாது என்பதால் வேறுயாரேனும் செலவு செய்து கூட்டிப் போனாலொழிய பிரசன்ன வெங்கடேசரைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் திருப்பதி போகக்கூடாது.

ரமணி நாராயணசாமி, பங்களூர்-86

யார் இந்த மந்திரி?

'மந்திரி வந்தாரா? இதோ மந்திரி வரு கிறார்' போன்ற உரையாடல்கள் எங்களூர் பால் டிப்போக்களில் சகஜம். விஷயம் இது தான். பால் கறப்பவரை மந்திரி என்று அழைப்பது வழக்கம். கருகருப்பான பணி யாளருக்கு இப்படி ஒரு பட்டப் பெயர்!

ஆர். அரிகோபி, குடியாத்தம்

இனிய காலைப் பொழுது

அதிகாலை டீயுடன் கட்டாயம் ஜிலேபி இருக்க வேண்டும் எங்கள் ஊர்க்காரர்களுக்கு. சிலர் ஜிலேபியை டீயில் தோய்த்துக் கூட சாப்பிடுவார்கள்.

ஆர். கிரிதரன், மிர்ஜாபூர், உ.பி.

முகிரே அன்று பௌர்ணமி


பௌகோலா நான் பிறந்த ஊர். இங்கு சித்ரா பௌர்ணமிக்கு ஒரு வாரம் முன்ன தாக ஒரு பெரிய பானையில் அன்றாடம் எல்லா வீடுகளிலும் செய்யப்படும் சைவ குழம்பு வகைகளை ஊற்றிக் கொதிக்க வைத்துக் கொண்டேயிருப்பார்கள். ஏழு நாட்கள் விடாமல் அடுப்பு எரியும். பௌர் ணமி அன்று இந்தக் குழம்பைச் சாதத்தில் கலந்து ஊரெல்லாம் சேர்ந்து உண்ணும்.

பிரேமா எல். ராவ், மைசூர்-2

புதுப் புடவையைப் போய்...!

பெங்காலிகள் புதுப் புடவை கட்டிக் கொள்ளும் முன்னர் உள் தலைப்பில் ஒரு துளியை நெருப்பில் சுட்டுப் போகவிட்டு அணிகிறார்கள். திருஷ்டி கழியவே இப்படிச் செய்கிறார்களாம்.

பி. லக்ஷ்மி, கல்கத்தா-40



என்ன தாராளம்!

ஹைதராபாத் மோண்டா மார்க்கெட்டில் 100 மாங்காய்கள் விலை பேசினால் 132 ஆக தருவார்கள். மீரா ஆலம் மண்டியிலோ 100 காய்களுக்கு 192 ஆகத் தருவார்கள். வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே தெரியாது.

எஸ். காயத்ரி, நெய்வேலி

புதுமைக் கல்யாணம்

இங்கு ஏகாம்பர நாதர் ஆலயத்தில் பங்குனி உத்திர விழாவின் பத்தாம் நாள் கல்யாண உற்சவம் நடக்கும். இரவில் நடக் கும் இவ்வைபவத்தில் பழைய ஐதிகப்படி பூனையை குறுக்கே போகவிட்டு திருமணத்தை நிறுத்துவார்கள். இந்த நேரத்தையே பல பக்தர்கள் நல்ல நேரமாகக் கருதித் தங்கள் வீட்டுத் திருமணத்தை நடத்திக் கொள் கிறார்கள்.


வ. ஏகாம்பரம், காஞ்சீபுரம்-2

நவீன திரௌபதி

நாங்கள் ஹிமாசல பிரதேசத்தில் சுந்தர் நகரில் இருந்த போது எங்கள் வீட்டில் வேலை செய்த மலைஜாதிப் பெண்ணுக்கு ஐந்து கணவன்மார்கள். குடும்ப நிலம் பிரிந்து விடாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

வி. லக்ஷ்மி, பங்களூர்-78





வெடி வெடித்து வழிபடுவோம்

வெடி வெடிச்சான் கோயில் என்ற சாஸ்தா ஆலயம் எங்கள் ஊருக்கருகில் உள்ள குழித்துறை ஆற்றுப் பாலத்தின் சமீபமாக இருக்கிறது. இவ்வழியே பயணிகள் செல்கையில் காசை கோயிலுக்குள் வீசி எறிய அதன் எதிரொலியாகக் கோயிலில் இருப்பவர்கள் ஒரு வெடி வெடிக்கிறார்கள்.

ஆர். செல்வசுப்பிரமணியன், நாகர்கோவில்





மொழி "கோளாறு!"

கோவில்பட்டியில் உள்ள என் சகோதரி வீட்டு பம்பு செட்டைப் பழுது பார்த்து இயங்கச் செய்தேன். அங்கு வந்த அவள் கணவர். 'இப்போத்தான் கோளாறுக வேலை செய்யுது' எனவும் எனக்கு ஒரே அதிர்ச்சி. பிறகுதான் அறிந்தேன். 'கோளாறுக' என்றால் 'நன்றாக' என்று அர்த்தமாம்.

எஸ். கண்ணன், கோவை

விசித்திரமான படையல்

முத்துக் கருப்பண்ணசாமிக்கு நாங்கள் திருவிழா கொண்டாடும் போது பூஜை முடிந்ததும் கறிசாதங்களை மேல் நோக்கி வீசி 'முத்துக் கருப்பண்ணா பிடிச்சுக்கோ' என்று கூவி விட்டுத் திரும்பிப் பார்க்காமல் போய் விடுவோம்.

எம். எல். சுகன்யா, மலையம்பாளையம் அஞ்சல்

சுவர்க்கத்துக்குப் போக சுலப வழி

மதுரா அருகே உள்ள சலவைத் தொழிலாளிகள் சமூகத்தில் இறந்து போனவரின் வலது கால் கட்டை விரலில் சின்ன தங்க ஏணியைக் கட்டி சிதையில் வைக்கும்பழக்கம் நிலவுகிறது. இது சுவர்க்கத்துக்குப் போக உதவுமாம்.

ஸரோஜா சக்ரவர்த்தி, பங்களூர்.

மீனாட்சிசுந்தரேசுவரர்

எங்கள் ஊரில் திருமணங்களில் மணப் பெண்ணைச் சற்று உயரமான, அலங்கரித்த பலகையில் நிற்க வைத்து மணமகனைக் கீழே நின்று தாலி கட்ட வைப்பார்கள். மதுரையில் மீனாட்சியே அரசாள்கிறாள் என்பதால் இந்தப் பழக்கம்.

வி. ராஜலெக்ஷ்மி, காரைக்குடி

சினிமா வாசனை கூடாது

தஞ்சை மாவட்டம் குடவாசலில் முஸ்லிம் பெண்கள் சினிமா பார்த்ததாக நிரூபணம் ஆனால் அவர்கள் 500 ரூபாய் அபராதம்

செலுத்த வேண்டும். இதில் 300 ரூபாய் நிரு பித்தவரையும் 200 ரூபாய் பள்ளிவாசலை யும் சேரும். பக்கத்து ஊர் உறவினர்கள்கூட சினிமா பார்த்துவிட்டு எங்கள் ஊருக்குவரக் கூடாது. அவர்களுடைய பேச்சு சினிமா ஆசையைத் தூண்டும் என்பதால்.

எஸ். கஜாபுதீன், தோஹா—கத்தார், அரபு நாடு.

வால் பிடிப்பவர்கள்

முக்கிய வேலையாகக் கிளம்புபவர்கள் எதிரே வரும் பசுமாட்டின் வாலை உருவி விட்டுச் செல்வது நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை காரணமாகப் பலரும் மிரண் டோடும் பசு மாடுகளைத் துரத்திக்கொண்டு ஓடுவது எங்கள் ஊரில் சிரிப்பை வரவழைக் கும் காட்சி.

வி. பால்ராஜன், பாமணி


ஒற்றுமை ஓங்குக

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை ஊக்கு விக்கும் பழக்கம் ஒன்று எங்கள் ஊரில் உண்டு. ஹிந்து குடும்பத்தில் குழந்தை பிறந் தால் மசூதிக்கு ஒரு தார் வாழைப்பழம் வாங்கித் தருவார்கள், நேர்த்திக் கடன் என்று.

எம். ஆறுமுகம், மேலப்பாளையம், திருநெல்வேலி

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் அன்பளிப்பாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

எம். ஆறுமுகம்,
28, கன்னி விநாயகர் கோயில் தெரு,
மேலப்பாளையம், திருநெல்வேலி-5.



மின்னும் மேனி
மெருகுக்கு ரெக்ஸோனா
Rexona
FOR SOFT AND GLOWING SKIN


ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள்

2

ஒரு பெருமைக்குரிய அதிவேக சொகுசு ரயில் அந்நாட்டின் தலைநகரில் ஒரு நிமிஷம் தான் நிற்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். ஏர்ப்போர்ட் எக்ஸ்பிரஸைப் போன்ற ஒரு சூப்பர் ட்ரெயின் நம்மூர் நகரங்களுக்கிடையே ஓடினால் பெரிய நகரங்களில் எல்லாம் ஐந்து நிமிஷங்களுக்குக் குறையாமலாவது நின்றாக வேண்டுமென்று மக்களே எதிர்பார்ப்பார்கள். அங்கே அப்படி யாரும் எதிர்பார்க்கவில்லை. பெரிய ஊரின் இரயில் நிலையம் என்றால் சோம்பேறிகளும், பிச்சைக்காரர்களும், வேலையற்றவர்களும் கூடியிருக்கிற சந்தை மடம் போலிருந்தாக வேண்டும் என்ற நியதியைக் காட்டாமல், கூட்டமின்றி அமைதியும் சுத்தமுமாயிருந்த பான் ரயில் நிலையத்தை என்னால் மறக்கவே முடியவில்லை. பிரிஸ்டல் ஹோட்டலில் போய்த் தங்கிய பின்னும் இந்த இரண்டு விஷயங்களும் என் மனத்தில் மிகப்பெரிய ஆச்சரியங்களாகவே தங்கியிருந்தன.

பிராங்க்ஃபர்ட்டிலிருந்து நாங்கள் 'பான்' நகருக்குப் போய்ச் சேர்ந்த தினம் ஞாயிற்றுக்கிழமை. ஆதலால் அன்றைய தினம் எங்களுக்கு முழு ஓய்வு அளிக்கப்பட்டது. எங்களுக்காக வந்திருந்த ஜெர்மன் உதவியாளர்களான லோத்தர் நாஸ், ரிச்சர்ட் வான் ரெய்ன்பாபென், இருவரும் பிரிஸ்டல் ஹோட்டல் லவுஞ்சில் எங்களுக்குச் சில பல விவரங்களைக் கூறிவிட்டு மாலையில் சந்திப்பதாகச் சொல்லி விடைபெற்றனர். மாலை ஏழு மணி வரை தனிமையில் விடப்பட்டோம்.

எங்களோடு பயணம் செய்வதற்கிருந்த மக்கள் சீனப் பிரதிநிதிகளாகிய லோ ரெங் லின், சூயுவான்கோ, திருமதி வாங் யோங் யிங், தென்கொரியாவைச் சேர்ந்த கிம் சோடா ஆகியவர்களை முறையாக அறிமுகம்



○ பானின் தெருக்களுக்குக் கலகலப்பு சேர்க்கும் டயடோம் மல்டி மீடியா காட்சி அரங்கம்.

பதற்றமில்லாத பான் நகரம்



செய்து கொண்டோம். அவர்களும் அங்கு வந்து சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

பயணக் களைப்பு, நேர மாறுதல், எல்லா மாகச் சேர்ந்து அனைவரையும் களைத்துப் போகச் செய்திருந்தன. இரவு இரண்டு மணிக்கு பம்பாயிலிருந்து புறப்பட்டுப் பத்து மணி நேரம் பறந்தால் பிராங்க்ஃபர்ட்டில் இறங்கும் போது மறுநாள் பகல் பன்னிரண்டு மணியாக அல்லவா இருக்க வேண்டும்? அதுதான் இல்லை. மேற்கு நோக்கிச் செல்லச் செல்ல இரவு நீண்டு கொண்டே போகிறது. பம்பாய்க்கும்பிராங்க்ஃபர்ட்டுக்கும் சுமார் ஐந்து, ஐந்தரைமணி நேரம் நேர வித்தியாசம் இருப்பதால் இரவு 2 மணிக்கு பம்பாயிலிருந்து புறப்பட்டிருந்தும் பிராங்க்ஃபர்ட் வந்து சேர்ந்த போது கூடக் காலை 7 மணிதான். பிராங்க்ஃபர்ட்டில் சில மணி நேரங்கள் கழித்த பின் தங்கள் விமானங்களைப் போலவே லுப்தன்ஸா காரர்களால் ஃபிளைட் நம்பர் கொடுக்கப்பட்டுள்ள ஃபிளைட் எல். எச். 1002 ஆன ஏர்ப்போர்ட் எக்ஸ்பிரஸில் புறப்பட்டுத் தலைநகர் 'பான்' வந்துசேர்ந்திருந்தோம். விமானத்துக்குத் தருவதுபோல் இந்த ரயிலில் 'போர்டிங் கார்டு' கூடத் தருகிறார்கள்.

நாங்கள் பான் போய்ச் சேர்ந்த தினத்தன்றும் அடுத்த சில நாட்களிலும் மெல்லிய



○ பீத்தோவன் சதுக்கம்

வாடைக்காற்றும் பூந்தூற்றலுமாக மழைச் சாரலாயிருந்தது. சென்னையிலிருந்து புறப்படும் போதோ வறுத்தெடுக்கும் அக்னி நட்சத்திர வெயில். அதற்கு மாற்றாகக் குளிர்ந்த ஜெர்மானியக் கோடைமழைஎங்களுக்கு இதமாக இருந்தது. ஆனால் எங்களை வரவேற்க வந்திருந்த ஜெர்மானியர்களோ, ''ஸாரி, வீ ஆர் ரிஸீவிங் யூ இன் எ பேட் வெதர்'' —என்று மன்னிப்புக் கோரினார்கள். விசாரித்ததில் ஆறு ஏழு மாதக் கடுங்குளிருக்குப்பின் வெயிலையும் வெளிச்சத்தையும், மிதமான வெப்பத்துடன் அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் ஜூன், ஜூலை



○ சர்வதேச கூட்டங்கள் நடைபெறும் மாளிகை

முதலிய மாதங்களில் மழை பெய்வதை அவர்கள் விரும்புவதில்லை என்று தெரிந்தது. மழைக் கோடை (Raining Summer) அவர்களால் பெரிதும் வெறுக்கப்படுகிறது. வெயில் காயும் நாட்களில், ''ஃபார்சுனேட்லி வீ ஹாவ் எ பிரைட் டே'' —என்று கூறும் போதே அவர்கள் முகத்திலும் கூட ஒளியையும், மலர்ச்சியையும் பார்க்க முடிகிறது. வெயில் காய அத்தனை விருப்பம்.

ஜெர்மனியின் ஹாம்பர்க்கையோ, பெர்லினையோ (மேற்கு) மூனிச்சையோ போல் 'பான்' நகரில் எந்தப் பதற்றமும் பரபரப்பும், வாழ்க்கை அவசரமும் தெரிவதில்லை. நகரம் எந்நேரமும் தூங்குவது போலவே (Sleepy Town) தென்படுகிறது. ரைன் நதியை ஒட்டிய கரையோரப் பகுதிகளில் இந்த அமைதியும், அழகும் அதிகமாகத் தெரிகின்றன. ரைன் நதியில் சுகமான படகுப் போக்குவரத்து ஓர் உல்லாச அநுபவம்.

ஷவரியல் தொட்டி நிறைய வெந்நீரை நிரப்பி வெதுவெதுப்பான நிலைக்குக் கொணர்ந்து அலுப்புத் தீர அமுங்கிக் குளித்தபின் பன்னிரண்டு மணிமுதல் பகல் மூன்று மணி வரை உறங்கினேன். மூன்று மணிக்குக் கீழே இறங்கிக் கஃபேடீரியாவில் காபி குடித்துவிட்டு மறுபடி அறைக்குப் போய் ஹைடில்பர்க் (யூனிவர்ஸிடி நகரம்) இலிருந்த பேராசிரியர் தாமோதரனுக்கும் டஸ்ஸில்டார்ப்பில் இருந்த தஸ்தூர் இண்டர் நேஷனல் இஞ்சினியரிங் கம்பெனியைச் சேர்ந்த டி. ஆர். கோபாலனுக்கும் (இவர் சென்னை லுப்தான்ஸா டி. ஆர். நரசிம்மனின் மூத்த சகோதரர்) டெலிஃபோன் செய்து நான் பானில் பிரிஸ்டலில் தொடர்ந்து மூன்று தினங்கள் தங்கியிருக்கப்

நா. பார்த்தசாரதி

போகும் விவரத்தை அறிவித்தேன். ஹைடில் பர்க்கிற்கும், டஸ்ஸல்டார்ப்பிற்கும் நான் அவசியம் வர வேண்டும் என்றும் என்னைச் சந்திக்க ஆவலாயிருப்பதாகவும் அவர்கள் இருவருமே தெரிவித்தனர்.

இங்கே சென்னையிலும் பம்பாயிலும், உள்ளூர் எண்களைச் சுழற்றினாலே ஒரே ராங் நம்பர்களாக அடைந்து பழக்கப்பட்டிருந்த எனக்கு பானிலிருந்து ஜெர்மனியின் எந்த மூலைக்குப் ஃபோன் செய்தாலும், பாரீஸ், ஜெனீவா, லண்டன் எங்கு முயன்றாலும் முயன்ற எண் சுத்தமாக உடனே கிடைத்தது கூட ஒரு பெரிய ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருந்தது. செய்தித் தாள்களைப் படித்து இந்தியாவில் பஞ்சாப் நிலைமை பற்றி மேற்கொண்டு ஏதாவது அறியலாம் என்றால் ஜெர்மன் செய்தித் தாள்களைத் தவிர வேறு ஆங்கிலத் தினசரிகளே தென்படவில்லை. பாரீஸ், ஹாலந்தின் தலைநகர் ஹேக் ஆகிய நகர்களிலிருந்து வெளியாகும் 'இண்டர் நேஷனல் ஹெரால்ட் ட்ரிப்யூன்' – ஒன்றுதான் எப்போதாவது தென்படுகிற ஒரே ஆங்கிலத் தினசரி. இந்த ஆங்கிலத் தினசரியும் எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு சிறிய நகரிலும், பெரிய நகரிலும் விதவிதமான வடிவங்களில் ஏராளமான ஜெர்மன் தினசரிகள் வருகின்றன. காலையில் ஏர்ப்போர்ட் எக்ஸ்பிரஸ் ரயிலில் ஹோஸ்டஸ் வழங்கிய ஹெரால்ட் ட்ரிப்யூனையே ஏழெட்டுத் தரம் புரட்டியாயிற்று. பஞ்சாப் மேல் நிலவரம் எதுவும் தெரியவில்லை. வீக் எண்ட் நாளில் 'ட்ரிப்யூன்' வெளிவராது. ஒருநாள் விடுமுறை.

அன்று மாலை ஏழு மணிக்கு மறுபடி அனைவரும் ஹோட்டல் லவுஞ்சில் சந்தித்தோம். எங்கள் ஜெர்மன் உதவியாளர்கள் மறுநாள் ஜூன் நான்காந்தேதி திங்கள் கிழமைக்கான எங்களது டைப் செய்த விவரமான நிகழ்ச்சி நிரலை வழங்கியபின் பான் நகரின் பிரதான வீதியில் ஒரு புகழ் பெற்ற ரெஸ்டாரெண்டில் இரவு உணவுக்காக அழைத்துச் சென்றார்கள். ஜெர்மன் ரெஸ்டாரெண்டுகளில் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்பதோ, தருவதோ பழக்கத்திலேயே இல்லை. ஒரே பீர் மயம்.

கோடையில் ஐரோப்பிய நகரங்களில் இரவு பத்துப் பத்தரை மணிக்கு முன்பு இருட்டுவதே இல்லை. வேறு சில நகரங்களில் ஜூனில் அதிகாலை மூன்று நான்கு மணி வரை கூட வெளிச்சம் இருக்கும். அந்நாட்களை வெள்ளை இரவுகள் (White nights) என்று கொண்டாடுகிறார்கள். பானில் இரவு ஒன்பது மணிக்குத்தான் பொழுது மங்க ஆரம்பித்தது. இரவு எட்டரை மணிக்கு உணவு முடிந்த பின் நானும் நேபாள நண்பர் பகாதூரும் தனியாக நடந்தே நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். டவுன் ஹால், பீத்தோவன் சதுக்கம், எல்லாம் பார்த்தோம். இசை மேதை பீத்தோவன் பிறந்த வீடும் பான் நகரில் தான் இருக்கிறது. மற்றவர்கள் முகத்தை எல்லாம் மலர்ந்து மகிழச் செய்யும் இன்னிசையாளன் பீத்தோவனின் முகத்தில் மட்டும்* ஏன் அத்தனை கடுகடுப்பு (சிலையின் முகத்தில்தான்) என்பதுதான் எங்களுக்குப் புரியாத புதிராயிருந்தது. மறுநாள் பான் நகருக்கு விஜயம் செய்ய இருந்த தென்னாப்பிரிக்கப் பிரதமர் போத்தாவை எதிர்க்கும் நிறவெறியை எதிர்த்தும் அதே பீத்தோவன் சதுக்கத்தில் சிலையருகே ஒரு விளம்பரம் எழுதி வைக்கப்பட்டிருந்தது. மறுநாள் மாலை அங்கே ஒரு பொதுக் கூட்டம் நடக்கும் என்றும் அறிவித்திருந்தார்கள். மறுநாள் முடிந்தால் பீத்தோவன் சதுக்கம் வந்து அந்த நிறவெறி எதிர்ப்புக் கூட்டத்தைப் பார்க்க வேண்டும் என்று நானும் நண்பர் பகாதூரும் முடிவு செய்து கொண்டோம். தலைநகராயிருந்தும் பானில் மக்கள் தொகை மற்ற ஜெர்மானிய நகரங்களை விடக் குறைவாகவே இருந்தது. ஓர் அமைதி செறிந்த அழகு நகரில் எங்கும் செறிந்திருந்தது. ரைன் நதிக்கரையில் நிர்வாகக் கட்டடங்களும் தேசிய அசெம்பிளியான பாராளுமன்றக் கட்டடமும் கம்பீரமாகக் காட்சியளித்தன. சர்வதேசக் கூட்டங்கள் நடக்கும் மாளிகையும், மேற்கு ஜெர்மன் அதிபரின் பான் நகர மாளிகையும் தலைநகரின் தவிர்க்க முடியாத பல நிர்வாகக் கட்டடங்களும் பளிச்சென்றிருந்தன. வீதிகள் சுத்தமாயிருந்தன. கார்கள் ஓரங்களில் ஓர் ஒழுங்கில் பார்க் செய்யப்பட்டிருந்தன.

பழைமையை அப்படி அப்படியே பாதுகாக்கும் ஆர்வம் ஜெர்மானியருக்கு நிறையவே உண்டு. ஆதலால் பழைய நகரப்பகுதியில் (Down Town) சில இடங்களில் கருங்கற்கள் பதித்த சாலை (நம்மூரில் கொத்தவால் சாவடி தெருவில் உள்ளது போல்) கள் இருந்தன. ஆனால் கண்கவர் வனப்புடன் வெகு சுத்தமாயிருந்தன. புதிய பகுதிகளில் சாலைகள் மிகமிக நவீனமாயிருந்தன. மிகமிகப் பளிச்சென்றிருந்தன.

தென்னாப்பிரிக்க நிறவெறியாளர் போத்தாவை எதிர்க்கும் கூட்டத்திற்குப் போவதென்று முடிவு செய்த போது நாங்களே போத்தாவினால் மறுநாள் ஒரு வம்புக்கு ஆளாகப் போகிறோமென்று சற்றும் எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)

நாம் நம்முடைய குழந்தைகளைச் சரியாக வளர்க்கத் தவறி விட்டால், அதனால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் நம்முடைய பேரக் குழந்தைகள்தான்.

—இமோஜின் பேப்.'

அனைவராலும் கோபம் கொள்ள முடியும். ஆனால் சரியான ஆளிடம், சரியான அளவில், சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காக சரியான முறையில் கோபம் கொள்ளுவது சுலபமானது அல்ல.

—அரிஸ்டாடில்.

—எஸ். எஸ். பரிமளம் முத்து.







ஆரோக்கியமான பற்களுக்கும் ஈறுகளுக்கும் என்றுமே ஆதாரம்
நம்பகமான கிராம்புத் தைலம் அது தருமே பரிகாரம்

புதிய


இதோ

ப்ராமிஸ் டூத் பவுடர்

காலங்காலமாக பயன்பட்டு வரும் கிராம்புத் தைலம் கொண்டது.

கிராம்புத் தைலம் கொண்ட ப்ராமிஸ் டூத் பவுடர் அளிக்கும் நன்மையைப் பாருங்கள்.

- வாய்த் துர்நாற்றத்தையும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளையும் அகற்றுகிறது.
- உங்கள் சுவாசத்திற்கு புத்துணர்ச்சியையும் தூய்மையையும் தருகிறது.
- உங்கள் ஈறுகளை இதமாகத் தேய்த்துக் கொடுத்து ஆரோக்கியத்தை உண்டாக்குகிறது.
- உங்கள் பற்களுக்கு பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது.
- பெப்பர்மிண்ட் மற்றும் கிராம்புத் தைலத்தின் இணையற்ற கலவை.



பல்சாரா

கிராம்புத் தைலம் கொண்ட புதிய இணையற்ற ப்ராமிஸ் டூத் பவுடர்

CHAITRA-BLS-436 TAM

சூரியன் ஒளிந்து கொள்ள ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தான். லேசாக வீசத் தொடங்கி இருந்த சரக்காற்று மண்வாசனையைத் தந்து எடுத்துக் கொண்டிருந்தது. மருது சோர்ந்து போய் அந்த மைல்கல்லின் மேல் உட்கார்ந்த போது, அவனுடைய வயிற்றின் இரைச்சலைக் கேலி செய்வது போல் வானத்தில் சில இடங்கள் கடகடத்தன.

இங்கிருந்து பழங்கோட்டைக்குச் சுத்தமாக இரண்டு மைல் தூரத்துக்கு மேலிருக்கும். மத்தியானம் இரண்டு மணிக்குக் குடித்த 'சிங்கிள் டீ'யின் வீரியம் சற்று நேரத்துக்குமுன்புஒன்றுமில்லாமல்போய்விட, மருதுவுக்கு மயக்கமே வரும் போலிருந்தது.

காலையில் புறப்படும் போதே அபசகுனம் போல வாய் வைத்தான் வடிவேலு. அட்சரம் பிசகாமல் அப்படியே தான் நடந்திருக்கிறது.

''திங்கக் கிழமை காலையில ஏழுமணிக்கெல்லாம் டாண்ணு அலுமினியக் கம்பெனி மெயின் கேட்டிலே வந்து நின்னுடு! உன் வேலைக்கு நாளுச்சு!''

இப்படி வரிந்து கட்டிக் கொண்டு வாய் கிழியப் பேசிய மன்னாருவைத் தேடித்தேடிக் கண்கள் சலித்துப் போனதுதான் மிச்சம். ஆள் அட்ரஸே இல்லை. யந்திரத்தனமாய் ஆட்களை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்த ஓரிரு மேஸ்திரிகளை விசாரித்ததில்மருதுவுக்குப் பரிச்சயமில்லாத யாரோ சிலரைத்தான் அவர்களால் அடையாளம் காட்ட முடிந்தது. ஒரிஜினல் மன்னாருவைப் பார்க்க முடியவில்லை.

மன்னாருவின் அங்க லாவண்யங்களை விளக்கமாக எடுத்துச் சொல்லி விசாரிக்கும் அளவுக்கு மருதுவுக்கு விவரம் போதாது. காலையில் வயலுக்குள் இறங்கினால் பொழுதோடு கூலி வாங்க வரப்பில் ஏறுவான்.

இடையே யாருடனாவது சிரித்துப் பேசுகிறான் என்றால் அது செண்பகமாகத்தான் இருக்க முடியும். கட்டி வராத இந்தக் கூலியை வாங்கிக் கொண்டு இன்னும் வடிவேலு பேசிவிடும் வயல்களில் மட்டுமே வேலை செய்கிறான் என்றால் அதற்குக்காரணம் இந்தச் செண்பகம்தான்.

உதடு பிரியாத புன்னகையில் இவன் உள்ளத்தைக் கட்டிப் போட்டிருப்பவள். செண்பகம் வேலைக்கு வராத நாட்களில் மருதுவிடம் ஏதோ ஒரு மந்தத்தன்மையைப் பார்த்து வடிவேலு பலமுறை சத்தம்போட்டிருக்கிறான்.

''ஆயி அப்பன் இல்லாத பயலாச்சேன்னு நான் வேலை குடுக்கறேன். இவன்எவளையோ நெனைச்சுக்கிட்டு வேலைக்குத் துரோகம் பண்றான்.''

செண்பகம் மாறிவிட்டாள்!



ஜெரா

அடிக்கடி வடிவேலு சலித்துக் கொள்ளும் போதெல்லாம் மனத்தில் ஏற்படும் சங்கடம் செண்பகத்தைப் பார்த்தசணமே சந்தோஷமாக மாறி விடுகிறதே! அது எப்படி? மருதுவுக்கே இந்த விஷயத்தில் ஆச்சரியம் தான். அப்படியென்ன செண்பகம் இவனுக்காகச் செய்து விட்டாள்! ஒன்றுமே இல்லை!

யாருடனும் ஒட்டாமல் ஒதுங்கி நிற்கும் இவனிடம் வலிய வந்து பேசுவாள். இறுகிப் போன இவன் முகத்தில் பூவாகப் புன்னகையை மலர வைப்பாள்.

செண்பகத்தின் தலையில் பூச்சரம்தொங்கிக் கொண்டிருக்கிறது என்றால் மருதுவின் பாக்கெட் காலி என்பதைச் சொல்லாமலே புரிந்து கொள்ளலாம். அவள் தினத்துக்கு ஒன்றாக முடிந்துகொண்டு வரும் கலர் டேப்பிலிருந்து, விதம் விதமாகக் கட்டிக் கொண்டிருக்கும் நூல் புடவை வரை ஏதாவது ஒன்றில் மருது சம்பந்தப்பட்டிருப்பான்.

பட்டாம்பூச்சி உருவம் போட்ட சடைப்பின்னை அவளுக்குப் பிடிக்கிறது என்று, பழங்கோட்டையை விட்டு சர்வசாதாரணமாக வெளிவராத மருது நங்கவள்ளி சந்தையில் பல மணி நேரம் அலைந்திருக்கிறான்.

வேலை நேரத்திலும் அப்படித்தான்! வடிவேலு பார்க்கும் போது மட்டும்தான் செண்பகம் வேலை செய்வதாக 'பாவ்லா' பண்ணிக் கொண்டிருப்பாள். அவன் அந்தண்டைப் போனதுமே அவள் வேலை முழுவதும் இவன் தலையில்தான். மருது சலித்துக் கொண்டதே இல்லை.

''இதா எத்தினி நாளைக்குத்தான் இந்த வயக்காட்டைக் கட்டிக்கிட்டு அழுவே! உனக்கு இருக்கிற உடம்புக்குக் கூப்புட்டு வேலை குடுப்பான் — மேட்டூரிலே ஏதாவது கம்பெனி வேலையா தேடிக்கோயேன் — எல்லாத்துக்கும் சவுகர்யமா இருக்கும்.''

செண்பகம் சொல்லிவிட்டாள் என்பதற்காக அன்றிலிருந்து அவன் பார்த்தவர்களிடமெல்லாம் 'கம்பெனி வேலைக்குக் கையேந்தத் தொடங்கினான். 'கம்பெனி வேலை' எங்கேயோ காய்த்துத் தொங்குவதாக அவனுக்கு நினைப்பு!

ரொம்ப காலத்துக்குமுன்பு மேட்டூருக்குப்போய்விட்டுஅவ்வப்போதுஊருக்குள் தலைகாட்டும் மன்னாரு ஒருவழியாக மாட்டிக்கொண்டதும் மருது விடவில்லை. கவுண்டர் கடையில் போண்டாவும், டீயும் வாங்கிக்கொடுத்துச் சரிக்கட்டி விட்டான்.

மன்னாருவும் நன்றிக் கடனை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, கம்பெனி வேலை வாங்கித் தருவதாக இவனுக்குக் கையடித்துச் சத்தியம் செய்து, நாள் குறித்துத் தந்து விட்டு, செலவுக்கும் ஐந்து ரூபாய் வாங்கிக் கொண்டு பஸ் ஏறிவிட்டான்.

அதற்குப்பின் மருதுவுக்கு அடிக்கடி கம்பெனிக் கனவுகள் வரத்தொடங்கின.


செண்பகம் நூறு ரூபாய் கேட்டபோது, மறுநாள் வடிவேலு முதலாகப் பல இடங்களில் தலையைச் சொறிந்தும் மருதுவால் பணம் புரட்ட முடியவில்லை. செண்பகத்துக்குத் தயக்கத்தோடு சாக்குச் சொல்ல வேண்டியதாகி விட்டது.

அடுத்தநாள் செண்பகம் இவனிடம் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை —அடுத்த சில நாட்கள் அவள் வேலைக்கே வரவில்லை.

மருது ரொம்பவும் கஷ்டப்பட்டான். மண்வெட்டியைப் பிடிக்க மாட்டோம் என்று கைகள் அடம் பிடித்தன. வயலுக்குள் இறங்கக் கால்கள் தயங்கின.

செண்பகம் வராமல் போனால் இனி எந்த இயக்கமும் இல்லை என மூளை எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்ப மருது ஒரு முடிவுக்கு வந்தான். பக்கத்து ஊரிலிருக்கும் செண்பகத்தை அவள் வீட்டிலேயே சந்தித்து விடுவது! எப்படி?

மன்னாருவைப் பார்த்து 'கம்பெனி வேலை' வாங்கிக் கொண்டு, அப்படியே முகம் மறந்து





கண் ஒளி பெற வழி காட்டிடுவீர்!

நேத்ரகல்யாண்

சூப்பர் பம்பர்

சந்த் பரமானந்த் பிளைண்ட் ரிலீ:ப் மிஷின்
உதவி நிதிக்காக!

WIN Rs 7.40 CRORES

60 முதல் பரிசு ரூ 5 லட்சம் வீதம்

120 இரண்டாவது பரிசு ரூ 1 லட்சம் வீதம்

600 மூன்றாவது பரிசு ரூ. 10,000 வீதம்

6,000 4வது பரிசுகள்
ரூ. 500/- வீதம்
(குலுக்கல் கடைசி 3 எண்களில்)

60,000 5வது பரிசுகள்
ரூ. 50/- வீதம்
(குலுக்கல் கடைசி 2 எண்களில்)

6 லட்சம் 6வது பரிசுகள்
ரூ. 20/- வீதம்
(குலுக்கல் கடைசி எண்ணில்)

மொத்த விற்பனையாளர்கள் :
ஜாஸ்மின் & கோ.
புது தில்லி-110 001.

ஆர்கனைசிங் ஏஜெண்ட் :
15, ... புது தில்லி-110 001
டெலிபோன் : 310374, 311209

6 வரிசைகள் டிக்கட் ரூ. 20/- மட்டுமே

60% பரிசாக வழங்கப்படுகிறது

குலுக்கல் நாள் **22-11-84**

சூப்பர் ஸ்டாக்கிஸ்ட்: பிரியா லாட்டரி ஏஜென்ஸிஸ், 160, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-600 005. பாண்டிச்சேரி ஸ்டாக்கிஸ்ட்: **M/s D. R.** ராஜசேகர்,
பெங்களூர் ஸ்டாக்கிஸ்ட்கள்: **M/s** மஹாலட்சுமி ஹால், **M/s** விஷ்ணு ஏஜென்ஸிஸ், **M/s** வாசுதேவ் ராஜ்னி, **M/s** பாலாஜி ஏஜென்ஸிஸ், **M/s** சுகால் லாட்டரி ஏஜென்ஸிஸ்.

போன அவனுடைய 'ஆத்தாளின்' வெள்ளிக் காப்புகளை, மேட்டூர் டவுனில் விற்றுப்பண மாக்கிக் கொண்டு, ''உன் கோபத்துக்குக் காரண'மான காசு இந்தா செண்பகம்'' என்று நேரிலேயே அவளிடம் நீட்டிவிட வேண்டியது!

அதிகாலையில் வடிவேலுவை எழுப்பி, மேட்டூர் போய் மன்னாருவைப் பார்த்து கம்பெனி வேலையை ஒப்புக் கொள்வதாகவும் இன்றோடு வயல் வேலைக்கு முழுக்குப்போடுவ தாகவும் சொன்னதும் அவன் மருதுவை ஏற இறங்கப் பார்த்தான். கேலியாகக் கொஞ்ச நேரம் சிரித்துவிட்டு ''ஏண்டா இருக்கறதை வுட்டுட்டு பறக்கறதைப் புடிக்கறே! அந்த மன்னாரு எங்கே உன் கண்ணுலப் படப் போறான்! கடைசிலே பஸ்ஸை'க்குக் கூடக் காசில்லாமல் பொடி நடையாத்தான் ஊடு வந்து சேரப் போறே! ஆமா!''

என்று ஆசீர்வதித்து அனுப்பி வைத்தான். அவன் சொன்னது போலவே ஆகிவிட்டது. கனமான வெள்ளிக் காப்பு, தொண்ணூற் றெட்டு ரூபாய்க்குக் கைமாற, பஸ்ஸு'க்காக வைத்திருந்த இரண்டு ரூபாயைக்கொண்டு செண்பகம் கேட்ட தொகையைச் சரிப் படுத்திக் கொண்டான் மருது. எஞ்சிய சில்லறையில் டீயைக் குடித்து, மன்னாரு தந்த ஏமாற்றத்தைத் தணித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தவன்தான்... இதோ... இந்த நிமிஷம் வரை நிற்கவே இல்லை—

சடசடவென்று மழைத் துளிகள் சிதறித் திடீர் சண்டித்தனம் புரியவே, எழுந்து வேகமாகக் கால்களை வீசிப் போட்டான் மருது. அவன் கை பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டது.

தட்டிக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்த சண்பகம் தெப்பலாக நனைந்து போய் நின்று கொண்டிருந்த மருதுவைப் பார்த்ததும் உதட்டைச் சுளித்துக்கொண்டு, ''என்னய்யா இவ்ளோ தூரம்'' என்றாள்.

மருது 'ஹி' என்று இளித்துக் கொண்டு மண் காவி படிந்து போன பழைய பாலித் தின் காகிதத்தில் சுற்றப்பட்டிருந்த அழுக்கு நோட்டுக்களை நீட்டினான்.

''பணம் கேட்டியே — கொண்டாந்துருக் கேன். இப்ப உனக்குக் கோவமில்லியே சண்பகம்! — அடுத்த வாரத்துலே எனக்குக் கம்பெனி வேலை கூடக் கெடைச்சுடும்.''

கண்களில் திடீர் வெளிச்சம் மின்ன அதை வாங்கிக் கொண்ட சண்பகம் அவனை உட்காரக் கூடச் சொல்லவில்லை.

''ஏய்யா இந்தப் பணத்தை கடனா வச்சிக்கிடவா, இல்லே உன் அன்பளிப்பா வச்சிக்கிடவா?''

''உன்கிட்டே போயி 'கடன்'னு சொல்ல மனசு வருமா சம்பகம்?''

''அப்ப உம்பேர்லே 'மொய்' எழுதிட றேன் — கல்யாணத்துக்கு சண்டிப்பா வந் துட்டுப் போ.''

மருதுவுக்கு'பக்'கென்றது...''கல்யாண'மா செம்பகம்... நீ...''

செண்பகம் 'களுக்'கென்று சிரித்தாள்—

வருவாய் பெருக...

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்

போட்டி: 26



ஆபீஸ் வேலைக்குச் சென்றுதான் சம்பாதிக்க வேண்டும் என்பதில்லை. வீட்டிலிருந்த படியே பல பெண்கள் வருவாயைப்பெருக்கிக்கொள்கிறார்கள். நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒரு பெண்மணியோ அப்படிச் சாமர்த்தியமாகச் செயல்படுகிறீர் என் றால் அதைக் கீழே எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப் புங்கள். உறை மீது ''வருவாய் பெருக...'' என்று குறிப்பிடுதல் அவ சியம். பிரசுரமானால் பரிசு. ஒருவ ருக்குக் குலுக்கல் முறையில் பட்டுப் புடவை.

முடிவு தேதி: 12.11.84.

இன்னும் 27 பட்டுப் புடவைகளே பாக்கி. அதில் ஒன்றேனும் நீங்கள் பெற வேண்டாமா? வாரம் தவறாமல் போட்டி களில் பங்குபெறுங்கள்.

என் பெயர் : ....

விலாசம் : ....

....



வைட்டமின்கள்

தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை



''உனக்குத் தெரியாதில்லே — நாளன்னிக்கு காலேலே மேச்சேரி காளியா கோயில்லே எனக்குக் கல்யாணம் — மாப்பிள்ளை யார் தெரியுமா? நம்ம... மொதலாளி தான்.''

பச்சை மண்ணில் மண்வெட்டி இறங்கியதைப் போல ஆழமான வடு! — அடித்துப் போய் விட்டான் மருது!

''யா... யாரு... வடிவேலுவா?''

''ம்க்கும்.''

'' அவனுக்குத்தான் கண்ணுமலமாயிக் குழந்தை குட்டி எல்லாம்...''

''இருந்தா என்னவாம்! ஆசையாக் கேட்டாரு — அவரு இட்ட சோத்துக்கும் சுகத்துக்கும் குறைச்சல் இல்லே! தலை யாட்டிப்பிட்டேன்.''

வெளியே விழுந்து கொண்டிருந்த மழைத் துளிகள் இரும்பு குண்டுகளாக மருதுவின் தலைமீது தாக்கின.

தாயின் மடியை முட்டிக்கொண்டிருந்த கன்றுக்குட்டியைப் பலவந்தமாக இழுத்துப் போய் வேறிடத்தில் கட்டிவிட்டு, கலயத்தோடு பால் கறக்க உட்காரவும், அது முரண்டு பிடிக்கவும், அருகிலிருந்த கம்பால் அதை இரண்டு சாத்து சாத்தி அடக்கி விட்டு மீண்டும் அந்த ஆள் பால்கறக்கவும், எதிர்த்து எதுவும் செய்ய முடியாமல் அது ''ம்ம்ஹா'' என்று ஈனமாக அலறவும், யந்திரமாக இயங்கிக் கொண்டிருந்த மருது அதைப் பார்த்துச் செயலற்றுப் போய் மண்வெட்டியை இறக்கத் தோன்றாமல் கொஞ்ச நேரம் அப்படியே நின்று விட்டான் —

பரிதாபத்துக்குரிய அந்த ஜீவனுக்கும், தனக்கும் ஏதோ பெரிதாகச் சம்பந்தமிருப்பது போல ஒரு சுழிவிரக்கம் சுரந்து நீராய்க் கண்களை மறைத்தது.

''படபடன்னு வேலையை முடிக்காம இப்பிடிச் செக்குமாடு மாதிரி ஒரேஇடத்தை சுத்திறு ஆச்சா — வாங்கற கூலிக்கு வஞ்சனை பண்ணக் கூடாது.''

சட்டென்று நிமிர்ந்து அவளைப் பார்த்தான் மருது — தலை நிறைய மல்லிகை, வாய் நிறைய வெற்றிலை, கழுத்தில் அட்டிகை, உடம்பில் நைலக்ஸ், காலில்சலங்கை இத்தனையும் ஓர் அந்தஸ்தைக் கொடுக்க இடுப்பில் கைவைத்தபடி நின்றுகொண்டு ''என்னய்யா முறைக்கறே!'' என்றாள் செண்பகம்!

மருது தலை குனிந்து கொண்டான் —சே! எப்படிப்பட்ட மாற்றம் இது! முன்பெல்லாம் அவளைப் பார்க்கா விட்டால் அவனால் வேலை செய்யவே முடியாது! ஆனால் இப்போது பார்த்து விட்டால் போதும் வேலையே ஓடாது! ஏனென்றால்...

அப்போது அவள் இவன் துயரங்களைப் பகிர்ந்து கொண்ட பங்காளி — ஆனால் இப்போதோ இவனைத் தூண்டிலாகப் பயன் படுத்தும் முதலாளி!



UMA FEATURES

ராகமாலிகா பட்டு சேலைகள்

சுகன் ஆர்கேட்,

நெ. 12பி, நாகேஸ்வரராவ் ரோடு, பனகல் பார்க் எதிரில்

தியாகராய நகர், சென்னை-600 017

(ஞாயிறு கடை உண்டு)

தெரிந்துகொள்ளுங்கள்

எந்த மருந்திலுமே சில அபாயங்கள் உண்டு. மருந்துகள் உயிரைக்குடிக்க வல்லவை. எந்த மருந்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது நிச்சயமாகத் தெரிந்தால் மட்டுமே பயன்படுத்துங்கள்.

- தேவைப்பட்டால் மாத்திரமே மருந்துகளைப் பயன்படுத்துங்கள்.
- எந்த மருந்தையும் எப்படிப் பயன்படுத்த வேண்டும், அதற்கான எச்சரிக்கை என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- சரியான அளவுதான் பயன்படுத்துகிறோம் என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.
- மருந்து பலன் தராவிட்டாலோ பிரச்சினைகளை ஏற்படுத்தினாலோ அதை நிறுத்தி விடுங்கள்.

வைட்டமின் சத்து பெற சிறந்த வழி



- சந்தேகம் ஏற்பட்டால் சுகாதாரப் பணியாளரின் உதவியை நாடுங்கள். (நகரங்களில் இருப்பவர்கள் நல்ல மருத்துவர்களை நாடலாம்.)
- எப்போதுமே மருந்தினைக் காலாவதிதேதியைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். காலாவதியான மருந்தைக் கொடுப்பது நன்மையை விட தீமையையே விளைவிக்கும்.
- தேவைப்பட்டால் மட்டுமே மருந்து சாப்பிட விரும்புவதாக டாக்டரிடம்கூறுங்கள். இது உங்கள் பணத்தை மிச்சப்படுத்துகின்றது. உங்கள் உடல் நலத்திற்கும் பாதுகாப்பானது.

மிகுந்த ஆபத்தை விளைவிக்கும் தவறான மருந்துப் பிரயோகம்

- **க்ளோரோம்ஃபினிக்கால்** (க்ளோரோமைசிடின்)— டைஃபாய்டு போன்ற மிகக் கடுமையான நோய்களுக்கு மட்டுமே பயன்படுத்துங்கள். பச்சிளம் குழந்தைகளுக்கு ஒரு போதும் இதைக் கொடுக்காதீர்கள்.
- **ஊசி போடுதல்:** மருந்து சாப்பிடுவதை விட ஊசி போட்டுக் கொள்ளுதல் சிறந்தது என்று பரவலாகக் காணப்படும் நம்பிக்கை **சரியானதல்ல.** பெரும்பாலான மருந்துகள் உட்கொள்ளப்படுவதைவிட ஊசி மூலம் செலுத்தப்படும்போது மிகவும் ஆபத்தானவையாக இருக்கின்றன.
- **பெனிசிலின்** அடிக்கடி பென்சிலினைப் பயன்படுத்துதல் மிகப் பெரிய தவறு. சிலருக்குப் பென்சிலின் ஆபத்தானது. அதனைப் பயன்படுத்துவதற்கு முன்பு அதிலடங்கியுள்ள அபாயங்களையும் அவற்றுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள்.
- **பெனிசிலினோடு ஸ்ட்ரெப்டோமைசின் கலந்த ஊசி மருந்துகள்:** இவை கடுமையான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம். காது கேளாதபடி போகலாம். சிலசமயம் மரணமும் நேரலாம். காச நோய் சிகிச்சைக்கு மட்டுமே ஸ்ட்ரெப்டோமைசின் கொடுக்கவும்.
- **வைட்டமின் மற்றும் ஈரல் டானிக்:** அபூர்வமான சில சமயங்கள் தவிர இவை ரத்த சோகையை நீக்க அல்லது சோர்வைப் போக்கப் பயன்படுவதில்லை. இவற்றைவிட இரும்புச் சத்துக்கொண்ட மாத்திரைகள் சிறப்பான பலனைத் தருகின்றன. வைட்டமின்களுக்குப் பதிலாகச் சத்துணவைக் கொடுப்பது அதிக பலனைத் தரும்.
- **மலமிளக்கிகளும் பேதி மருந்துகளும்:** இவை எப்போதுமே நன்மையை விட அதிகத் தீமையையே விளைவிக்கின்றன.

ஆதாரம்: டேவிட் வெர்னர் எழுதிய நூலின் தமிழாக்கம்: 'டாக்டர் இல்லாத இடத்தில்.' பதிப்பகம்: க்ரியா, 268, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை—14. விலை ரூ. 40 -

நவீன மருந்துகள் நல்லதும் கெட்டதும்



காட்டன் பெட்டிங் கபாலி

சரோஜா கிருஷ்ணசாமி

"கல்யாணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்பார்கள். ஆனால் இந்தப் பெண்ணின் திருமணமோ, ஐஸ் ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷனில் நிச்சயமானது. அப்பொழுது சென்னை நகரமெங்கிலும் தொத்து நோய் போல் "காட்டன் பெட்டிங்" பரவியிருந்தது. போலீஸார் முழுமூச்சுடன் அதை அடக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

சென்னை திருவல்லிக்கேணி ஏரியாவில் "காட்டன் பெட்டிங் கபாலி" பிரபலமான புள்ளி. 1956-ம் வருடம் பிப்ரவரி மாதம் 6-ந் தேதி திங்கட்கிழமை மாலை 7 மணி அளவில் ஐஸ் ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷனில் சப் - இன்ஸ்பெக்டரிடம் சென்றான் கபாலி.

"என்ன சார், இப்படி ரொம்பக் கஷ்டம் கொடுக்கறியே. 10 பெரிய நோட்டு வெச்சுக்க சார். நீ நம்ப பேட்டையிலே ரெயிட் பண்ணாதே. கண்டுக்காதே சார், தங்கச்சிக்கு கண்ணாலம் பேசறேன்னு கேள்விப்பட்டேன். மேலே வேணுமின்னாலும் தரேன்" என்றான்.

போலீஸ் வட்டாரத்திலேயே நேர்மைக்கும் நாணயத்திற்கும், திறமைக்கும் பெயர் போன சப்- இன்ஸ்பெக்டர், "கபாலி, என் தங்கச்சி கல்யாணமே ஆகாமல் கன்யாகுமரி அம்மன் மாதிரிக் கன்னியாகவே இருந்தால் கூடக் கவலையில்லை. ஆனால் நீ தருவதாகச் சொல்லும் 10 ஆயிரத்தில் ஒரு பைசா கூட தொட மாட்டேன். என் தங்கச்சியும் லஞ்சம் வாங்கிய பைசாவில் தாலி கட்டிக் கொள்ள மாட்டாள். நான் உன்னை லாக் அப்பில் தள்ளுவதற்குள் மரியாதையாக வெளியே போய் விடு" என்று கத்தினார்.

"நீ இந்த ஜன்மத்திலே தங்கச்சிக்குக் கல்யாணம் கட்ட மாட்டே சார்" என்று சாபம் கொடுத்து விட்டுப் போனான் கபாலி.

இதுவரை நடந்த சம்பாஷணைகளைக் கேட்டுக் கொண்டு அங்கு உட்கார்ந்திருந்தார் சப் - இன்ஸ்பெக்டரின் நண்பர்.

"என் சார், உங்களுக்கு ஒரு தங்கை இருப்பது இதுநாள் வரை எனக்குத் தெரியாதே" என்றார், அந்த வாலிபர்.

"ஆமாம். என் தங்கைக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். ஆனால் அதற்காகத் தப்பான வழியில் பணம் சம்பாதித்து, கல்யாணம் செய்து கொடுக்க விரும்பவில்லை" என்றார்.

உடனே அந்த வாலிபர் "சார், எந்த கஷ்டம் வந்தாலும், லஞ்சம் வாங்க மாட்டேன் என்று கூறும் உங்கள் உன்னதமான குணத்திற்காகவே, நானும் ஒரு பைசா கூட வரதட்சிணை இன்றி உங்கள் தங்கையை மணந்து கொள்ளத் தயார்" என்றார். சொன்னபடியே அதே வாரத்தில் 1956-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதி திருநீர்மலையில் மிக எளிய முறையில், எந்த விதமான ஆடம்பரமும் இன்றி, பத்திரிகையில் விளம்பரம் பண்ணாமல், போட்டோ எடுத்துப் பத்திரிகையில் போடாமல், அரசு விருதுகள் எதையும் எதிர் பார்க்காமல், அந்த சப் - இன்ஸ்பெக்டரின் தங்கையை, அந்த வாலிபர் மணந்து கொண்டார்.

அது போகட்டும். அந்த அதிர்ஷ்டசாலிப் பெண் யார் என்று கேட்கிறீர்களா? அது நானேதான்!



வட்டமேஜை



பாலசந்தரையே நம்பியிருக்கிறோம்!

● பாலசந்தர் மீது எனக்குள்ள தனிப்பட்ட மரியாதையை நான் பல்வேறு தருணங்களில் பல்வேறு புனை பெயர்களில் எழுதிக் காட்டி வந்திருக்கிறேன். இப்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கிற விமர்சனத்தில் கூட கதை அமைப்பையும் தொழில்திறமையையும் பற்றி 'பட்டவர்த்தனமாக' நல்லபடியே குறிப்பிட்டிருக்கிறேன்.

இவைகளை அறிந்து கொள்ளாத திரு. சௌந்திரராஜனின் அறியாமை என் தவறல்ல.

சமயுணர்வும் தொழில் அறிவும் அற்ற ஒருவர் மூடத்தனமான சினிமா எடுப்பதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால் பாலசந்தரைப் போன்று நல்ல இலக்கியம், நல்ல சினிமா இவற்றை அறிந்த, தொழில் தெரிந்த ஒருவர் கமர்ஷியல் நோக்கம் கருதி, தரம் குறைந்த படத்தைத் தயாரித்தால் அது எத்தனை அநீதியானது? ஆபத்தானது? (இவை தவிர இந்தப் போக்கு ஒரு தனிமனிதனின் integrity குறித்த கேள்விகளையும் எழுப்புகிறது. அது வேறு பிரச்சினை.)

அச்சமில்லை, அதன் சமகாலத்தில் வெளியாகியிருக்கிற சமூக விமர்சனப் படங்களுடன் (உ-ம்: அர்த் சத்யா) ஒப்பிடுகையில் மாற்றுக் குறைந்ததுதான். அவற்றின் ஆழமும் சின்சியாரிட்டியும் இதில் கிடையாது.

சாதனைகளைப் பற்றிப் பேசுகிறவர்கள் ஒன்று ஞாபகம் வைத்துக் கொள்ளட்டும். ஐம்பது வருடங்களுக்கு மேலாகத் தமிழ் சினிமா தயாரிக்கப்பட்டு வருகிறது. எனினும் உலகம் ஒப்புக் கொள்ளக் கூடிய, மரியாதை செலுத்த முன் வருகிற ஒரு படத்தையும், டைரக்டரையும் பாலசந்தர் உட்பட இதுவரை தரவில்லை. நம்மைவிடக் கலாச்சார, தொழில் நுணுக்க, அனுபவ, பொருளாதார ரீதியில் பிற்பட்ட தேசங்களும் மாநிலங்களும் இதைச் சாதித்திருக்கின்றன.

இதைச் சாதிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் பாலசந்தரிடம் உண்டு. இது நிறைவேறுகிற போது, அவரைப் பகிரங்கமாக, பட்டவர்த்தனமாகப் பாராட்டலாம். அதுவரை செல்லம் கொடுத்துச் சீரழித்து விடாதீர்கள்.

சென்னை–20. மாலன்.

● "இது சில்லறைப் பிரச்சினை அல்ல" விஷயம் – ஒரு டவுன் பஸ்ஸில் பணியாற்றும் கண்டக்டர் (மயிலாடுதுறை) தனது பையில் உள்ள ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் போன்ற சில்லறைகளை எடுத்துச் சென்று கடைத் தெருவில் இருக்கும் ஸ்வீட் ஸ்டாலில் கொடுக்கிறார் – சில்லறை தருவதற்குப் பதிலாக ஸ்வீட் ஸ்டால் காரர் ஸ்வீட் பொட்டலம் கட்டித் தினமும் கொடுக்கிறார் – ஆனால் பஸ்ஸில் சில்லறை கேட்டால் கடுப்பாகப் பேசுகிறார் கண்டக்டர். சில்லறைப் பற்றாக்குறை இம்மாதிரி அநீதிகளுக்கு இடம் தருகிறது.

தொழுந்தூர். சி. சுப்பு.

● என் வீட்டருகே மளிகைக்கடைக்காரர், 5, 10, 20 எனப் பல்வகைச் சில்லறைக்கும் தபால் ஸ்டாம்புகளை வாங்கி வைத்துக் கொள்கிறார். மீதி சில்லறைக்குப் பதிலாக அவைகளை (தபால் ஆபீஸ் விலைக்கே) தருகிறார்.

சேலம்–1. வசந்த ராஜா.

● சைலஜா எழுதிய எதிர்வீட்டுக்காட்சிகள் என்ற சிறுகதையைப் படித்ததும் என்னையறியாமலேயே என் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

கோவை சீதா சந்திரன்.

● தஞ்சை ஜில்லா விவசாயிகள் வறட்சி, வெள்ளம், பூச்சிகள் தொந்தரவினிடையே குறுவை விளைச்சலை அமோகமாகப் பெருக்கியுள்ளார்கள். ஆனால் அரசு நிர்ணயித்த விலை கூட விவசாயிகளுக்குக் கிடைக்காத சூழ்நிலை நிலவி வருகிறது. அரசு இந்த ஆண்டு மிகக் குறைவான கொள் முதல் நிலையங்களே ஏற்படுத்தியுள்ளதால் நெல்லை கலபமாக அங்கு விற்க முடியவில்லை. தனியாரோ அரசு நிர்ணயித்த விலைகளுக்கு மிகக் குறைவாக (அதாவது குவிண்டாலுக்கு ரூ. 25 அல்லது ரூ. 20 குறைவாக)க் கேட்கின்றனர். விவசாயிகள் கடன், தாளடி நடவு, தீபாவளி செலவு போன்றவற்றிற்காக நஷ்டத்தில் விற்கிறார்கள். குறுவை நெல்லை நீண்ட காலம் வைத்திருக்கவும் முடியாது. எனவே நஷ்டத்தைத் தவிர்க்க ஒன்று சென்ற ஆண்டு போல எல்லா நெல்லையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும். அல்லது வெளி மாவட்டங்களுக்கு நெல்லை எடுத்துச் செல்ல வியாபாரிகளுக்கு உள்ள தடையை நீக்க வேண்டும்.

மேலப்பாலையூர். கமாலி.

கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)

போட்டிக்கதை 9

கலை

கே.ஆர்.முரளி

ஒரு நாட்டிய இராணியின் சலங்கை இசையாய் வரும் அந்த உளியோசை... குறுகலான அந்தச் சந்தின் தோற்றத்திற்குப் பொருந்தாத விதமாயிருந்த அந்த வெள்ளைக் காரத் துரை நடந்து கொண்டிருந்தார்...

மெதுவான ஓசை... ''கல், கல்'' என்று..

அதோ... அங்கிருந்து தான் அந்த இனிய ஓசை...

அந்தச் சிறிய வீட்டிற்குள்.

மெதுவான உளி ஓசை மட்டும்...

ஆஹா... எத்தனை விதமான தெய்வச் சிற்பங்கள்!

அந்தச் சிற்பக் கூடம்... இல்லை — அது எல்லாத் தெய்வங்களும் ஒரு சேர வந்து குடியமர்ந்து விட்ட கோயிலாகவே.... தேவ பூமியாகவே...

ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்தபடி உள்ள அவர் தான் இந்தத் தெய்வீக வடிவங் களைத் தன் கலை வண்ணத்தால் உயிர்ப்பித்துக் காட்டிய ஸ்தபதி...

இதோ — இந்த ராமர் சிற்பத்தின் முன்பு —ஆஹா! அந்தத் தெய்வீகப் புன்னகையும், குவிந்த மலர்மேல் பொன்கதிர் போல் அந்த இதழோரக் குழிகளிலிருந்து பொங்கி வரும் வெளிச்சக் காந்தமும், நிலம் பார்த்து ஒர விழி பார்க்கும் சீதையின் அருள் மயமான கனிவும், பணிவும், பெருமிதமாய்த் தம்பி லக்ஷ்மணனும், விழுந்து பணிந்திருக்கும் அனுமானும்...அயோத்திக்கு நம்மை இட்டுச் செல்லும்.

சேர்ந்தமைந்த அந்தச் சிற்பத்தின் ஒவ் வொரு பகுதியையும் தன் இரண்டு கைகளால்— தன் எல்லாவித உணர்வுகளால் —வருடிப் பார்த்து.

மெதுவாக அந்தப் புன்னகை இதழ்மீது தன் விரல்களை நகர்த்தி... ஆ! அப்படியே அதன் முன் விழுந்து நமஸ்கரிக்கிறார்....

அந்தச் சிற்பத்தை விட்டு நகர மறுத்து விட்டது மனம்...

எழுந்து நின்றவர்... அந்த ஒளிவீசும் ஸ்ரீராமனின் திருமுகத்தைப் பார்த்தபடியே நின்று கொண்டிருக்கிறார்...

சட்டென்று ஒரு வாரம் முன்பு இங்கே வந்திருந்த வெள்ளைக்காரத் துரையின் ஞாபகம் வந்தது.

''இந்தக் கலை அற்புதத்தைக் கோயிலில்— ஒரு இருட்டு அறையில் அடைத்து விடா தீர்கள்... என்னிடம் கொடுத்து விடுங்கள்..''

''அது எப்படி ஐயா... இந்தத் தெய்வச் சிற்பம் கோயிலுக்கென்றே உருவானது.''

உடனே படபடப்பாக, ''சிற்பியாரே, இப்படியெல்லாம் பேசிப் பேசி உங்கள் நாட்டுக் கலைஞர்களெல்லாம் ஒரு சின்ன வட்டத்துக்குள்ளேயே அடைந்து கிடந்தது போதும்.'' என்றார்.

அப்பப்பா — என்னென்ன சொல்லிவிட் டார்!

'கோயிலுக்குள் கலையைக் கொண்டு செல்வது சின்ன வட்டத்திற்குள் சிறை வைப்பதாமே?'

''உங்கள் கலைத் திறமையை அங்கே யார் ரசிப்பார்கள்? இதோ பாருங்கள்... நிறுத்தி வைத்த கூடத்தையே ஜொலிக்க வைக்கும் புன்னகை — இந்த அழகிய முகத்தையும் கூடத் திருநீறும், குங்குமமுமாய்ப் பூசிப்பூசி மறைத்து விடுவார்களே...''

''ஐயா, இப்படியெல்லாம் தயவு செய்து பேசாதீர்கள். நீங்கள் சொல்வது போலிருந் தால் எங்கள் நாட்டுக் கலைகள் இவ்வளவு பிரம்மாண்டமாய் வளர்ந்திருக்க முடியுமா? பக்தி என்பது...''

''ஸ்தபதி! கொஞ்சம் கேளுங்கள்! இந்தச் சிலையின் முகத்தில் தெரியும் இந்த இதழ்ப் புன்னகை போதுமே... இங்கே பாருங்கள், இந்த உயர்ந்த கலைப் பொக்கிஷத்தை அந்த இருட்டறையில் வைத்து விடா தீர்கள்...'' சிற்பி — இதை என்னிடம் கொடுங்கள்... தினம் தினம் இதை ஒரு அங்கமாக... அணு அணுவாக ரஸித்துக் கொண்டேயிருப்பேன்... ஒரு நல்ல கலைஞன் ஒரு நல்ல ரசிகனைத் திருப்திப்படுத்த வேண் டாமா... கலையைக் கடவுள் என்ற பேரால் மறைத்து வைக்கலாமா... அது பெரும் கொடுமையில்லையா...?''

இதைக் கோயிலுக்குத்தான் தரப்போகி றேன் என்று அப்போது பிடிவாதமாகச் சொன்ன போது — எத்தனை கோபம் —பட படப்பு — ஆதங்கம்!!

''போதும் நிறுத்துங்கள்... கோயில் கோயில் என்று இனிமேலும் சொல்லா தீர்கள்... அது கோயிலில்லை — சிற்பியின் நரகம்...''

''அந்த ஜனக் கூட்டத்தில் ஒருவராவது 'உங்களின்' இந்த அற்புதத் திறமையை அனுபவிக்கவா வருகிறார்கள்?''

''குடும்ப அவலங்களைச் சொல்லிப் புலம்பு பவரும், சொந்த ஆசாபாசங்களை முறை யிடும் கூக்குரலும், பாபவிமோசனத்திற்கு அலையாய் அலைந்து தவிப்பவரும்— ஆ!— அந்த இடத்தில் — உன்னதமான கலைவடிவத் தின் முன்னால் — சிரிப்பும் சந்தோஷமும்.

மௌனமேயான ஆனந்தமும் மட்டுமே கூத்தாட வேண்டிய அந்த இடத்தில் —

''ஒரே அழுகையும், அவலக் குரல்களும், ஒப்பாரியும்தான்...

''அதனால் தான் சொல்கிறேன்—இந்தச்சிற்பத்தைத் தயவுசெய்து என்னிடம் தந்து விடுங்கள். இதைப் பார்க்கின்ற, ஒவ்வொரு கணமும் போற்றிப்போற்றி ரசித்துக் கொண்டேயிருப்பேன்...!''

''ஐயா'' மனம் குழம்பிய ஸ்தபதி பேச முற்பட...

''வேண்டாம் — மறுத்து எதுவும் இப்போது தயவு செய்து பேச வேண்டாம்.. நான் மீண்டும் வரும் போது இதை என்னிடம் தருவது பற்றித் தெளிவான முடிவுடன் இருங்கள்... சென்று வருகிறேன்.''

சிற்ப வேலைக்கு இடைவெளி விட்ட நேரத்திலெல்லாம் அந்தப் பேச்சுக்கள் சிற்பியின் மனதில் கலக்கத்தை உண்டு பண்ணிக் கொண்டேயிருந்தன. இப்போது கூட, சிற்பத்தை முடித்து விட்டுப் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் வேளையிலாம் மனம் லேசாகக் குழம்பிக்கொண்டுதான் இருக்கிறது. 'ஏன், இன்னுமா குழப்பம் உன்மனத்தில்' என்று சீதை கடைக்கண்ணால் பார்ப்பது போல் இருந்தது; அப்படியே நால்வருமாக வானத்திலிருந்து இறங்கி நேரே வந்து கேட்பது போலிருந்தது.

இந்தச் சிற்பத்தின் அற்புதம் அப்படி...!

வாசலில் — உரிமையாளர் பெயரும் அழிந்துபோய், 'சிற்பக் கூடம்' என்ற சொல்லும்

அறிமுக எழுத்தாளர்



சிதிலமடைந்திருந்த தகர போர்டைப் பார்த்தபடியே நுழைந்தார் துரை.

''வாருங்கள், வணக்கம்...''

சிலைமுன் வந்து நின்றார் துரை...

அதிசயமாய் ஸ்தபதியைத் திரும்பிப் பார்த்து...

கண்களெல்லாம் தாரை தாரையாக...

''இப்போதாவது சிற்பத்தைத் தருகிறீர்களா?''

''இல்லை... நிச்சயமாகத் தரப் போவதில்லை.'' அதிர்ச்சியில் துரை எதுவும்பேசாமலிருக்க,

''இதை உங்களிடம் தந்ததாகவே வைத்துக் கொள்வோம். எப்போதாவது இதைவிட அழகான சிற்பத்தை நீங்கள் பார்த்தால் — அல்லது மற்றொரு சிலை அழகானதென்று உங்கள் மனம் நினைத்தால்— உங்கள் வீட்டு ரசனைக் கூடத்தில் இந்தச் சிற்பம் இரண்டாவது இடத்திற்குப் போய் விடும். அது உங்கள் தவறு இல்லை: மனித மனம் அப்படி. 'உங்கள் 'ரசனை' என்பது மாறக் கூடியது. ஆனால், இந்தச் சிலையைக் கும்பிட வரும் பக்தனின் பக்தி மாறாது: அதோடு கூட நாள்பட, நாள்பட வளருவது.

''எத்தனை அழகான சிற்பங்கள் வந்தாலும் இந்தச் சிலையைக் கோயிலின் மூலஸ்தானத்திலிருந்து அவன் நகர்த்தி வைக்கத் துணிய மாட்டான். கோயிலே சிதிலமடைந்தாலும்-ஏன் — இந்தச் சிற்பமே பழுதுபட்டாலும் இதன் மீதுள்ள அவன் பக்தி அடங்கி விடாது.''

''இருக்கட்டுமே. அங்கே கேட்கும் அவலக் குரல்களும், ஆசாபாசமே நிறைந்த புலம்பல்களும் இந்த ரசிகனின் கூடத்தில் இருக்காது'' — ஆதங்கமாய்த் துரை.

''அந்தக் கோயிலுக்குள் ஒரு தடவை சென்று நன்றாகப் பாருங்கள்'' என்றார் சிற்பி.

''துயரபாரம் நெஞ்சை அழுத்த, முன்னால் எரியும் தீப வெளிச்சத்தில் இந்தச் சிலையைக் கண்டு, கண்டதை அப்படியே மனத்திலேற்றி,

''தன் கண்களை மூடி அமைதி தேடி தியானம் அல்லது பிரார்த்தனை செய்யும் அந்த பக்தனின் மனக்கண் முன்னால் இந்தத் தெய்வச் சிலைதான் தெரிந்திருக்கும். எங்கு தேடியும் கிடைக்காத நிம்மதி அவனுக்குக் கிடைக்க இந்தச் சிற்பமே ஒரு ஆதாரமாகிறது:

''மந்திரம்ஒலிக்கும் சந்நிதானத்தில் நின்று ஒரு கணநேரம் இந்தச் சிலையைப் பார்த்து, கண்களை அவன் மூடும் போது இந்தச் சிலையாகத்தான் அவன் மனத்தில் கடவுள் உருவம் பெற்று உயிர் பெற்று வருகிறார்:

''ஆம்! சாதாரணனாகிய என் செயலில் பிறந்த இந்தச் சிலை மூலம்தான் எட்டாத கடவுள் அவனிடம் கிட்ட நெருங்கிவந்து ஐக்கியமாகிறார். அந்தத் தெய்வ சந்நிதானத்திற்குப் போவதால் தான் இந்தச் சிற்பம் முழுமை பெறுகிறது. வெறும் ரஸனையுடன் நின்றுவிட்டால் அது சிலையாகாது! தெய்வத்துடன் இணைந்துவிடும் போது தான் சிலை முழுமை பெறுகிறது: அது மனிதனைத் தெய்வமாக்கும்! நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள் — தெய்வீகம் கலந்தது தான் சிலை — குறிப்பாக பாரதக் சிலை.''

...ஸ்தபதியின் சிற்பகானம் நின்றது.

மெல்ல மெல்ல..., மனத்திலிருந்த எல்லா வித இருளும் விலகிப் போக — கண்கள் வழியே கரைந்தோட — மூடிய கண்களுடன்— துரை, ஸ்தபதிக்கும் தெய்வத்திற்குமாக மண்டியிட்டார்!

அன்புக் கணைகள்

''சர்ச்சைக்குரிய விஷயங்களை வெளியிடும் போது இரு தரப்பினருடைய அபிப்பிராயங்களையும் கேட்டு வெளியிடுங்கள். சேஷகோபாலன்: பக்கவாத்தியக்காரர்களைப் பற்றிக் கூறியவற்றை சுருதி வெளியிட்டது. அவை அவருடைய கருத்துக்கள். அவருடைய அபிப்பிராய சுதந்திரத்தை நான் மறுக்கவில்லை. ஆனால் சில பக்கவாத்தியக்காரர்களையும் அபிப்பிராயம் கேட்டுச் சேர்த்து வெளியிட்டிருந்தால் நியாயமாக இருந்திருக்கும். தராதரங்களை மதிப்பிடும் போது அவரவர் அனுபவம் என்ற வட்டத்துக்குள் இருந்து கொண்டுதானே மதிப்பிட முடியும். இதனால் ஒருவர் கருத்தை மட்டும் வெளியிடுவது அவ்வளவு சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது''—

இப்படிப் பேசியவர் லால்குடி ஜெயராமன். 'சுருதி' பத்திரிகையின் அப்தபூர்த்தி விழாவில் நடந்தது இச்சம்பவம். 'சுருதி' ஆசிரியர் பட்டாபிராமன் சொன்னார்: ''லால்குடி வில் போடுவார் என்று தெரியும். அம்பும் போடுகிறாரே!''

உடனே சளைக்காமல் பதிலளித்தார் லால்குடி — ''அன்பினால் தான் அம்பு போடுகிறேன்.''

14.10.84 அன்று நடந்த இவ்விழாவில் அன்புக் கணைகள் தொடுத்த லால்குடிக்கு முன்னும் பின்னும் இசை மற்றும் பரத நாட்டிய விற்பன்னர்களும், விமர்சகர்களும், போஷகர்களும் ஸ்ருதியையும் சங்கீத உலகில் பொன் விழாக் காணும் டாக்டர் எஸ். ராமநாதனையும், மிருதங்க வித்வான் நாகூர் அம்பி ஐயரையும் வாழ்த்திப் பேசினார்கள்.

○ பட்டாபிராமன்



நீங்கள் கேட்டவை தராசு



○ எஸ். கணேசன், கொடுமுடி.
? தமிழ் தெரிந்த நடிகைகளுக்குத்தான் தமிழில் வாய்ப்பு அதிகமா?
! தமிழே தெரியாத நடிகைகளுக்குக் கூட தமிழ் சினிமாவில் வாய்ப்பு அதிகம். தமிழ் தெரிந்த நடிகைகளுக்கு டி. வி. யில் வாய்ப்பு அதிகம்.

○ டி. ராஜேந்திரன், சென்னை-71.
? உங்களால் போற்றப்படும் சிறப்புமிக்க திருக்கோயில் எது? ஏன்?
! மனக்கோயில். காரணம் அதை நம்மை



○ ஏமாற்றம்



○ கவலை



○ கோபம்

இப்படி ஏமாந்து விட்டாரே ஸ்ரீகாந்த்?



○ சிரிப்பு



○ [illegible]

யன்றி வேறு யாரும் அசுத்தப்படுத்த முடியாது. எந்த விதத்திலும்.

○ என். கிருஷ்ணன், ஸ்ரீரங்கம்.
? கர்நாடக முதல்வர் அமெரிக்கா போகிறாராமே?
! அவர் பயணம் வெற்றிகரமாக முடியட்டும்; சிகரெட் பிடிப்போருக்கு எச்சரிக்கையாகவும் அமையட்டும் — பிரார்த்திப்போம்.

○ கொடுமுடி கணேசன், சேலம்
? அட்டைப் படத்துக்கும் அட்டை போட வேண்டிய பத்திரிகைகள் பற்றி...
! அட்டைப்படம் ஆபாசமாக இருந்தாலும் அட்டை போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அட்டைப்படம் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமானாலும் அட்டை போட வேண்டியுள்ளது. நீங்கள் எந்த வகையைக் குறிப்பிடுகிறீர்கள்?

○ ரம்யா, கோவை.
? ஊனமுற்றோருக்குத் தனி இடம் பேருந்தில் ஒதுக்கியும் அதனை உபயோகப்படுத்தாமலிருப்பது குறித்து...?
! சில ஊனமுற்றோர் தங்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படுவதை அகௌரவம் என நினைக்கின்றனர். மற்றவர்களுக்குச் சமமாக வாழ முடியும் என்று நிரூபிக்க விரும்புகின்றனர். இவர்கள் தனி இடத்தை உபயோகப்படுத்தாமலிருந்தால் அது பாராட்டுக்குரியது. சரி, ஒரு சம்பவம் கேளுங்கள். பஸ்ஸில் ஊனமுற்றோர் ஸீட்டில் உட்கார்ந்திருந்தேனா? அப்போது ஊனமுற்ற ஒருவர் ஏறினாரா? அவர் அமர நான் எழுந்து நின்றும், ஏற்கெனவே நின்றிருந்த ஒரு வாட்டசாட்டமான ஆசாமி நான் இறங்கப் போகிறேனாக்கும் என்று அந்த இடத்தில் டபக்கென்று உட்கார்ந்து விட்டார். எடுத்துச் சொன்னாலும் அசைந்து கொடுக்கவில்லை. இத்தகைய மன ஊனமுற்றோருக்குத் தனியிடம் நரகத்திலேனும் ஒதுக்கப்பட்டிருந்தால் சரி.

○ வலங்கை ஸ்ரீ. ராஜசேகர், வலையமாபுரம்.
? கவாஸ்கர் ஆட்டம் சிலுக்கு ஆட்டம் ஒப்பிடுக.
!

கவாஸ்கர்	சிலுக்கு
இலக்கணம்கொண்டு	இலக்கணம் இல்லை.
சுறுசுறுப்பு	அருவருப்பு
அழகு	அலங்கோலம்
கலை	கொலை

இப்படி வேற்றுமைகளே அதிகம் என்றாலும் ஒரு ஒற்றுமை: காப்டனுக்கு கவாஸ்கரை விட்டால் தேர்வாளருக்கு வேறு கதி இல்லை. கலெக்ஷனுக்குச் சிலுக்கை விட்டால் படாதிபதிகளுக்கு வேறு நாதி இல்லை.

○ என். உலகநாதன், லால்குடி.

? அறுவை ஜோக் ஒன்று சொல்லுங்களேன்?

! தூக்குத் தண்டனை நிறைவேற்றும் சமயம் குற்றவாளியிடம் கடைசி விருப்பம் கேட்கப்பட, ''ஒரு அறுவை ஜோக் சொல்ல ஆசை'' என்றான். அனுமதி வழங்கப்பட்டது. சொன்னான். பிறகு, ''உம்... இப்போ தூக்கிலிடுங்கள்'' என்றவாறே தண்டனையை நிறைவேற்ற வேண்டியவரை நோக்கித் திரும்பினான். அவர் இவன் ஜோக்கைக் கேட்டு விட்டுத் தாங்க முடியாமல் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார்! (உபயம்: நண்பர் . கே. ரகுராம்.)

○ எம். ஸ்ரீஹரி, கோவை.

? நரை முடியை மறைக்க என்ன முறையைக் கையாள்கிறீர்கள்?

! முதல் இழையாக நரை தோன்ற ஆரம்பித்ததுமே டை பண்ணவும் ஆரம்பித்து விடுங்கள் என்ற விளம்பர வாசகங்களை அப்படியே ஏற்றுக் கொண்டு கறுப்புச் சாயம் ஏற்ற ஆரம்பித்தவர்கள் படும் அவதிகளைப் பார்த்திருக்கிறேன். அடிவாரத்தில் வெள்ளையும் நுனியில் கறுப்புமாக, செம்பட்டை நிறமாக, என்றெல்லாம் சில நாளில் பார்க்கவே என்னவோ போலிருக்கும். எனவே அடிக்கடி டை போட வேண்டும். மாதக் கடைசியில் டை தீர்ந்து விட்டால் வேதனைதான். போதாக்குறைக்குப் பக்கத்திலே போனால் ஒரு மாதிரி பிடிக்காத வாசனை. இதனாலெல்லாம் நான் அந்த வம்பே வைத்துக் கொள்வதில்லை. கிழமாவதிலும் எழில் இருப்பதை உணர்ந்தால் மனக்கஷ்டமுமில்லை; பணமும் மிச்சம்; டை போடுகிற தொல்லையும் இல்லை.

○ உ. அசோக்பாபு, மணப்பாறை.

? பிரமிக்கத்தக்க வகையில் எழுதுபவரென்று நீங்கள் நினைத்த எழுத்தாளர்?

! பிரம்மா. மனுஷன் எப்படியெல்லாம் ஒவ்வொருத்தன் தலையிலும் எழுதிவைக்கிறான். மாண்டவருள் கல்கி. வாழ்பவருள்: சுஜாதா. இவ்வாண்டு கல்கி தீபாவளிமலர் கதையை முழுப் படித்து அசந்து போய் விட்டேன். கால் மணி நேரம் ஒரு வேலையும் ஓடவில்லை.

○ பா. தியாகராஜன், வேதாரண்யம்.

? தாங்கள் யாருக்கு 'சரண்'?

! பதவி ஆசை ஏதும் எனக்கில்லையாதலால் நான் யாருக்கும் 'சரண்' ஆக வேண்டியதுமில்லை. 'சரண்' ஆக விளங்க வேண்டியதுமில்லை.

○ கே. கணேஷ், சென்னை-6.

? என் மனைவி நான் கிழித்த கோட்டைத் தாண்டக் கூடாது? இதற்கு என்ன வழி?

! கோடு கிழிக்க உங்களுக்கு உரிமை ஏதும் இல்லை என்பதை உணர்ந்து கோடு கிழிக்காமல் இருப்பதுதான்.

○ எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி. ★

? போனஸ் இனாம் என்று நம்மைச் சொறிபவர்கள் பற்றி உங்கள் கருத்து?

! ஏதேது, நீங்கள் கேட்டதைப் பார்த்தால் இனாம் வாங்குவோருக்குக் கூடக் கட்டாய போனஸ் ஆண்டுதோறும் தரப்பட வேண்டும் என்பீர்கள் போலிருக்கிறதே! யார் கண்டது, இனாம் வாங்குவோரெல்லாம் ஒரு தொழிற் சங்கம் அமைத்துக் கொண்டு போனஸ் ஜோராகக் கொடிபிடித்துப் போராட்டம் நடத்தினால் கூட வியப்பதற்கில்லைதான். நிற்க, என் கருத்து: கார்ப்பரேஷன் துப்புரவாளர்களை ஆண்டுக்கு இருமுறையாவது காண முடிவதில் திருப்தி. முடிந்ததைக் கொடுத்தால் வாங்கிப் போகிறவர்களைப் பிடிக்கும். கொடுப்பதைத் துச்சமாகப் பார்த்து, 'வேண்டாம், நீங்களே வைச்சுக்குங்க' என்கிறவர்களைக் கண்டால் எரிச்சல் வரும். பத்து ரூபாய் மணி ஆர்டர் என்றாலோ, ஓட்டல் பில்லில் ஐந்து ரூபாய் பாக்கி என்றாலோ ஒரு ரூபாய்க்கு மட்டும் சில்லறையாகக் கொடுக்கும் ஆசாமிகளின் முன்யோசனை வியக்க வைக்கும். இனாம் வாங்குவதையே அகௌரவம் என்று எண்ணும் ஓரிருவரையும் எனக்குத் தெரியும். இவர்கள் நம் மனம்கோணாத விதமாகப் புன்னகையுடன் மறுதலிப்பார்கள்: இவர்களின் சுயமரியாதையைப் பாராட்டத் தோன்றும். சைக்கிள் தூதரிடம் கொடுத்தனுப்ப வேண்டிய அல்லது தபாலில் அனுப்ப வேண்டிய வருமான வரி ரீஃபண்ட் போன்றவற்றை சில எழுத்தர்கள் தாமே கொண்டுவந்து கொடுத்து விட்டு பெரிய மனித தோரணையில் கால்மேல் கால் போட்டு அமர்ந்து பேசிக் கொண்டே இருப்பார்கள். பத்து இருபது என்று வெட்டினாலொழிய நகர மாட்டார்கள். இத்தகைய கௌரவப் பிச்சைக்காரர்களை கொலை பண்ணி விடலாமா என்று எண்ணுமளவுக்கு ஆத்திரம் வரும்.

○ கலைஞர்தாசன், தேவகோட்டை.

? என்ன, ஸ்ரீகாந்த் இப்படி ஏமாந்து விட்டாரே?

! அவரை ஏமாற்றிய விஷமியின் செயல் கண்டிக்கப் படவேண்டியது.அருவருக்கத் தக்கது. வருத்தமளிப்பது என்பதில் எல்லாம் இரண்டாவது அபிப்பிராயத்துக்கே இடமில்லை என்றாலும் செய்வன திருந்தச் செய்த அந்தக் கில்லாடியின் சாமர்த்தியம் நம்மையும் மீறிய ஒரு வியப்புக் கலந்த பாராட்டைப் பெற்று விடத்தான் செய்கிறது!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

எம். அசோக்ராஜா,

அரவக் குறிச்சிப்பட்டி.

(முழு விலாசம் தேவை.)



அபாயம் வருகிறது!

சாலை சங்கீதம்

வாக்மேன் கருவியை உடலில் தொங்க விட்டுக் கொண்டு, இயர்ஃபோனைக் காதில் செருகிக் கொண்டு, சாலையில் மோபெட்டிலும், சைக்கிளிலும் போகும் இளைஞர்களையும் யுவதிகளையும் சென்னையில் இப்போது அதிகமாகக் காண முடிகிறது.

வெகு கவனத்துடன் காதுகளைத் தீட்டிக் கொண்டு போனாலே விபத்துக்கள் நேரிடும் இந்த நாளில், எமனைப் பாட்டுப் பாடி வரவேற்க இவர்கள் ஏன் துணிய வேண்டும்?

எதற்கும் போக்குவரத்துப்போலீஸாரிடம் இதற்குப் பதில் கிடைக்கும் என்று மியூசிக் அகாடமி எதிரே போக்குவரத்தைக் கட்டுப் படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த **இன்ஸ்பெக்டர் அய்யண்ணன்** அவர்களைக் கேட்டோம். (ஆமாம், 'போலீஸ் அடவு'களுக்குப் பெயர் போன அதே அய்யண்ணன்அவர்கள் தான்!)

''போக்குவரத்து விதிகளில் வாக்மேனை மாட்டிக் கொண்டு சாலையில் போகக்கூடாது என்று எனக்குத் தெரிந்து இதுவரை சட்டம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் வாக்மேன் கருவியே சமீபத்தில் வந்தது தானே? சாலையில் இப்படி பாட்டுப் போட்டுக் கொண்டு, பின்னால் வரும் ஹாரன் ஒலி கூடக் கேட்காமல், தங்களை மறந்துபோவது ஆபத்தானது -- என்பதை இவர்கள் உணர வேண்டும். ஏன், புதிதாக வந்துள்ள, பின்புறம் எஞ்சின் பொருத்தியுள்ள ஆட்டோரிக்ஷாக்களிலும் கூடப் பாட்டுக்கள் வைத்துக் கொண்டே ஓட்டுகிறார்கள். ஓட்டுநர் கவனம் முழுவதும் பாட்டில் இருக்குமா, சாலையில் இருக்குமா? விபத்தும் நேரிடலாம். போக்குவரத்துச் சட்டத்தில் இவற்றுக்குத் தடை ஏதும் இருப்பதாக நான் அறிந்த வரையில் இல்லை. கமிஷனர் ஐயாவுக்கு வேண்டுமானால் தெரிந்திருக்கலாம்...'' என்றார்.

ஓர் ஆட்டோரிக்ஷாக்காரரிடம் ''இப்படி மச்சான, வச்சுக்கடி; முந்தான முடிச்சுக் குள்ளே'ன்னு பாட்டை உங்க ஸ்டீரியோவுல போட்டுட்டு ஓட்டறீங்க; நீங்களும் கூடச் சேர்ந்து பாடறீங்க. இது தப்பு இல்லியா? உங்க வண்டியிலே வரவருக்கு ஆபத்து இல்லியா?'' என்று கேட்டோம்.

''ஏன் சார், ஏ.ஸி. கார்ல, ஸ்டீரியோவுல தம்தம்னு இங்கிலீஷ் மியூசிக் போட்டுக்கிட்டு ஓட்டறாங்களே பெரிய வீட்டுப் புள்ளைங்க. அவங்களை இந்தக் கேள்வி கேக்கக் கூடாது?''

அவர் கேட்பதிலும் ஓரளவு நியாயம் இருக்கிறது போல் தோன்றிற்று.

விவகாரத்தை விட்டுவிட்டு அட்டைக்கு வருவோம்:

குமாரி சசிகலா வைத்துக் கொண்டு பாட்டுக் கேட்கும் வாக்மேன் விலை முப்பத்தைந்து டாலர். குரு வேம்பட்டி சின்ன சத்யத்துடன் அமெரிக்காவுக்குக் குச்சிப்புடி நடனக் குழுவில் போன போது, நியூயார்க்கில் வாங்கினாராம். இங்கே விலை நானூறு ரூபாயிலிருந்து ஐநூறு ரூபாய் வரை ஆகிறது.

-சாருகேசி

அட்டை வண்ணப்படம்: **யோகா**

அடுத்த வாரம்

FREE FRANK FEARLESS!



பொன் பரமகுரு பேட்டி

பில் போட்ட சரக்கு

ஜானகி மணாளன்

“ஏன் இப்படிக் கூட்டம் போடற நீங்க...? கோதுமை ஸ்டாக் இல்லே...'' என்றார் குமாஸ்தா குருசாமி.

''இந்த ரேஷன் ஷாப்பில் எப்பப் பார்த்தாலும் 'இல்லே' பாட்டுத்தான்...'' என்று அலுத்துக் கொண்டார், கூட்டத்தில் ஒருவர்.

''என்னை என்ன ஸார் பண்ணச் சொல் றீங்க...? டெலிவரி எடுத்துக்கிட்டு வர, கடை ஆளு கருணாகரன் போயிருக்கிறாரு... வந்தால் தர்றதைப் பற்றி எனக்கு என்ன?''

''ஊ...ம் இனிமேல் அவரு எப்படி வர்றது... நீங்க எப்ப விற்கிறது...?''

ராமசாமியும் அந்தக் கூட்டத்தில் இருந்தார். உடனே அவர், ''யோ...வ் யாரை யாது? குமாஸ்தா தான் சொல்றாருல்ல...? மேல மேல என்னய்யா பேசிக்கிட்டே போறே?'' என்றார் சூடாக.

ராமசாமி ஒரு சமூகநலத் தொண்டர். எங்கு யாருக்கு உதவி தேவைப்பட்டாலும் தாமே முன்வந்து உதவுவார். எனவே எல்லாருக்கும் அவரிடம் கொஞ்சம் மதிப்பும் மரியாதையும் உண்டு. எனவே ''கோவிச்சுக் காதீங்க அண்ணே '' என்றவாறு பின்வாங்கி னார் அந்த மனிதர்.

அதே நேரத்தில் கிழக்கோடியில் இரண்டு மூன்று மூட்டைகளை ஏற்றிக் கொண்டு ஒரு வண்டி வருவது தெரிந்தது. உடனே அந்த மனிதர் ராமசாமியிடம் நகர்ந்து மெல்லச் சொன்னார்.

''ஏன் அண்ணே இந்த ரேஷன் ஷாப் புக்கு சப்ளை எடுக்கிற கிடங்கு மேற்கில் இல்ல இருக்குது... இந்த வண்டி எப்படிக் கிழக்கிலிருந்து வருது? நேராக ராஜ பாட்டையோட மேற்கேயிருந்துதானே வர ணும்...?'' என்று ஒரு புது ஐயத்தைக் கிளப்பினார்.

அந்த மனிதருக்கு, ராமசாமியின் காதில் இந்தச் செய்தியைப் போட்டுவிட வேண்டும் என்று, நீண்ட நாள் அவா. ஏனெனில், ராமசாமி மிகவும் நியாயமானவர். நேர்மை மிக்கவர். அநியாயத்தைப் பார்த்துக்கொண் டிருக்க மாட்டார். திருந்தாதவர்களைத் தண் டித்துத் திருத்தவும் முயற்சி செய்வார். அந்தச் செய்தி அவர் நெஞ்சில் ஆழப் பதிந்தது.

மூட்டைகள் இறக்கப்பட்டன. ரவையும், கோதுமையும் தேவைப்பட்ட வர்கள் வரிசையில் நிற்கலாயினர். வரிசை மெல்ல நகர்ந்து கொண்டிருந் தது.

ராமசாமியின் முறை. அவர் குமாஸ்தாவிடம் கார்டைக் கொடுத்து விட்டுக்கேட்டார். ''ரவை நல்லா இருக்குமில்ல...? சித்த இருங்க... உள்ளாற போயி சரக்கைப் பார்த்துட்டு வந்து...''

''அதுக்கெல்லாம் இதுவா நேரம்? கூட்டம் எதுக்கு நிற்கு துல்ல...? சட்டுனு சொல்லுங்க... என்ன வேணும்...?'' என்று குமாஸ்தா குறுக்கிட்டுச் சீறி விழுந்தார்.

''கோவிச்சுக்காதீங்க குருசாமி ஸார்... சரக்கைப் பார்க்காம எப்படி வாங்குவது? மூட்டை இப்பத்தானே வந்திருக்குது...?'' என்றார் ராமசாமி..

குருசாமி, ''சரி... போயி சரக்கைப் பார்த்துட்டு வந்து, வரிசையில போயி, கடைசியில நில்லுங்க...'' என்று மீண்டும் சீறினார்.

அதற்குள் கூட்டத்தில் நின்ற ஒருவர், ''ராமசாமி அண்ணே சரக்குக் கொஞ்சமாத் தான் இருக்குது... கியூவுல கடைசியில போனீங்கன்னா, சாமான் கிடைக்காமல் போனாலும் போயிடும்... பேசாம பில்லைப் போட்டுக்கிட்டு, உள்ளாற போயி வாங்கி டுங்க'' என்றார்.

ராமசாமி ஒரு கிலோ ரவைக்கும் ஒரு கிலோ கோதுமைக்கும் பில் போட்டுக் கொண்டார். உள்ளே போனார். ரவை சடைசடையாக ஒரே புழு... கறுப்புக்கறுப் பாக நிறைய செக்கான். கோதுமையும் வீணாகியிருந்தது. ஓட்டை விழுந்து, பாதிக் கோதுமை கூடாகியிருந்தது.

சாமான்களை நிறுத்துப் போடும் பெரு மாள் சொன்னார். ''வீட்டுக்குப் போயி, முறத்துல போட்டு ஒரு தட்டுத் தட்டி டுங்க... எல்லாம் சரியாப் போயிடும்...''

''ஆமாம், ஆமாம் எல்லாமே சரியாப் போயிடும் போல இருக்குதே... ம்...?'' என்று யோசித்த ராமசாமி, ''எனக்கு வேணாம்ப்பா, இந்தப் புழுத்த ரவையும் மக்கின கோதுமையும்...'' என்றார்.

அதைப் பெருமாள் ஏற்கவில்லை. ''பில் போட்ட பிறகு, எப்படி சார் நாங்க பில்லை ரத்து செய்வது?'' என்றவாறு அவற்றை ராமசாமி யின் தலையில் கட்டி விட்டார். வேறு வழியின்றி ராமசாமி அதை வாங்கிச் செல்ல வேண்டியதாயிற்று.

ராமசாமிக்கு இந்தப் பிரச்னையை அத் துடன் விட்டு விட விருப்பம் இல்லை. சம்பந்தப்பட்ட அதி காரியை அணுகிப் புகார் கொடுக்க விரும்பினார். கிளம்பிப் போனார். தன்னை ஒரு மக்கள் தொண்டன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவரை வரவேற்று அமரச்சொன்ன அதி காரி, விவரங்களை வினவினார். ராமசாமி மெல்லத் தம் புகாரைத் தொடங்கினார்.

''பொது விநியோகத் திட்டத்தின் மூலமா, ரேஷன் கடைகள் ஜனங்களுக்கு ரவை, மைதா, கோதுமை... இன்னும்...''

குறுக்கிட்ட அதிகாரி, ''இன்னும் நிறையப் பொருட்கள் பங்கீடு செய்யறோம்...'' என்றார்.

''அதெல்லாம் பயன்படுத்த முடியாத அளவுக்கு நாற்றம் எடுத்துக் கெட்டுப் போயிட்டுதுன்னு, கட்டாயப்படுத்தி, அதை யெல்லாம் பொது மக்கள் கிட்ட விற்க முயற்சி செய்யறது தப்பு இல்லையா?''

அதை மறுத்தார் அதிகாரி. ''கிடங்குகள்ல அந்தப் பொருள்கள் கெட்டுப்போகாம இருக்க, நாங்க உரிய முறையில நடவடிக்கை எடுத்துக்கிட்டுத்தான் இருக்கிறோம்...''

''அப்படியும் வீணாயிகிட்டா என்ன ஸார் பண்ணுவீங்க...?''

''அதையெல்லாம் ரேஷன் ஷாப்களுக்கு அனுப்ப மாட்டோம்... மக்களைச் சென்று அடையாமல் முடக்கிடுவோம்...'' என்றார் அதிகாரி.


உடனே ராமசாமி, தாம் ரேஷனில் வாங்கி வைத்திருந்த கோதுமையைப் பையுடன் அவரிடம் கொடுத்தார். கையில் அள்ளிப் பார்த்த அவர், ''என்ன ஸார் இது? ரொம்ப மோசமாக இருக்குதே...'' என்றார்.

''நான்கு மாதமாக அந்த ரேஷன்ஷாப்ல இந்த மாதிரிக் கோதுமை — ரவையைத்தான் ஸார் தர்றாங்க...'' என்றார் ராமசாமி.

அதிகாரி வியந்து போனார். ''வெரி ஸாரி, மிஸ்டர் ராமசாமி. நான் இந்த ஊருக்கு மாற்றி வந்து ஒரு வாரம் தான் ஆகுது... நீங்க வந்து நிலைமையைப் புரிய வைச்சீங்க... ரொம்ப நன்றி...''

''அது மட்டும் இல்லை ஸார்... பில் போட்ட பிறகு, சரக்கைப் பார்த்துட்டு, 'இது மோசமா இருக்குது; வேண்டாம் பில்லை கான்சல் பண்ணு'ன்னு, மாட்டேங்கிறார்... புழுத்து மக்கிக் கிடக்கிறதை நாங்க வாங்கிக்கிட்டுத்தான் ஆக வேண்டி இருக்குது...''

அதிகாரி எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டார். உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.



அந்த அதிகாரி நிருவாகத் திறமை மிக்கவர். அந்தப் பிரச்சினையை ஓரிரு வாரங்கள் ஆறப் போட்டு விட்டார்.

ஒருநாள் வழக்கம் போலக் கடை திறந்தது. கடை வாசலில் ஏகக் கூட்டம். ராமசாமியும் வந்திருந்தார்.

''என்ன குருசாமி ஸார்? கோதுமை உண்டா இல்லையா?'' என்றார் கூட்டத்தில் ஒருவர்.

''கடை ஆள் கருணாகரன் போயிருக்கிறாரு... போயி ரொம்ப நேரம் ஆயிட்டுது... மூட்டையோட வந்துட்டார்னு விற்பனை உண்டு...'' என்றார் குமாஸ்தா.

அதே நேரத்தில் கிழக்கோடியில் வண்டி வந்தது. அதைக் கவனித்த ராமசாமி, 'அதோ கோதுமை மூட்டை வந்துட்டுது ஸார்...'' என்றவாறு கூட்டத்தினரிடம் உரத்த குரலில் ''கோதுமை வேணும்ங்கிறவங்க வரிசையிலே வந்து நில்லுங்க'' என்றார்.

வண்டி வந்து வாசலில் நின்றது. வழக்கமாக வண்டியோடு வரும் கருணாகரனை அன்று காணவில்லை.

''வண்டிக்காரரே மூட்டையை உள்ளாறக் கொண்டு அடுக்குங்க...'' என்று உத்தரவிட்டார். குமாஸ்தா.

அதற்குள் ஒரு ஜீப் வந்து ஷாப் வாசலில் நின்றது. அதிகாரி இறங்கி உள்ளே போனார். வண்டிக்காரரை அழைத்து, வண்டியிலிருந்து மூட்டைகளை இறக்கவேண்டாம் என்று உத்தரவிட்டார்.

குருசாமியிடம் இனம் புரியாத ஒரு பதற்றம்.

''ஜீப்புக்குள்ள கருணாகரன் இருக்கிறாரு கூப்பிடுங்க..'' என்றார். அதிகாரி.

கருணாகரன் இறங்கி வந்தார்.

''மிஸ்டர் கருணாகரன்! கிடங்குலே நீங்க டெலிவரி எடுத்து ஏற்றிவிட்ட. அதே மூட்டைகள் தான் வண்டியில வந்து இறங்குதா... இல்லே... வேற ஏதாவது மூட்டையா'ன்னு பாருங்க...'' என்றார்.

மூட்டைகளைப் பரிசீலித்த கருணாகரன், ''ஸார் நான் ஏற்றிவிட்ட மூட்டை இல்லை ஸார் இவை...!'' என்றார்.

''எப்படிச் சொல்றீங்க...?''

''அந்த மூட்டைகள்ல நீங்க சோதனைக்காக ஒரு பச்சை நிறச் சணலைக் கட்டி வைத்தீங்க... இந்த மூட்டையில் அந்தச் சணல் இல்லை... அதனால, இதெல்லாம் வேறே மூட்டைகள் தான் ஸார்...'' என்றார்.

உடனே கூட்டத்தினரிடம் கசமுசா...

''மிஸ்டர் கருணாகரன் டெலிவரி எடுத்தப்ப நீங்க எழுதிக் கொடுத்த வாக்கு மூலம் இதோ இருக்குது... அதுலயே நீங்க, இப்ப இங்க நடந்ததையும் எழுதிக் கையொப்பம் இட்டுக் கொடுங்க...'' என்று, அந்தக் காகிதத்தைக் கருணாகரனிடம் கொடுத்தார் அதிகாரி.

''என்னய்யா, குருசாமி? இதுக்கு நீங்க என்ன பதில் சொல்லப் போறீங்க? இடையில மூட்டைகள் எப்படி மாறின?'' என்று வினவினார், அதிகாரி.

குருசாமி, வசமாக மாட்டிக் கொண்டு விட்டதை உணர்ந்தார். அவர் மூளை பரபரத்தது. எப்படித் தப்பிப்பது என்று திட்டம் தீட்டியது.

''ஸார்... இதெல்லாம் ஸார்..... எனக்கு...'' என்று திக்கித் திணறினார்.

''வண்டிக்காரரே என்கிட்ட என்ன எழுதிக் கொடுத்தீங்களோ அதைஅப்படியே சொல்லுங்க...'' என்றார் அதிகாரி.

''சொல்றேன் ஐயா! கிடங்குல மூட்டையை ஏத்திக்கிட்டு, ராஜபாட்டையோட நேரா கிழக்கா வராம, சந்து பொந்து வழியாச் சுத்திக்கிட்டுக் கிழக்கால வருவேன் ஐயா...''

''இப்படி நீங்களா செய்யறீங்களா, இல்ல...''

''குருசாமி ஸார் தான் ஐயா இப்படிச் செய்யச் சொன்னாரு. இதற்காக எனக்கு மூட்டைக்கு ஒரு ரூபாய் கூடப் போட்டுக் கொடுப்பாரு. ஐயா ''

''ம்... சரி மேலே சொல்லுங்க...''

''அந்த வழியில தான் ஐயா, நீங்க என்னைக் கையும் களவுமாப் பிடிச்சுட்ட மளிகைக்கடை மாரிசாமியின் கிடங்கு... நான் ஏத்திக்கிட்டு வர்ற மூட்டையை அங்கே

தமிழரே !

உண்மையில் தமிழ்நாட்டின் கிழக் கரையைச் சேர்ந்த தம்பி முதலியார் என்பவரின் கொள்ளுப் பேரன்தான் இப்போதைய இலங்கை அதிபர் ஜே. ஆர். ஜெயவர்த்தன. 19-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஜெயவர்த்தனவின் கொள்ளுத் தாத்தா தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குக் குடியேறி அங்கே டச்சுக்காரர்களுக்கு வரி வசூலித்துக் கொடுக்கும் தண்டல்காரராக வேலை பார்த்தாராம். பிறகு, இவர்கள் 'ஜெயவர்த்தன' என்கிற குடும்பத்தில் பெண் எடுத்து திருமணம் செய்து கொண்டதால் ''ஜெயவர்த்தன'' என்பதே இவர்களின் குடும்பப் பெயராகவும் மாறிவிட்டது. இது 1833-ம் ஆண்டு இலங்கை அரசு கெஜட்டில் உள்ளது என்கிறார் தமிழ் ஈழ விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. எம். கே. ஈழவேந்தன்.

தகவல்: பி. எஸ். கே.
ஆதாரம்: தினமலர்.



இறக்கிப் போட்டுடுவேனுங்க. பதிலுக்கு அங்கே தயாரா இருக்கிற பூச்சி பிடித்துப் புழுத்துப் போன மூட்டைகளை ஏத்திக்கிட்டுக் கிழக்கால இங்க ரேஷன் கடைக்கு ஓட்டிக்கிட்டு வந்துடுவேன், ஐயா! இதுக்குத் தனியான கூலி கிடைக்கும் ஐயா!'' என்றான், அந்த வண்டிக்காரன்.

''இதையெல்லாம் நீயாகச் சொல்றேன்னு குருசாமி சொல்றாரு... அதை நான் நம்பறேன்... நீ என்ன சொல்றே...?'' என்றார் அதிகாரி.

''அது எப்படிங்கய்யா...? கிழக்கால நான் வண்டி ஓட்டிக்கிட்டு வந்தப்ப, உங்க ஜீப் வந்து நின்ன உடனேயாவது, அவரு என்னை, 'இந்த மாதிரி — ஏய்யா கிழக்கால வர்றேன்னு' கேட்டிருக்கலாமே... ஆனால் கேட்கல்லீங்களே... அவ்வளவு ஏன்ங்க? கடை ஆள் கருணாகரனைக் கேட்டுப்பாருங்களேன், அவருதானே, இந்த மாதிரி குருசாமி செய்யச் சொன்னாருன்னு என்கிட்ட அடிக்கடி சொல்வாரு...'' என்றார், வண்டிக்காரர்.

அதற்குள் கருணாகரன் முன் வந்து, ''வண்டிக்காரர் சொல்றதுஎல்லாம் உண்மை ஸார்...'' என்றார்.

இனி தாம் தப்ப முடியாது என்ற நிலைமை வந்து விட்டதைப் புரிந்துகொண்டு விட்ட குருசாமி, ''இந்த ஒரு தடவை மட்டும் வந்து... தெரியாம... வந்து...'' என்று பிதற்றத் தொடங்கி விட்டார்.

''என்னய்யா இது? ஆறேழு மாதங்களாகவே இந்த ரேஷன் ஷாப்புல புழுத்துப் போன சாமான்களைத் தானே விற்கிறீங்களாம்... சர்க்கார்ல எடுக்கிற நல்ல சரக்குகளை மளிகைக் கடை மாரிசாமி கிட்ட அதிக விலைக்குக் கொடுத்து விட்டு, அவர் கிட்டப் புழுவும் பூச்சியுமாகி வீணாகிக் கிடக்கிற சரக்கைக் குறைந்த விலைக்கு வாங்கிட்டு வந்து, இங்கே மக்களுக்குப் போட்டு அவங்களை ஏமாத்திக்கிட்டு இருக்கீங்க... இது தானே உண்மை?'' என்று வினவினார் அதிகாரி.

/''ஸார்... நான் வந்து...'' என்று உளறத் தொடங்கினார்.

''வண்டிக்காரரே!'' என்று அழைத்த அதிகாரி, ''மூட்டைகளை இறக்காம, வண்டியைத் திருப்பி ஓட்டிக்கிட்டு, அந்த மளிகை மாரிசாமியுடைய கிடங்குல போட்டுட்டு, அங்க அரசாங்க கிடங்குலேயிருந்து கொண்டு போய்ப் போட்டிருக்கிற மூட்டைகளை ஏத்திக்கிட்டு வாங்க'' என்றார்.

வண்டி திரும்பிப் போகத் தொடங்கியது.

''டிரைவர் நீங்களும் ஜீப்பை எடுத்துக்கிட்டு வண்டி பின்னால போங்க... திரும்பி வரும்போது, அந்த மளிகை மாரிசாமியையும் ஜீப்புல ஏத்திக்கிட்டு வாங்க...'' என்றார் அதிகாரி.

ஜீப் கிளம்பியது.

''அப்படியே... வரும் போது நான் சொன்னேன் பாருங்க... அந்த ரெண்டு பேரையும் அழைச்சுக்கிட்டு வாங்க...'' என்று உத்தரவிட்டார்.



போலீஸ் காரரை மயக்கிய கண்கள்!

1923—ம் ஆண்டில், நாபா சமஸ்தானத்துக்குள் தடை உத்தரவை மீறி நுழைந்ததற்காக நேரு கைது செய்யப்பட்டார். அவரைக் கைது செய்த போலீஸ்காரரே அவரது முகத்தோற்றத்தில் மெய்மறந்து போலீஸ் குறிப்புப் புத்தகத்திலேயே அவரது கண்களைப் பற்றி வர்ணித்து எழுதி விட்டார்.

பாரசீக மொழியில் அழகிய பெண்களின் கண்களை 'சஷ்ம்—அ—ஆஹமி' என்று கவிகள் வர்ணிப்பது வழக்கம். நேருஜியின் அந்தக் கண்களை வர்ணிக்கும்போது போலீஸ்காரர் அதே சொற்களைத்தான் பயன்படுத்தியிருக்கிறார். மேற்படி போலீஸ் குறிப்பு, தற்போது பஞ்சாப் மியூசியத்தில் காப்பாற்றப் பட்டு வருகிறது.

—திருச்செங்கோடு, ப. கந்தசாமி.

குருசாமிக்குப் பெருத்த அவமானமாகி விட்டது.

அதிகாரி பொது மக்களிடம் சொன்னார்.

''இனிமேல் உங்களுக்கு எல்லாப் பண்டமும் எந்தப் பழுதும் இல்லாம கிடைக்கும். இன்னும் கொஞ்ச நாழியில, பூச்சி புழு இல்லாத கோதுமையும், ரவையும் வந்துடும்... நான் சொல்றேன்...'' என்றார்.

அதற்குள் ஜீப் திரும்பி வந்துவிட்டது.

பொது மக்களில் இருவரை அழைத்த அதிகாரி, குருசாமி எழுதிக் கொடுத்த ஸ்டேட்மெண்டில் சாட்சிக் கையொப்பம் வாங்கிக் கொண்டார். அவ்விருவரில் ஒருவர் ராமசாமி

ஜீப்பில் அழைத்து வரப்பட்ட இருவரும் வேறு யாரும் அல்ல, பக்கத்து வார்டில் உள்ள ரேஷன் ஷாப்பின் பொறுப்பாளர்கள் தான். குருசாமியை அழைத்து ஷாப்பின் இருப்புக்களை ஒப்படைக்கச் சொன்னார் அதிகாரி. குருசாமியையும், கருணாகரனையும் தற்காலிகப் பணிநீக்கம் செய்தார்.

''ஸார், ஸார்!'' என்று கெஞ்சினார்கள்.

''பில் போட்டாச்சு, சரக்கை வாபஸ் பெற முடியாது!'' என்றார், அதிகாரி.

சுறு சுறுப்புக்கு ஒரு பாலையா

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இரணியல் அருகே, திங்கள் சந்தை எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டு, கடந்த 25 ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு... இம்மாவட்ட மக்களுக்குத் தொண்டாற்றி வரும் திரு. ஆ. பாலையா அவர்கள் எங்கள் தொகுதி வேட்பாளராக நின்று... வெற்றி பெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

48 வயதாகும் இவர், இன்னும் ஓர் இளைஞனாகவே சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார். தம் தொகுதி மக்களுக்கு இன்னும் என்னென்ன வசதிகளைச் செய்து தரலாம் என்கிற ஓர் ஆர்வம் அவர் கண்களில் இப்போதே பளிச்சிடுகிறது.

இவர், 1962 முதல் 1967 வரை தலாக்குளம் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் பொறுப்பிலும்; 1967 முதல் 1971 வரை குருந்தங்கோடு பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். அதன் பின் சட்டமன்றத் தேர்தல்களில் ஸ்தாபன காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட போது வெற்றிகளையும் இ. காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட போது தோல்விகளையும் கண்டாலும் இரண்டையும் சமமாகப் பாவிக்கும் மனப்பக்குவம் கொண்டிருக்கிறார். குமரி மாவட்ட இ. கா. தலைவராகத் தற்போது பணியாற்றி வருகிறார்!

இவர் முயற்சியால் ஏற்பட்ட நன்மைகள்:

● திங்கள் சந்தையில் காமராஜ் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, கட்டபொம்மன் பேருந்து பணிமனை (தற்போது நேசமணி பேருந்து பணிமனை) இங்கு நிறுவப்பட்டது! இதனால் திங்கள் சந்தை தொழில் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

● வள்ளியாற்றுப் பாலம் (பள்ளம் பாலம்) கட்டப்பட்டது.

● மக்களுக்கு குடிதண்ணீர் வசதிகளும், சாலை வசதிகளும் அமைக்கப்பட்டு... தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்ட போதும் மக்கள் துன்பம் கொள்ளாமல், கஷ்டப்படாமல் வாழ்ந்து வருகின்றனர்.

● இவர் தலக்குளம் — இரணியல் கூட்டுறவு விவசாய வங்கியில் 15 ஆண்டுகளாகத் தலைவர் பொறுப்பேற்றிருக்க போது, மக்கள் முன்னேற்றத்துக்காகக் கடனுதவி அளித்தார்.

● பல ஆண்டுகளாக குளச்சலில் உள்ள அரசு மருத்துவமனை விஸ்தரிக்கப்படாமல்... வசதியில்லாமல் இருந்த நிலையை மாற்றி... கூடுதல் படுக்கை வசதிகளும், அதிகமான மருத்துவர்களையும், புதிய கட்டிடங்களையும் நிறுவுவதற்காக பாடுபட்டு... அதில் வெற்றியும் கண்டார்.

● குமரி மாவட்டத்திலுள்ள ஒரே இயற்கை துறைமுகம், குளச்சல் துறைமுகமாகும். குளச்சலுக்கு அருகிலுள்ள மணவாளக் குறிச்சி மணலாலையில் (Indian Rare Earths Ltd.,) பிரித்தெடுக்கப்படும் உலோக மணல், இத்துறைமுகம் வழியாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. ஆனால், இத்துறைமுகம் இன்னும் விரிவுபடுத்தப் படாததால்... உலோக மணல், கட்டுமரம் மூலமும் சிறுசிறு படகு மூலமும் துறைமுகத்திலிருந்து... கப்பலுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது... இதனால்... கால விரயமும் பண விரயமும் அதிகம் ஏற்படுகிறது. குளச்சல் துறைமுகம் விரிவுபடுத்தப்பட்டால் நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடி போன்று குமரி மாவட்டத்திற்குக் குளச்சல் துறைமுகம் அமையும். இத்துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்காக ஆ. பாலையா அதிக முயற்சி எடுத்துள்ளார். அம்முயற்சியில் அவர் வெற்றியும் காண்பார் என்று உறுதியாக நம்புகிறேன்.

● குமரி மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த 'கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்', பெயர் மாற்றம் செய்யப்பட்ட போது... அதற்கு 'நேசமணி' யின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று... சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி... அதில் வெற்றியும் கண்டார்!

● திங்கள் சந்தையில் இயங்கி வரும் 'நேசமணி பேருந்து பணிமனையில்' இடவசதியில்லாததால், குளச்சலிலும் ஒரு பணிமனை தொடங்கலாமென்றும், அதனால், குளச்சலும் வியாபாரத்தில் ஒரு நல்ல முன்னேற்றம் காணமுடியும் என்றும் நினைத்து...அதற்குரிய முயற்சியில் தற்போது உழைத்து வருகிறார்..

இவரே எங்கள் தொகுதியில், வருகிற தேர்தலில் போட்டியிட்டு... வெற்றி பெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

குளச்சல். எம். எம். இப்ராஹிம்.

நான் விரும்பும் வேட்பாளர்





நான் விரும்பும் வேட்பாளர்

கூப்பிட்டு இராஜாஜி மருத்துவமனையைச் சேர்ந்த உயர் அலுவலர்க்கு ஒரு கடிதம் எழுதச் சொல்லிக் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கிறார். நோயாளியைஅழைத்து வந்தவர்களை 'இந்த நிலையில் இருப்பவரைக் கஷ்டப்படுத்தி ஏன் கூட்டி வர வேண்டும்' என்று கடிந்து கொள்கிறார்.

அடுத்து வருகிறவர்... அட்மிஷன்... சிபாரிசுக்காக... 'மதிப்பெண் எவ்வளவு?' எனக் கேட்கிறார். குறைந்த மதிப்பெண்களைக் கேட்டதும், 'இந்த மார்க்கிற்கு நான் நிச்சயம் சிபாரிசு செய்ய முடியாது... கொஞ்சமாவது மனசாட்சி வேண்டாமா.... போங்கள்' என விரட்டி விடுகிறார்.

அடுத்தாற்போல மாணவர் கூட்டம் வருகிறது. தலைமை தாங்க அழைக்கின்றனர். டயரியைப் புரட்டிப் பார்த்துவிட்டு, அன்று ஏதும் நிகழ்ச்சி இருக்கிறதா எனப் பரிசீலனை செய்தபின் ஒப்புக் கொள்கிறார்.

விட்டுக் கொடுப்போமோ பட்டுராசனை!

மதுரையிலே, எங்கள் தொகுதியிலே தகுதி பெற்ற வேட்பாளர் ஒருவர் உண்டு. அவர் ஒரு கட்சியினைச் சார்ந்தவர்தான். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பதை வாழ்வில் கடைப்பிடிக்கும் இவர், அரசியலிலும் ஒரே தலைவனை உடையவர். அத்தலைவனிடம் அன்று — 1972—லிருந்து— இன்றுவரை மாறாத அன்புடன் அவரின் வழியில், ஆணைப்படி நடக்கின்றவர். இதுவே அவரது அரசியல் பின்னணி. ஆனால் இதற்கு அப்பாற்பட்டு, இன்று இம்மதுரை மாநகரத் தந்தையாய் விளங்கும் திரு. எம். **பட்டுராசன்** எங்கள் மனத்தில், நினைவுகளில் முன்னணியில் ஒரு சிறந்த வழக்கறிஞராய், ஆன்மீக வாதியாய், மக்களின் தொண்டனாய் நிற்கிறார். எனவேதான் இவரை வேட்பாளராக நிற்க வைத்து வெற்றிபெறச் செய்ய வேண்டும் — எங்களுக்கு அவரின் சேவை தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஒருநாள் — ஒரேயொரு தடவை — மாநகராட்சி அலுவலகத்திற்குச் சென்ற போது கண்ணுற்ற நிகழ்ச்சிகள்... நோய்வாய்ப்பட்ட ஒருவர் கைத்தாங்கலாக அழைத்துவரப்படுகிறார். அவருக்கு 'பெரியாஸ்பத்திரியில் இடம் கிடைக்கவில்லையாம்.' உடனேயே திரு. பட்டுராசன் தமது உதவியாளரைக்

இதற்கிடையே மாநகராட்சி அலுவலர், இன்ஸ்பெக்ஷன்... இவர் மாணவர்களோடு தானும் நின்று நகரைச் சுத்தி செய்தவர், அது விளம்பரத்துக்காக அல்ல.

மதுரை நகரை, அழகுபடுத்த, மரங்கள் நடுவதில் தீவிரம் காட்டுகிறார். தனது நண்பர்களிடமும் இதையே பேசுகிறார். பல பல சேவை ஸ்தாபனங்களையும், செல்வந்தர்களையும் இத்திட்டத்திற்கு ஒத்துழைப்புத் தரும்படி கோருகிறார்.

தெருத் தெருவாக நடந்து திரிந்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றைத் தீர்த்த முதல் மேயர் இவரே. நற்பண்புகளோடு, பிறருக்கு உதவுகின்ற குணம் இயற்கையிலேயே இவருக்கு அமைந்திருப்பது மதுரை மக்களுக்கோர் வரப்பிரசாதம்.

தற்சமயம் மதுரையில் மேயராக இருப்பதினால் இவர் மக்களுக்கு உரிமையுடன் தொண்டாற்ற முடிகிறது. மதுரையிலே குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டபோது இவரும், இவரது துணைவியாரும் தெருக்களில் நின்று கூட்டத்தினரை ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் வேண்டிய அளவு குடிநீர் கிடைக்கச் செய்தனர். இவரது எளிமைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

மதுரை. ஜி. ஆண்ட்ரு தேவதாஸ்

"கல்கி"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ. 78—00
ஆறு மாதச் சந்தா ரூ. 39—00

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா ரூ. 190/-
ஆறு மாதச் சந்தா ரூ. 95/-

"மங்கையர் மலர்"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ. 24/-
ஆறு மாதச் சந்தா ரூ. 12/-

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா ரூ. 48/-
ஆறு மாதச் சந்தா ரூ. 24/-

"கோகுலம்"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ. 24/-
ஆறு மாதச் சந்தா ரூ. 12/-

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா ரூ. 70/-
ஆறு மாதச் சந்தா ரூ. 35/-

சந்தா தொகையை M.O. அல்லது I.P.O. அல்லது டிமாண்டு டிராப்டு மூலம் அனுப்ப வேண்டும்.

மானேஜர் ✱ கல்கி ✱ சென்னை - 600032

வேதாளமும் ஜெயமன்மதனும்



''எத்தனை தடவை சூடு பட்டாலும் புத்தி வராத உங்களைப் பார்க்கையில் பரிதாபமாக இருக்கிறது. சரி, இந்தத் தீபாவளிக்கு வெளியாகும் அத்தனை படங்களையும் பாருங்கள். உங்கள் கருத்துகளையும் கூறுங்கள். ஆனால் கடைசியில் நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் தெரிந்திருந்தும் கூறவிட்டால் உங்கள் தலை வெடித்துச் சுக்கு நூறாகி விடும்'' என்றது, பக்கத்து இருக்கையில் வந்து அமர்ந்த வேதாளம்.

குளிர் வசதி தியேட்டரில் ஜெயமன்மதன் உதறலுடன் வியர்க்க விறுவிறுக்கப் பார்த்த முதல் படம்:

ஓசை

இப்போதெல்லாம் பெரிய நடிகர்களை விட குட்டி (நான்கு அல்லது ஐந்து வயது இருக்குமா அந்தப் பாப்பாவுக்கு?) கலைஞர்களே சக்கைப் போடு போட ஆரம்பித்து விட்டார்கள். அதனால் முதலில் ஆஷா. பிறந்தநாள் சீனில், நாயரிடம் மலையாளத்தில் ஸம்ஸாரிப்பதும், ரகுமான்கானிடம் ஹிந்தியில் 'பாத்சீத்' பண்ணுவதும் (அரே, அல்லா கே பச்சே) பாக உத்தி என்று சுந்தரத் தெலுங்கில் கொட்டமடிப்பதும் வரப் போகிற சீனுக்கு என்ன அழுத்தமான அஸ்திவாரம். அதை அந்தக் குட்டி தேவதை பண்ணியிருக்கும் விதம் தான் என்ன அமர்க்களம்!

ப்ளீஸ், இந்தக் குழந்தைக்காக ஒரு தடவை படத்தைப் பாருங்களேன்.

ஒரு அழகான காவியச் சிறுகதை...படத்தின் மையக்கதை. என்ன கதை? சொன்னால் சுவாரஸ்யம் போய் விடும். வேண்டாமே!

பெரிய ஆகிருதியுடன் வந்து ஆட்களைத் துவம்சம் பண்ணி, கீழே விழுந்தவர்கள் மேலேயே விழுந்து ரோடு ரோலர் மாதிரி உருளும் ரகுமான்கான் பாலாஜியின் வருகை பலே ஜோர். பெருந்தன்மையான காரெக்டரில் நிறைவாகப் பண்ணியிருக்கிறார்.

மோகன் ஹீரோ. இந்தப் பக்கம் மனைவி செத்துப் போய், இந்தப் பக்கம் குழந்தை 'எனக்குப் பேச வரல்லே' என்று கண்களில் சமுத்திரங்களைத் தேக்கிக் கொண்டு சைகை செய்ய, இவர் தாங்க முடியாமல் திணறி அழுது வெடிக்கும் காட்சி;

கடைசியில் ஹாஸ்பிடலில் சந்தோஷத் துடிப்போடு ரகுமான்கான், நர்ஸ், அம்மா, டாக்டர், ராணி என்று ஒவ்வொரு வரிடமும் ஓடி ஓடித் தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் காட்சி;—மோகன் இந்த இரண்டு காட்சிகளில் அவ்வளவு சின்ஸியராகப் பண்ணியிருப்பது, படம் நெடுக அவர் அப்படித்தான் பண்ணியிருக்கிறார் என்ற பிரமையை ஏற்படுத்தி இருக்கிறது.

சாராயக்கடை மனோரமா, கம்மா ஸான்னு மாதிரி, படத்திற்கு அனாவசிய காரெக்டர் என்றாலும், மார்க்கண்டேயனி மனோரமாவால் அவசிய காரெக்டர் என்றாகி விடுகிறது.

அந்தப் பொடிசைப் பயன்படுத்திக் கே. விஜயன் பல ராஜ காட்சிகளைக் கொடுக்காமல் கொடுத்திருக்கிறார்.

'சரிதான் போடா பொறுக்கி' என்று 'இரவு ராணி' ராதிகா வரவேற்று, உதை உதை என்று உதைத்து அனுப்புவது 'க்ளாஸ்.'

நளினி வருகிறார்; ரயிலில் அகப்பட்டு ஆட்டம் க்ளோஸாகிறார். அவ்வளவுதான்.

'ஒரு பாடல் தமிழிலிருந்து இறக்குமதி ஆன பாட்டான போதிலும் சூப்பர்ப். ஒற்றை வயலின் இழைய இழைய அந்தப் பாட்டு ரிபீட் ஆகிற போதும் சரி, அந்த விச்சுவேஷனும் சரி மனத்தைஅள்ளுகின்றன.

அனுராதா டான்ஸ்"ம் (வேண்ட்!) மாணவர்கள் கூத்து, நளினி மோகன் காதல் என்கிற இழுபறி விவகாரங்களும், படத்திற்குத் திருஷ்டிப் பொட்டுகள்.

அவற்றை மறந்தால் இது 'ஓசை' இல்லை— இசை.'

* * *

பக்கத்து இருக்கை வேதாளம் என்ன ஆயிற்று?

கப்—சிப். அதை அடுத்த வாரம் பார்ப்போமே!

ஓசை

நேரம் நல்ல நேரம்

ரம்யமான ரமணன்

ஒவ்வொரு வியாழனன்றும் இரவு 9.40 மணிக்கு விவிதபாரதியில் 'மீண்டும் சந்திப்போம்' என்று குரல் கொடுத்து மனம் கவருகிறாரே, திரு எஸ். வி. ரமணன்... சந்திப்போமா அவரை...?

● விளம்பரப் படம் தயாரிப்பது பற்றி...

இதுவரை 500-க்கும் அதிகமான விளம்பரப் படங்களை எடுத்துள்ளேன். முதலில் விளம்பரப்படுத்தப்படும் பொருள் யாருக்குப் பயன்படும் என்பதைத் தெரிந்து கொண்டு அந்த அடிப்படையில் ஸ்கிரிப்டைத் தயாரிக்க வேண்டும். இரண்டு, மூன்று நிமிடங்களிலேயே (சில சமயங்களில் ஒரு நிமிடத்தில் கூட) நாம் என்ன சொல்ல நினைக்கிறோமோ அதை சுவைபடச் சொல்லத் தெரிய வேண்டும். பார்ப்பவர்கள் மனத்தில் நிற்கும்படியும் தயாரிக்க வேண்டும். நான் மிகவும் கஷ்டப்பட்டு எடுத்த, மறக்க முடியாத படம் கேரளாவில் உள்ள தேயிலைத் தோட்டங்களைப் பற்றிய டாகுமெண்டரி. இந்தப் படம் எடுக்கும் போது, ஹெலிகாப்டரில் பறந்து, பின்னர், ஹெலிகாப்டர் அடியில் உட்கார்ந்து கொண்டு 'ஷூட்' பண்ண வேண்டியிருந்தது. 'டீ பிஸ்கட்' பற்றிய விளம்பரப் படம் 1977 உலக படவிழாவில் பரிசு பெற்றுள்ளது.

● சமுதாய விழிப்புணர்ச்சி ஊட்டக்கூடிய சில டாகுமெண்டரிகள் தயாரித்திருப்பது பற்றி...

'கைகள்' (The Hands) என்ற தலைப்பில் எடுக்கப்பட்ட டாகுமெண்டரி படம் லஞ்சம் வாங்குவதைப் பற்றியது. 'பல நல்ல வேலைகளைச் செய்யும் கைகளைக் கறைபடுத்திக் கொள்ளாதீர்கள்' என்ற அறிவுரையின் அடிப்படையில் எடுத்த இந்தப் படம் சர்வதேச அளவில் பரிசு பெற்றது. இதே போல் சாலைப் போக்குவரத்து விதிகளைப் பற்றிய படம், சென்னையில் நடந்த போலீஸ் விளையாட்டுக்களைப் பற்றிய படம் ஆகியவை மறக்க முடியாதவை.

● அப்பாவிடமிருந்து (பிரபல டைரக்டர் கே. சுப்பிரமணியம்) கற்றுக் கொண்டது...

'சொந்தக் காலில் நிற்க வேண்டும்' என்பது ஒன்று. படத்துறை என்று புகுந்தால், அதில் எல்லா பிரிவுகளையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பது மற்றொன்று. ஸ்கிரிப்ட் தயார் செய்வது முதல், 'ஷூட்' செய்வது, இசை அமைப்பது, 'எடிட்' செய்வது என்று ஒவ்வொரு துறையிலும் அனுபவம் பெற்றிருக்கிறேன். எனக்குள் ஒரு யூனிட்டே இருக்கிறது என்றால் அது அப்பா காட்டிய வழியே.

● சூரிய பகவானுக்காக ஒரு சன்னதி கட்டும் திருப்பணியில் இறங்கியிருப்பது பற்றி...

''ஒரிஸ்ஸாவில் உள்ள கோனாரக் சூரியன் கோவில் உலகப் பிரசித்தி பெற்றது. தமிழ்நாட்டில் கும்பகோணத்துக்கு அருகில் சூரியனுக்கு ஒரு கோவில் இருக்கிறது. எல்லா ஜீவராசிகளுக்கும் சூரிய ஒளி அவசியமான ஒன்று. சூரியனை வணங்குபவர்களுக்கு வாழ்க்கையில் எந்தக் குறையும் வராது. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் கூட இயற்கை வழிபாடு என்ற முறையில் சூரியனை வணங்கலாம். அதில் அர்த்தமுண்டு. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த சூரிய பகவானுக்கு, சென்னை அடையாறில் கட்டப்பட்டுள்ள கணபதிய பஞ்சயதன கோவில் (மத்திய கைலாஷ்) வளாகத்தில், ஒரு சன்னதி கட்டப்பட இருக்கிறது. குதிரைகள் இழுக்கும் ரதம் வடிவில் அமையும். காஞ்சிப் பெரியவர் ஆசியுடன் இந்தத் திருப்பணியில் இறங்கியிருக்கிறேன். இந்தத் திருப்பணியை நானே நிறைவேற்றும் அளவுக்கு என்னிடம் வசதி இல்லை. நண்பர்களையும் ஆத்திக அன்பர்களையும் நம்பியே இந்தத் திருப்பணியில் இறங்கியிருக்கிறேன்.

● ஒரு தமிழ்த் திரைப்படம் எடுத்திருப்பது பற்றி...

''உருவங்கள் மாறலாம்' என்ற திரைப் படத்தை நானும் என் நண்பர்கள் இருவரும் சேர்ந்து கூட்டாக எடுத்தோம். வியாபார ரீதியில் நன்றாகப் போயிற்று. 'நமக்குமேல் ஒரு சக்தி இருக்கிறது; நாம் வழிபடும் உருவங்கள் பலவாக இருந்தாலும் 'அந்த சக்தி ஒன்றுதான்' என்பது படத்தின் மையக் கருத்து. சில மகான்களையும் சேர்த்துக் கொடுத்து இருந்தோம்.

● 'நேரம் நல்ல நேர'த்தைப்பற்றி...

'எல்லாவற்றையும் ஒரு ஈடுபாடுடன் தான் நான் செய்கிறேன் என்றாலும், இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தமட்டில், ஒரு உணர்ச்சிபூர்வமான ஈடுபாட்டோடு செய்கிறேன். எனது தந்தை அவர்கள் 'கல்கி'யின் 'தியாகபூமி' கதையை (செயிட்டியில் படம் வெளியான போது, கூட்டம் கேட்டை உடைத்துத் தள்ளி விட்டதாம்!) படமாக வெளியிட்டுப் பெருமை அடைந்தார். அவர் பெயரைத் தாங்கி, வெளிவரும் பத்திரிகைக்கு, இந்த நிகழ்ச்சியைச் செய்து தருவது எனக்கு அளவிட முடியாத மகிழ்ச்சியைத் தருகிறது. என்னைப் பொறுத்தவரை 'ரொம்ப நல்ல நேரம்.'


-ப்ரியன்

வண்ணப்படம்: உத்ரா

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543)

P S. Mani

Editor: K. Rajendran



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

